பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 23 வியாழக்கிழமை (08.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 355

# இராணுவத்தை மேலும் பலப்படுத்துவேன்!

## பட்ஜெட் விவாதத்தில் ஜனாதிபதி உறுதியளிப்பு

(கொழும்பு)
தேசிய பாதுகாப்பு தொடர்பாக எத்தகைய விமர்சனங்கள் எழுந்தாலும் இராணுவத்தை மேலும் பலப்படுத்துவோமே தவிர ஒரு போதும் பலவீனப்படுத்தப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



### வித்தியா கொலை
## 10ஆவது நபரின் மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)
புங்குடுதீவு வித்தியா கொலை வழக்கின் 10 ஆவது சந்தேக நபரின் விளக்கமறியலை மேலும் மூன்று மாத காலத்துக்கு நீடிக்க யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியா கொலை வழக்கில் இதுவரை 12 சந்தேக நபர்கள் கைது 23ஆம் பக்கம் பார்க்க....

## நியதிச் சட்டங்கள்; சபை அங்கீகாரம்

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் மூன்று நியதி சட்டங்களுக்கான முதலாம் வாசிப்பும், இரண்டு நியதி சட்டங்களின் இரண்டாம் மூன்றாம் வாசிப்பும் அதற்கான அங்கீகாரம் வழுங்கலும் இடம்பெற்றுள்ளது.

வடக்கு மாகாண சபையின் அறுபத்து ஏழாவது அமர்வு நேற்றையதினம் அவைத்தலைவர் சீ.வ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. 23ஆம் பக்கம் பார்க்க....

## பாக்.விமானம் கோரவிபத்து
### 47 பயணிகள் பலி

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானில் பயணிகள் விமானம் விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 47 பேரும் பலியானதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் சர்வதேச விமான நிறுவனத்தின் பணிகள் விமானம் ஒன்று நேற்று 23ஆம் பக்கம் பார்க்க....

### மாணவர்களின் உயிரிழப்பு நிலைமையின் போது
## இராணுவத்தை களமிறக்கும் முயற்சியை தடுத்தேன் - ரணில்



(கொழும்பு)
யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி உயிரிழந்த சம்பவத்தை அடுத்து அங்கு ஏற்பட்டிருந்த கலகத்தை தடுப்பதற்காக இராணுவத்தை அங்கு குவிப்பதற்கு முன் 23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கில் இராணுவத்தை குறைக்க முடியாது!
### அமைச்சர் சமரசிங்க விடாப்பிடி

(கொழும்பு)
இறுதி யுத்தத்தின் போது சரணடைந்த முன்னாள் போராளிகளுக்கு முறையான புனர்வாழ்வு அளிக்கப்படாமல் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் வடக்கில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்றுவதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று முன்னாள் மனித உரிமைகள் அமைச்சரும், நல்லாட்சி அரசாங்கத்தின் திறன் விருத்தி 24ஆம் பக்கம் பார்க்க....

## முள்ளிவாய்க்காலில் புதைக்கப்பட்ட இரு இரும்பு பெட்டகங்கள் மீட்பு

(குருமன்காடு)
முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியில் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு சொந்தமான பொதுச்சந்தை வளாகத்தில் இறுதி யுத்த காலப்பகுதியில் புதைக்கப்பட்ட இரண்டு இரும்புப் பெட்டகங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவத்துள்ளனர். குறித்த சந்தை வளாகத்தில் நிர்மாணம் ஒன்றுக்காக பிரதேச சபையால் கிடங்கு வெட்டும் போது மேற்படி பெட்டகங்களை கண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ந்து பிரதேச சபையினர் முல்லைத்தீவு பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து நேற்றுப் பொலிஸார் நீதிமன்ற அனுமதியுடன் பிரதேச சபையினரின் உதவி 23ஆம் பக்கம் பார்க்க....

## குளத்து நீரில் மூழ்கி இரு சகோதரிகள் பலி

(பரந்தன்)
கிளிநொச்சி ஆனைவிழுந்தான் குளத்தில் நீராடச்சென்ற அறுவரில் சகோதரிகள் இருவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஆனைவிழுந்தான் பகுதியைச் சேர்ந்த ரகுநாதன் நிதர்சினி (வயது 17), ரகுநாதன் கவிப்பிரியா (வயது 18) ஆகிய சகோதரிகளே உயிரிழந்தவர்களாவார்.

தங்குமிடமொன்றிலிருந்து கிளிநொச்சி 23ஆம் பக்கம் பார்க்க....

### ஆயுத முனையில்
## பணம், நகை கொள்ளை

(சித்தன்கேணி)
வாள், கத்தி என்பவற்றுடன் வீட்டை உடைத்துக்கொண்டு உள் நுழைந்த மூன்று பேர் கொண்ட கொள்ளையர்கள் குழு, ஆயுத முனையின் பணம், நகை என்பவற்றை 23ஆம் பக்கம் பார்க்க....

### த.தே.கூ மீதான ஊர்காவற்றுறை தாக்குதல்
## மூவருக்கு இரட்டை மரண தண்டனை
## யாழ். மேல்நீதிமன்று அதிரடித் தீர்ப்பு

**"அப்பாவி ஆதரவாளர்களே மரணித்துள்ளனர்"**

(யாழ்ப்பாணம்)
ஊர்காவற்றுறை பகுதியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு உயிர்சேதம் விளைவித்த வழக்கின் குற்றவாளிகளாக இனம்காணப் பட்ட 3 எதிரிகளுக்கும் இரட்டை மரண தண்டனைவழங்கியதுடன்20ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனையும் வழங்கி 22ஆம் பக்கம் பார்க்க....

## புலிகளின் வைப்பகத்திலிருந்து மீட்கப்பட்ட தங்கம் எங்கே?
### நாடாளுமன்றில் ஜே.வி.பி. கேள்வி



(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் வைப்பகத்திலிருந்து மீட்கப்பட்ட தங்க நகைகளுக்கு என்ன நடந்தது என்று ஜேவிபி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கேள்வியெழுப்பியுள்ளார். 23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கருணா அம்மான் பிணையில் விடுவிப்பு



(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாண சிறப்புத் தளபதியாக இருந்த நிலையில் அந்த அமைப்பிலிருந்து விலகி அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலையாகிய நிலையில் பிணை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் அரசுக்கு சொந்தமான வாகனங்களை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டில் பொலிஸ் நிதிமோசடிப் பிரிவினால் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் விநாயகமூர்த்தி முரளிதரன் சார்பில் கடந்த திங்கட்கிழமை தாக்கல் செய்த பிணை மனுக்கோரிக்கை நிராகரிககப்பட்டிருந்த நிலையில் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (இ-7.10)


## கடை வாடகைக்கு

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்திக்கும் ரயில் கடவைக்கு இடையில் (சன்னதி முருகன் கடைக்கு அருகாமையில்) 2 கடைகள் வாடகைக்கு உண்டு.

T.P:-0772030309 (6868)

## உயர் கணக்கியல் கல்லூரி

H.A.C

சித்தன்கேணி

புலமைப்பரிசில் வகுப்பு

ஆசிரியர்:-P.கயிலவன்

ஆரம்பம்:-10.12.2016

சனி பி.ப. 4 மணி

- மாணவர்கள் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டது.
- மாதாந்த பரீட்சைகள் நடைபெறும்.

(இ-6612)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் அமலரட்ணம் முருகானந்தம் (செந்தில்)



வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
எங்களை வானுயர
பெயர் விளங்க வைத்த
எங்கள் அன்புத் தெய்வமே அம்மா
நீங்கள் இறைவனடி சேர்ந்து
ஓராண்டு கடந்து விட்டாலும்
நீங்கள் எப்பொழுதும்
எம்முடன் நிற்கின்றீர்கள்
உங்கள் ஆன்மாவின் சாந்திக்கு
எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னைமடியில்:-09.05.1953
ஆண்டவன் அடியில்:-08.12.2015

55/1 டேவிட் றோட், யாழ்ப்பாணம்.

தகவல் -குடும்பத்தினர். (சி-6611)

## மரண அறிவித்தல்



### திருமதி பவழம்மா சோமலிங்கம்

அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவழம்மா சோமலிங்கம் நேற்று அதிகாலை 2.00 மணியளவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறியத் தரப்படும்.

K. V. K. மில் ஒழுங்கை, உடுப்பிட்டி.

தகவல்:-குடும்பத்தினர் 0773998720 (சி-6608)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.
### வெளிவாரிப் பரீட்சைகள்

1. வணிக முதற் தேர்வு - 2014 (புதிய பாடத்திட்டம் - இறுதிச் சந்தர்ப்பம்)
2. வணிக இரண்டாம் தேர்வு - 2014 (புதிய பாடத்திட்டம்)
3. வணிக மூன்றாம் தேர்வு - 2014 (புதிய பாடத்திட்டம்)
4. வணிக நான்காம் தேர்வு - 2014 (புதிய பாடத்திட்டம்)
5. வணிக முதற் தேர்வு-2014 (பழைய பாடத்திட்டம்-மீள்பரீட்சை-இறுதிச் சந்தர்ப்பம்)
6. வணிக மாணி -பகுதி -I- 2014 (பழைய பாடத்திட்டம் - மீள் பரீட்சை)
7. வணிக மாணி -பகுதி - II-2014 (பழைய பாடத்திட்டம் - மீள் பரீட்சை)
8. வணிக மாணி- பகுதி -III - 2014 (பழைய பாடத்திட்டம் - மீள் பரீட்சை)

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிகவிரைவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா.300/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா.300/= க்கான காசுக் கட்டளை / தபாற் கட்டளையை சுய முகவரியிடப்பட்ட ரூபா.70/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன் இணைத்து, சிரேஷ்ட உதவிப் பதிவாளர், **திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு: அரையாண்டு பருவ அடிப்படையிலான கற்கைக்கால அளவுப் பெறுமதியிடப்பட்ட கற்கை அலகு முறைமை (Semester based course unit system and Grade Point Average evaluation) விரைவில் அறிமுகப்படுத்தப்பட இருப்பதால், ஏற்கனவே வணிக மாணிக் கற்கை நெறிக்கு பழைய மற்றும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பதிவுகளை மேற்கொண்டவர்கள், மேற்படி பரீட்சைகளுக்கு விண்ணப்பித்து, விரைவில் தங்கள் கற்கை நெறிகளை பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 06.01.2017 (வெள்ளிக்கிழமை) ஆகும். பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற அலுவலக தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்

பதிவாளர்
07.12.2016

(சி-6606)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் புவனேந்திரம்
(உரிமையாளர்-இந்திரா கபே நெல்லியடி)



நெல்லியடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் -புவனேந்திரம் அவர்கள் 07.12.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-சின்னம்மா தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான நடேசு-திலகவதி தம்பதியரின் மருமகனும், உதயமதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தர்மராசா மற்றும் இராசேந்திரம், தெய்வேந்திரம், மகேந்திரம் ஆகியோரின் சகோதரரும், ரகுநந்தன் (NSB-யாழ்ப்பாணம்), சாலினி (ஆசிரியை-யா/உடுத்துறை மகா வித்தியாலயம்), குகநந்தன் (லண்டன்), சிவநந்தன், கஸ்தூரி (யா/குடத்தனை GTMS-ஆசிரியை), கிருஷ்ணானந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்சினி (ஆசிரியை-யா/நெல்லியடி மத்திய கல்லூரி), ஸ்ரீ கிருஷ்ணன் (சமுர்த்தி முகாமையாளர்-அச்சுவேலி), டாக்டர் சத்தியமூர்த்தி (மாவட்ட வைத்தியசாலை-முல்லைத்தீவு) ஆகியோரின் அன்பு மாமனாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2016) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பகல் 12.00 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். அவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
நா.தெய்வேந்திரம் (சகோதரன்)
உரிமையாளர்-இந்திரா கபே நெல்லியடி
கணேசன் ஹாட்வெயார்-நெல்லியடி

முருகமூர்த்தி வீதி, நெல்லியடி. (சி-6609)

# ஜெயலலிதாவுக்கு வடக்கு சபையில் வீரவணக்கம்

மறைந்த தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மற்றும் கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ ஆகியோருக்கு வடக்கு மாகாண பேரவை செயலகத்தில் மலர் தூபி அஞ்சலி செலுத்தப்பட்டது. வடக்கு மாகாண சபையின் 67 ஆவது அமர்வு நேற்றைய தினம் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. அவை ஆரம்பமாகி இடைவேளையின் போதே இவ் அஞ்சலி இடம்பெற்றுள்ளது.




(படங்கள்:-உ. சாளின்)

மறைநத தமிழக முதலமைசசர செலவி ஜெயலலிதா மறறும கியூபாவின முனனாள ஜனாதிபதி பிடல காஸடரோ ஆகியோரின உருவபபடஙகள வைககபபடடு, எதிரககடசி, ஆளுஙகடசி உறுபபினரகள மலர தூபி முதலில அஞசலி செலுததினர. பினனர மௌன வணககமும நடைபெறறது. இநத நினைவு நிகழவை வடககு மாகாண சபையின உறுபபினர எம.கே.சிவா ஜிலிஙகம ஏறபாடு செயதிருநதமை குறிபபிடததககது. மேலும முதலவர ஜெயலலிதாவிறகு அஞசலி செலுததும வகையில உறுபபினர சிவாஜிலிஙகம சபைககு கறுப்பு சால்வையுடன் வருகை தந்திரு (இ-4)

## யுத்தத்தின் பின் இணைய எல்லைகளை பாதுகாப்பதே பாரிய பிரச்சினையாகும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

இலங்கையில் யுத்தம் நிறைவுற்றதன் பின்னர் இணைய எல்லைகளை பாதுகாப்பதே நாம் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினையாகும் என்று பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இவ்வகையான பயங்கர விளைவினை எதிர்நோக்கக் கூடிய எந்தவித பாதிப்புகள் மற்றும் அச்சுறுத்தல்களை குறைக்க அல்லது பாதுகாக்க கூடிய அறிவினை நாம் கொண்டுள்ளோம் என்று நேற்று முன்தினம் கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் இடம்பெற்ற பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு உரையாற்றிய போது தெரிவித்தார்.

இலங்கை மைக்ரோசொப்ட் மற்றும் லங்கா லொஜிஸ்டிக் கம்பனி ஏற்பாடு செய்த டிஜிற்றல் மாற்றத்தின் ஊடாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பு என்னும் பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டு பாதுகாப்பு செயலாளர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்றைய சூழலில் தகவல்களை பெற்றுக்கொள்ளல் உயிர் பாதுகாப்புக்கு மட்டுமல்லாமல் பல்வேறு அச்சுறுத்தல்களை கண்டறியத்தக்க வகையில் புலனாய்வு தகவல்களாக மாற்றம் பெறுவதற்கும் அவற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கும் முக்கிய அளவீடுகளாக அமைகின்றன.

தொழில்நுட்பத்துறையில் ஏற்பட்டு வரும் துரித மாற்றங்களின் காரணமாக ஏற்படும பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்பாக விரிவான விளக்கத்தை பெற்றிருத்தல் அவசியம் என்றும் சுட்டிக் காட்டினார்.

தகவல் தொழில்நுட்பப் போர் யுகத்தில் நாம் எமது சேவைகள், செயற்றிட்டங்கள் மற்றும் நடைமுறைகள் என்பனவற்றை புதுமையான தொழில்நுட்ப துறைக்குட்படுத்தல் அவசியமாகும் என்று தெரிவித்தார். இந்நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (இ-7-10)

## 4000 பௌத்த பிக்குகளை திரட்டி அரசியல் யாப்பு திருத்தங்களை தோற்கடிப்போம்

### இல்லையேல் இரத்த ஆறு ஓடும் பொதுபல சேனா எச்சரிக்கை

*(கொழும்பு)*

*அரசியலமைப்பில் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமலாக்குவதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். அவ்வாறு நடைபெற்றால் நாடு 5 மாநிலங்களாக பிரிந்துவிடும் என பொதுபல சேனாவின் செயலாளர் ஞானசார தேரர் எச்சரித்துள்ளார்.*

அத்துடன் 4000 பௌத்த குருமார்களை கொழும்பில் ஒன்றுகூட்டி அரசியல் யாப்பில் திருத்தங்களைத் தோற்கடிப்போம். எம்மை மீறி திருத்தங்கள் மேற்கொண்டால் நாட்டில் இரத்த ஆறு ஓடும் எனவும் தெரிவித்தார். பொதுபல சேனாவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7-10)

## சோபித தேரரின் மரணம் குறித்த விசாரணைகள் நிறைவு-பொலிஸ்

(கொழும்பு)

மறைந்த மாதுளுவாவே சோபித தேரரின் மரணம் சந்தேகத்திற்குரியது என முன்வைக்கப்பட்ட முறைப்பாடு குறித்த விசாரணைகளை நிறைவு செய்துள்ளதாக இரகசியப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

உடுவே தம்மாலோக தேரர் குறித்த முறைப்பாட்டினை முன்வைத்திருந்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் அனில் ஜெயசிங்கவின் தலைமையிலான குழுவினர், இது குறித்து விசாரணைகளை முன்னெடுத்ததுடன், மீண்டும் பிரேத பரிசோதனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை எனவும் நீதிமன்றத்தில் தகவலளித்தனர். (இ-7-10)


## சுதந்திரக்கட்சி பிளவுபடவில்லை கூறுகிறார் மகிந்த ராஜபக்ஷ

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பிளவுபடவில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து அமைச்சு பதவிகளை பெற்றுக்கொண்டால் கட்சியின் கொள்கைகள் எவ்வாறு காப்பற்றப்படும் எனவும் அவர் கேள்வி எழுப்பயுள்ளார்.

அமைச்சு பதவிகளைப் பெற்றவர்கள் ஐக்கிய தேசிய கட்சிக்கு காட்டிக்கொடுத்தால் எவ்வாறு கட்சியின் கொள்கைகளை காப்பற்ற முடியும் எனவும் வினவியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை பெற்று சுகபோகங்களை அனுபவிக்கும் அமைச்சர்கள் சிலர் கட்சியை பிரிப்பதாக தம்மீது குற்றஞ்சாட்டுவதாகவும் மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார். சகோதரரான பசில் ராஜ பக்ஷவிற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கு வாபஸ் பெறப்பட்டமை குறித்தும் ஊடகவியலாளர்கள் மகிந்த ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்பினர். (இ-7-10)



மறைந்த தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராமுக்கு யாழ். மக்கள் அஞ்சலி செலுத்துவதற்கான விசேட ஏற்பாடு ஒன்றை யாழ். இந்திய துணைத் தூதரகம் செய்துள்ளது. அந்தவகையில் யாழ்.மருதடி வீதியிலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் அனுதாபப் பகிர்வு புத்தகம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வடமாகாண முதலமைச்சர், வடமாகாண சபை அவைத் தலைவர், வட மாகாண அமைச்சர்கள், வடமாகாண சபை உறுப்பினர்கள், யாழ்.மாவட்ட அரச அதிபர், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர, ஆகியோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தியதுடன் அனுதாப பகிர்வினை குறிப்பேட்டில் பதிவு செய்திருந்தனர். அதனைத் தொடர்ந்து அரசியல் பிரமுகர்கள், உயர் அதிகாரிகள், சிவில் சமூக அமைப்பினர், பொதுமக்கள் எனப்பலர் அவரது உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி அப்புத்தகத்தில் தங்களது அனுதாபங்களை பதிவு செய்து வருகின்றனர். இன்றும் மக்கள் அஞ்சலி செலுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (படங்கள்: பொ.சோபிகா)

## ஜனாதிபதியின் அதிகாரங்களையும் கையிலெடுக்க அரசாங்கம் முயற்சி

அரசியலமைப்பு மேம்பாட்டு விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்திற்கு கூட்டு எதிர்க்கட்சி கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்படுமாயின் அதிகளவு அதிகாரங்களை கொண்ட அமைச்சு உருவாக்கப்படும் என கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான ஜி.எல். பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

முன்மொழியப்பட்ட சட்டமூலம் ஊடாக ஜனாதிபதி மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் அதிகாரங்களை தமது கையில் எடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்படுமானால் அரச நிறுவனங்களின் அதிகாரங்கள் குறைக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சட்டமூலத்திற்கு எதிராக தாம் நீதிமன்றத்தை நாடப் போவதாகவும் அரசியலமைப்பு மேம்பாட்டு விசேட ஏற்பாடுகள் சட்டமூலம், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஏழு நாட்களுக்குள் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## தாஜுடீனின் குடும்பத்தினர் ஆர்ப்பாட்டம்



முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகரவை கைதுசெய்யுமாறு கோரிக்கை விடுத்து படுகொலை செய்யப்பட்ட ரக்பி வீரர் வசீம் தாஜுடீனின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் இணைந்து, கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (இ-7-10)

# வல்லையில் வாகன விபத்து; கணவன் - மனைவி படுகாயம்



(கரணவாய்)


வடமராட்சி வல்லைப் பகுதியில் ஹன்ரர் - மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி நிலை குலைந்த மோட்டார் சைக்கிள் மீண்டும் முச்சக்கர வண்டி ஒன்றுடன் மோதி விபத்துக் குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பய ணித்த கணவன் - மனைவி படுகாய மடைந்துள்ளனர்.

நேற்று புதன்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெற்ற இவ்விபத்தில் வரணி வடக்கைச் சேர்ந்த தணிகாசலம் (வயது-68), அவரது மனைவியான தணி காசலம் சுகிலா (வயது - 60) ஆகியோரே படுகாயத்துடன் வைத்தியசாலையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அச்சுவேலியில் இருந்து வந்த ஹன் ரர் வாகனம் எதிரே வந்த மோட்டார் சைக்கிளை மோதி யதில் வேகக் கட்டுப் பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் நி று த் ; வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியு டன் மோதி விபத்து ஏற்பட்டதாக பொலி ஸார் கூறினர்.

இ வ் வி ப த் து தொடர்பில் ஹன்ரர் சாரதியை கைது செய்த நெல்லியடிப் பொலிஸார் விசார ணைகளை மேற் கொண்டுள்ளனர். (செ-60)




# கேரள கஞ்சாவுடன் இருவர் கைது

பனங்கன்குளம் பகுதியில் நேற்று மாலை 5.00 மணியளவில் கேரள கஞ்சாவுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மாங்குளம போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நேற்று மாலை கிளிநொச்சியில் இருந்து வவுனியா நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞர்களை மாலை 5.00 மணியளவில் பனிக்கன்குளம் பகுதியில் வீதி கடமையில் ஈடுபட்டிருந்த மாங குளம் பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி ஆர்.வி. பிறேமசிறி உள்ளிட்ட குழுவினர் மறித்து சோதனை யிட்டபோது மேற்படி நபர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களிட மிருந்து 30 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவை சேர்ந்த மேற்படி இளை ஞர்கள் இருவரும் இன்று முல்லைத்தீவு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ள தாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் மாங்குளம் பொலிஸார் மேலும் தெரிவித்த னர். (செ-281)

# கரைவலை சிக்கி வாகனம் விபத்து

## இருவர் படுகாயம்

வீதியில் போடப்பட்டிருந்த கடற்றொழில் கரைவரை மோட்டார் சைக்கிள் நிறுத்தல் தாங்கியில் (Stand) சிக்கியதில் கட்டுப்பாட்டை யிழந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளா னதில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை யில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகே இடம்பெற்றுள்ளது.

இதில் நல்லூர் கச்சேரி வீதியைச் சேர்ந்த வர்களான ப. கிரியோன் (வயது-28), வி. பிரியந்தன் (வயது-22) ஆகிய இருவருமே பாடுகாயமடைந்தவர்களாவர்.

கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி கல்லுக்குள் விழுந்ததில் தலை, கை, கால் என அனைத்துப் பகுதிகளி லும் இரு இளைஞர்களும் பலத்த காய மடைந்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸில் முறையிட்ட தனைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர். (செ-30)

# அருந்தவபாலன் விபத்தில் காயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் பிரதான சாலையில் நேற்று மதியம் இடம் பெற்ற வாகன விபத்தில் இலங்கை தமிழ ரசுக் கட்சியின் சாவகச்சேரி தொகுதித் தலைவர் அருந்தவபாலன் காயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளில் பாரியாருடன் சென்றுகொண்டிருந்த அவர் வீதியைக்கடக்க முற்பட்ட சமயம் எதிரே வந்த வானுடன் மோதியதிலேயே விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் காயமடைந்த அருந்தவபாலனும் அவரது மனைவியும் உடனடியாக நோயா ளர் காவு வண்டி மூலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்ட அவர்கள் இருவரும் நேற்று இரவு வீடு திரும்பியுள்ளனர். விபத்து தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-89)

# தொடரை வெல்ல இந்தியா ரெடி

## மும்பை டெஸ்ட் இன்று ஆரம்பம்

இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதும் நான்காவது டெஸ்ட் இன்று மும்பையில் ஆர்ம்பமாகிறது. இதில் வெற்றி பெற்று, தொடரை கைப்பற்ற இந்திய அணி தயாராக உள்ளது.

இந்தியா வந்துள்ள இங்கிலாந்து அணி ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் மூன்று டெஸ்ட் போட்டிகள் முடிவில், இந்திய அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

நான்காவது டெஸ்ட் மும்பை வான்கடே மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது. இதில் வெல்லும் பட்சத்தில் கடந்த 2012இல் இங்கிலாந்திடம் இழந்த கிண்ணத்தை இந்தியா மீண்டும் கைப்பற்றலாம்.

### ஆரம்பம் எப்படி

ராஜ்கோட் டெஸ்டில் சதம் அடித்த முரளி விஜய், பின் 'ஷோர்ட் பிட்ச்' பந்துகளில் ஆட்டமிழந்து வருகிறார். இந்தக் குறையை சரி செய்து கொள்வார் என நம்புவோம். இவருடன் காயத்தில் இருந்து மீண்ட லோகேஷ் ராகுல் களமிறங்குகிறார்.


நடுத்தர வரிசையில் புஜாரா (338 ஓட்.), அதிக ஓட்டங்கள் குவித்து வரும் அணித் தலைவர் ஹோலி (405) நம்பிக்கை தருகின்றனர். கடந்த 3 போட்டிகளில் 63 ஓட்டங்கள் மட்டும் எடுத்த ரஹானே, சொந்த ஊரில் முதன் முறையாக களமிறங்க முடி யாதது ஏமாற்றம்தான்.

இவருக்குப் பதில் மணிஷ் பாண்டே அல்லது கருண் நாயர் இடம்பெறலாம். பின் வரிசையில் அஷ்வின் (239 ஓட்.), ஜடேஜா (148 உள்ளிட்டோருடன், 'சீனியர்' பார்த்திவ் படேலும் இணைவது துடுப்பாட்டத்தை பலப்படுத்தலாம்.

### 'வேகங்கள்' நம்பிக்கை

பந்துவீச்சைப் பொறுத்தவரையில் 'நம்பர்-1' சகலதுறை வீரர் அஷ்வின் (15 விக்.,), ஜடேஜா (10 விக்.,), ஜெயந்த் யாதவ் (8 விக்.,) என, 'சுழல்' வீரர்கள் வழக்கம் போல சிறப்பாக செயல்படுகின்றனர்.

இவர்களுடன் மொஹமட் ஷமி (10 விக்.,), உமேஷ் யாதவ் (5) என, வேகப்பந்து வீச்சாளர்களும் விக்கெட் வேட்டை நடத் தினர். இருப்பினும், மொஹமட் ஷமி மீண் டும் முழங்கால் காயத்தால் அவதிப்படுவது,



பெரும் பின்னடைவு. இவரது இடத்தில் ஷர்துல் தாகூர் அல்லது புவ்னேஷ்வர் குமார் வரலாம்.

### 'இருவர்' அறிமுகம்

இங்கிலாந்து அணி மும்பையில் வெற்றி பெற்றால் மட்டுமே தொடரை தக்க வைக்க முடியும்.

தொடக்க வீரர் ஹமீட், அன்சாரி காயம் அடைந்திருப்பதால், கீட்டன் ஜென்னிங்ஸ், லியாம் டாசன் இன்று அறிமுகம் ஆவர் எனத் தெரிகிறது. இதில், தென்னாபிரிக் காவில் பிறந்த ஜென்னிங்ஸ், அணித் தலைவர் குக்குடன் (246 ஓட்.) இணைந்து ஆரம்பம் தர உள்ளார்.

நடுத்தர வரிசையில் ஜோ ரூட் (299), ஸ்ரோக்ஸ் (267), பேர்ஸ்டோவ் (237) உள் ளிட்டோர் சீரான ஓட்டக் குவிப்பை வெளிப் படுத்துகின்றனர். இது வெற்றிக்கு போத வில்லை.

### பிரோட் வருகை

காயம் காரணமாக கடந்த டெஸ்டில் இடம் பெறாத வேகப்பந்துவீச்சாளர் ஸ்ருவே ர்ட் பிரோட், இன்று களமிறங்கலாம். தவிர, அண்டர்சனுடன் 'சுழல்' வீரர்கள், 3 டெஸ்டில் 18 விக்கெட் வீழ்த்திய அடில் ரஷித், மொயீன் அலி கைகொடுப்பர் எனத் தெரி கிறது.

கடந்த 2006, 2012 இல் மும்பை மண் ணில் நடந்த இரு டெஸ்டில், இங்கிலாந்துக்கு எதிராக இந்தியா தோற்றுள்ளது. இதனால் இம்முறை கூடுதல் கவனத்துடன் செயல்பட அணித் தலைவர் ஹோலியின் படை காத்திருக்கிறது.

### ஆடுகளம் எப்படி?

மற்றைய ஆடுகளங்களைப் போலவே மும்பை வான்கடேயும் 'சுழலுக்கு' கைகொ டுக்கும் என நம்பப்படுகிறது. அதேநேரம் முதல் மூன்று நாட்கள் துடுப்பாட்ட வீரர்கள் எளிதாக ஓட்டங்கள் சேர்க்க வாய்ப்புள்ளது. (க)

# பொது அறிவித்தல்-2017 கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

01.படவரைஞரைப்பதிவு செய்தல்

2017ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவுசெய்துள்ளவர்களும். 2017ஆம் ஆண்டு தை மாதம் 31 ஆம் திகதிக்கு முதல் தமது பதிவுகளை மேற்கொள்ளவும்.புதுப்பித்துக்கொள்வோர் கரைச்சிப்பிரதேச சபையின் உப அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

02.வியாபார உரிம அனுமதிப்பத்திரம்-2017

கரைச்சிபிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் பிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை கரைச்சி. முரசுமோட்டை உபஅலுவலகங்களில் 2017ஆம் ஆண்டு தை 15 ஆம் திகதிக்குள் பெற்று அதனை பூரணப்படுத்தி சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 2017.02.28 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளவும். 2017.03.31ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

03.சூழல் பாதுகாப்பு உரிமம் (EPL-2017)

கரைச்சி பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் சிறிய மற்றும் நடுத்தர வியாபார/தொழில் முயற்சிகளில் ஈடுபடும் சகலரும் உப அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். சூழல் பாதுகாப்பு உரிமத்தை பெற்றுக்கொள்ளத் தவறுபவர்கள் 2017 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட வியாபார/தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

04.துவிச்சக்கரவண்டி , மிருகங்களின் உரிமம்

கரைச்சி பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குள் துவிச்சக்கரவண்டிகள். வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2017.03.31ஆம் திகதிக்குமுன்னர் சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2017ஆம் ஆண்டிற்கான வாகன. மிருக உரிமங்களை பெற்றுக்கொள்ளவும்.

05.வீடுகள், கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள், கிணறுகள் அமைத்தலும், புதுப்பித்தல்/திருத்தவேலைகள் செய்தலும்

5.1)எமது நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் மேற்படி அமைப்பு வேலைகளை அனுமதியின்றி மேற்கொள்ளல் வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச்சட்டம் பிரிவு-268 இன் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே உரிய விண்ணப்பப்படிவங்களை சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் பெற்று சபையின் முன்னனுமதி பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.அவ்வாறு முன்னனுமதி பெறப்படாத கட்டடங்கள் யாவும் எவ்வித நட்டஈடும் வழங்கப்படாது அனுமதியற்ற கட்டடமாக கருதி சபையினால் அகற்றப்படும்.

5.2)ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருடகாலத்தில் கட்டடவேலைகள் பூர்த்தியாகாதவிடத்து அவ் விண்ணப்பதாரிகள் அனுமதியினை புதுப்பித்துக்கொள்வதோடு கட்டடத்தினை பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகள் உரிய அமைவுச்சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

06.வீதி ஒழுங்கினைப்பேணல்

கிளி நகர மையப்பகுதியில் அதிகரித்த போக்குவரத்து காரணமாக. விபத்துக்களை தவிர்த்துக்கொள்ளும் முகமாக வியாபார நிலையங்களிற்கு முன்னால் பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.அவற்றினை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன்.

07.விளம்பரங்களை அமைத்தல்/காட்சிப்படுத்தல்

கரைச்சி பிரதேசசபையின் நிர்வாக பிரிவில் உள்ள பொது வீதிகளின் இருமருங்கிலும் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும்/காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கு 2017.02.16ஆம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தை செலுத்தி சபையின் அனுமதியினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.அனுமதி பெறப்படாத முகவர்கள்/ நிறுவனங்கள்/வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 2016.03.31ஆம் திகதிக்குப்பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

கட்டண விபரம் பின்வருமாறு

| தொ.இல. | விபரம் | பிளாஸ்ரிக் (1 சதுர அடி) | துணி (1 சதுர அடி) |
|---|---|---|---|
| 1 | தனியார் வளைவுகளில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் விளம்பரப் பலகைகள் | ரூபா 50.00 | ரூபா 25.00 |
| 2 | பிரதான பாதைக்கு தெரியக்கூடிய இடத்தினை பயன்படுத்தி பிரதான பாதைக்கு அருகில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகள் | ரூபா 60.00 | ரூபா 30.00 |
| 3 | உள்ளூராட்சி மன்றங்களின் வளைவுகளை பயன்படுத்திய வண்ணம் நிர்மாணிக்கப்படும் விளம்பரப் பலகைகள் | ரூபா 100.00 | ரூபா 50.00 |

(சி-6602)

08.பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்

கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப்பொருட்களை அனுமதியின்றிக் கொண்டுசெல்லல்.கொட்டுதல் ஆகியன பொதுச்சுகாதாரத்தினை கருத்தில் கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது.தவறின் பிரதேசசபையின் கட்டளைச்சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்டநடவடிக்கை எடுக்கப்படும். மேலும் தங்களினால் அகற்றப்படும் திண்ம. திரவ கழிவுகள் பிரதேசசபையின் வாகனங்களினூடாகவே அகற்றப்படுதல் வேண்டும். உணவகங்களை நடாத்துவோர் தமது திரவக்கழிவுநீரை வீதியின் பொது கால்வாய் வழியாக திறந்து விடுவதனால் பொதுமக்களுக்கு அசௌகரியமும்.டெங்கு பரவும் அபாயமும் காணப்படுவதனால் மேற்படி செயற்பாட்டை மேற்கொள்பவர்களின் உணவகங்கள் பூட்டப்படுவதுடன் சட்டநடவடிக்கையும் எடுக்கப்படும்.

09.தரகர் முறைநீக்கல்

எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றினை அனுசரித்து நடக்குமாறு வியாபாரிகள் வேண்டப்படுகின்றனர்.

10.நடைபாதை வியாபாரம் தடைசெய்யப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குள் அனைத்து விதமான நடைபாதை வியாபாரங்களும் தடைசெய்யப்பட்டுள்ளன. மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு.கணேசன்.கம்ஸநாதன், செயலாளர், கரைச்சிபிரதேச சபை, கிளிநொச்சி.**

# இராசி பலன்

08.12.2016

(கார்த்திகை 23, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.10 மணிக்கு

நவமி முன்னிரவு 7.49 மணிவரை

பூரட்டாதி காலை 7.15 மணிவரை

உத்திரட்டாதி பின்னிரவு 6.12 மணிவரை

சுபநேரம் 7.47-9.17 மணிவரை

இராகுகாலம் 1.47-3.17 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| செவ் கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தரம் | | |
| சுக் | | | ராகு |
| புத | சூரி சனி | | குரு |

**மீனம்** புதியவர்களின் நட்பு இடம் பெறலாம், குடும்ப இரகசியங்களை காப்பாற்றுவது நல்லது, பயணமொன்றில் திடீர் மாற்றம் செய்யும் நிலை ஏற்படலாம்.

**மேடம்** வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள், தொழில் ரீதியாக புதிய பொறுப்புகள் வந்து சேரும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** இனிய சம்பவங்கள் இடம் பெறலாம், பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** தொழில் வளர்ச்சி கூடும் நாள், பேச்சைக் குறைத்து செலவில் தீவிரம் காட்டுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும், ஆரோக்கியமான நாள்.

**கும்பம்** கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் நிலை ஏற்படலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், நண்பர்களால் வளர்ச்சி கூடும்.

**கடகம்** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மறதியால் தவறிய காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மகரம்** உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், பயணங்கள் கைகூடும், செய்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள்.

**சிம்மம்** ஆதாயமில்லாத அலைச்சல்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், உதவி செய்த சிலரே உதாசீனம் செய்வதுகண்டு வருத்தமடையலாம்.

**தனுசு** எதிர்காலம் இனிமையாக அமைய புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், நண்பர்கள் மூலம் சுப தாபதங்கள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்** மகிழ்ச்சி கூடும் நாள், துரத்து உறவினர்களின் வருகையுண்டு, வியாபார விருத்தியுண்டு, பூர்வபுண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** நினைத்த காரியத்தை நினைத்தபடி செய்து முடிப்பீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தன்னம்பிக்கை துர்விடும் நாள், போசன நன்மையுண்டு.

**கன்னி** பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், புதிய நட்பு கிடைக்கும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

# வடக்கு அமைச்சர்களை விசாரணை செய்யும் விசாரணைக்குழுவின் கால எல்லை நீடிப்பு!

## இதுவரை ஐந்து முறைப்பாடுகள் பதிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களை விசாரணை செய்வதற்கு முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் 67ஆவது அமர்வு நேற்றைய தினம் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்யுமாறு வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் கோரியிருந்தார்கள்.

இந்த கோரிக்கையை அடுத்து ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையிலான குழு ஒன்று முதலமைச்சரினால் நியமிக்கப்பட்டது. இந்த குழு கடந்த சில மாதகாலமாக செயற்பட்டு வந்த நிலையில், நேற்று முன்தினம் முதல் அந்த விசாரணைக் குழுவின் கால எல்லை முடிவடைகின்றது.

இந்நிலையில் நேற்றைய தினம் நடைபெற்ற வடக்கு மாகாண சபையின் அமர்வில் உறுப்பினர் லிங்கநாதன் குறித்த விசாரணைக் குழுவின் காலத்தை நீடிக்க வேண்டும் என கோரிக்கை ஒன்றை முன்வைத்தார். இதன்போது எழுந்த முதலமைச்சர், குறித்த விசாரணைக்குழுவில் இதுவரை ஐந்து முறைப்பாடுகளே பதிவு செய்யப்பட்டுள்ளன.

6ஆம் திகதி முதல் முடிவடையும் விசாரணைக் குழுவின் காலத்தை மேலும் ஒருவார காலத்திற்கு நீடிப்பதற்கு எந்தத்தடையும் இல்லை என அறிவித்தார். மேலும் அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் ஏதும் இருந்தால் அது தொடர்பில் பிரதம செயலாளரின் அலுவலகத்தில் இயங்கும் விசாரணைக்குழுவிடம் முறையிட முடியும் என்றார். (இ-4)

# வடமாகாண சபைக்கு பிரத்தியேகமாக கீதம்

வடக்கு மாகாண சபைக்கு என பிரத்தியேகமாக கீதம் ஒன்று இயற்றப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் அறிவித்துள்ளார். வடக்கு மாகாண சபையின் 67 ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது.

இதன்போதே அவைத் தலைவர் மேற்படி தகவலை தெரிவித்தார்.

வடக்குமாகாண சபைக்கென கீதம் தயாரிப்பது தொடர்பில் சபை நடவடிக்கை குழுவினில் முதலில் ஊடகங்கள் வாயிலாக விளம்பரப்படுத்தப்படும். அந்த விளம்பரத்தில் கீதம் ஒன்றை தயாரித்து வழங்குமாறு கோரப்படும். பொருத்தமான கீதம் வழங்கப்பட்டால் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அவைத் தலைவர் அறிவிப்பு செய்தார்.

இதேவேளை வடக்கு மாகாண சபைத் தேர்தல் கடந்த 2013 ஆம் ஆண்டு நடைபெற்று தற்போது மூன்று வருடங்கள் ஆகியுள்ளன. வடக்கு மாகாணத்திற்கென கொடி மற்றும் மாகாண சபைக்கென செங்கோல் ஆகியன தயாரிக்கப்பட்டுள்ள நிலையில் கீதம் இயற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)




யாழில் விபத்துக்களை குறைக்கும் வகையில் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரெனிஸ்லாசின் ஏற்பாட்டில் கோப்பாய் பொலிஸாரினால் திருநெல்வேலி சந்தியில் விபத்துக்களைத் தடுக்கும் விழிப்புணர்வு ஸ்ரிக்கர்கள் வாகனங்களுக்கு நேற்றைய தினம் ஒட்டப்பட்டன. (படங்கள் : உ.சுஜீன், நிரோஜ்)

## இலவச கண்சிகிச்சை முகாம்

(யாழ்ப்பாணம்)

இலவசக் கண்சிகிச்சை முகாம் எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் பருத்தித்துறை வி.எம். வீதியில் அமைந்துள்ள ஞானாலயத்தில் நடைபெறவுள்ளது.

இலவச கண்சிகிச்சை முகாமிற்கு கண் வைத்திய நிபுணர் டாக்டர். சந்திரகுமார் வருகை தரவுள்ளார் என ஞானாலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (இ-7)

## அலுவலகத் திறப்பு விழா

வடமாகாண சிரேஷ்ட பள்ளிக் கல்வியாளர் ஒன்றிய அலுவலகத் திறப்பு விழா எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல. 745, கே.கே.எஸ். வீதி என்ற முகவரியில் யாழ். இந்துக் கல்லூரி முன்பாக நடைபெறவுள்ளது.

ஓய்வுநிலை வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சர் த. குருகுலராஜா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் , வடமாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார், யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன். கௌரவ விருந்தினராக தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

## வேத சிவாகமப் பேருரை

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை நடத்தும் முதுபெரும் பேராசிரியர் ஆர். தியாகராஜனின் வேத சிவாகமப் பேருரை நாளை மறுதினம் 10ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இந்துசமயப் பேரவை நடராஜர் மண்டபத்தில் யாழ். இந்துசமயப் பேரவைத் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-7)

# வடக்கு மாகாண பொதுச்சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ஆம் வகுப்பு 1(அ) தரப்பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தமிழ் மொழி மூலமான திறந்த போட்டிப் பரீட்சையானது 2016. 12.18 ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்காக விண்ணப்பித்த தகைமையுடைய விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரால் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் தாங்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்தமைக்கான சான்றுகளுடன் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கோ அல்லது 0212219939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ 2016.12.14ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

எவ்வாறாயினும் அனுமதி விநியோகிக்கப்பட்ட பின்னரே பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படுவர் என வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் ரூ. வரதலிங்கம் அறிவித்துள்ளார். (இ)

# தவராசாவின் நியமனத்தை மீள் பரிசீலனை செய்யவும்

## எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் கோரிக்கை

வடக்கு மாகாண எதிர்க்கட்சித்தலைவர் தெரிவு செய்யப்பட்ட முறைமையை ஏற்றுக் கொள்ள முடியாது என தெரிவித்துள்ள எதிர்க்கட்சி உறுப்பினர் எஸ்.தவநாதன், தொடர்ந்தும் எதிர்க்கட்சி தலை வராக சி.தவராசாவை நீடிப்பு செய்தமை தொடர்பில் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும் எனக் கோரினார். வடக்கு மாகாண சபையின் 67ஆவது அமர்வு நேற்றைய தினம் அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வில் எதிர்க்கட்சி தலைவராக தொடர்ந்தும் சி.தவராசாவே செயற்படுவார் என்ற தீர்மானத்தை அவைத் தலைவர் சிவஞானம் சபையில் அறிவித்திருந்தார். இந்த தீர்மானம் தொடர்பில் நேற்றைய தினம் கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் தெரிவு தொடர்பில் அவைத் தலைவரால் அனுப்பப்பட்ட கடிதங்கள் மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளில் நான்கு சந்தர்ப்பங்களிலும் எதிர்க் கட்சி தலைவர் தெரிவு செய்யப்பட்ட முறைமை தொடர்பில் கூறவில்லை. வடக்கு மாகாணசபைக்கென நடைமுறை விதிக்கோவை ஒன்று உருவாக்கப்படாமல் எதிர்க்கட்சி தலைவர் தெரிவினை மேற்கொண்டதனை ஏற்க முடியாது. இந்த தெரிவு முறையானதாக இருக்க முடியாது என அவர் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம், பாராளுமன்ற நடைமுறையை கருத்திற் கொண்டும் வரலாற்றுரீதியான முடிவுகளை ஆராய்ந்துமே தீர்மானம் எடுக்கப்பட்டது. இந்த தெரிவு குறித்து எதிர்க்கட்சி தமக்குள்ளே ஆராயாமல் அந்த பிரச்சனையை அவைக்கு கொண்டுவந்த பின்னர், அது தொடர்பில் முடிவெடுக்க வேண்டிய பொறுப்பு கடமை அதிகாரம் எனக்கு உண்டு.

ஆகையால் எதிர்க்கட்சி தலைவர் தெரிவு நியாயமாக, ஜனநாயக ரீதியிலேயே நடைபெற்றது. இந்த தெரிவு விடயத்தில் யாரும் குறை சொல்லவோ பிழை சொல்லவோ முடியாது. எதிர்க்கட்சி தலைவராக தொடர்ந்தும் தவராசா செயற்படுவார் என்ற முடிவில் எந்த மாற்றமும் இல்லை என எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதனின் கோரிக்கையை நிராகரித்தார். (இ-4)

# பசிலுக்கு எதிராக புதிதாக மீண்டும் குற்றப்பத்திரிகை

## சட்டமா அதிபர் திணைக்களம் விடாப்பிடி



(கொழும்பு)

**திவிநெகும திணைக்கள நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பில் முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கு எதிராக புதிதாக மீண்டும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

குறித்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருந்த குற்றப்பத்திரிகையில் சில தொழில்நுட்ப ரீதியான விடயங்களில் தவறுகள் காணப்படுவதாக தெரிவித்து அதனை சட்டமா அதிபர் வாபஸ் பெற்றிருந்தார்.

இந்த நிலையில் அந்த தொழில்நுட்ப தவறுகள் திருத்தப்பட்டு மீண்டும் பசில் ராஜபக்ஷவிற்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

திவிநெகும திணைக்களத்திற்குச் செந்தமான 29 மில்லியன் ரூபாவை பயன்படுத்தி 5 மில்லியன் புதுவருட நாள் காட்டியை அச்சிட்டு விநியோகத்தமை தொடர்பாக இவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. (இ-7-10)

# ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தி கஞ்சா பயிரிடும் இடங்களை அழிக்கவும்

## ஐ.தே.க.எம்.பி. ஆலோசனை

ஆளில்லா விமானங்கள் மூலமே விடுதலைப் புலிகள் இயக்கம் அழித்தொழிக்கப் பட்டது. அதுபோலவே கஞ்சா பயிரிடும் இடங்களையும் ஆளில்லா விமானங்கள் மூலம் இனங்கண்டு இல்லா தொழிக்குமாறு ஐ.தே.க.எம்.பி புத்திக்க பத்திரண ஆலோசனை வழங்கினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாவுக்கான நேரத்தின் போது மேலதிக கேள்வி எழுப்பும் போதே சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவிடம் குறித்த ஆலோசனையை வழங்கினார்.

எம் அனைவருக்கும் தெரியும் யுத்தத்தின் போது விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆளில்லாத விமானங்கள் மூலமே இனங்கண்டு அழித்தொழிக்கப்பட்டன. எனவே அதுபோலவே இலங்கையில் கஞ்சா பயிரிடும் இடங்களை ஆளில்லா, விமானங்கள் மூலம் இனங்கண்டு முழுமையாக இல்லாதொழிகக முடியும் என ஆலோசனை வழங்கினார். (இ-7-10)


## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா:46 செவ் 12 இல்
உயரம்: 170cm
தகைமை/தொழில்:O/L/கடை
தொ.இ: B/6575

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூரம்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L/வங்கி முகாமையாளர்
தொ.இ: B/6577

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 11
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:IT/ பொறியியலாளர்
தொ.இ: B/6581

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை சூரிசெவ் 11இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:MSc
தொ.இ: B/6584

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: மகம் செவ் 8 இல்
உயரம்: 4'10"
தகைமை/தொழில்:HND
தொ.இ: G/6591

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 36 செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:B.COM/ வங்கியாளர்
தொ.இ: G/6594

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூரம்
உயரம்: 5'
தகைமை/தொழில்:MBBS/வைத்திய நிபுணர்
தொ.இ: G/6598

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரேவதி
உயரம்: 5'
தகைமை/தொழில்:வைத்தியர்
தொ.இ: G/6599

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.



Sri Lanka Institute of Advanced Technological Education

ADVANCED TECHNOLOGICAL INSTITUTE
JAFFNA

TECHNOSOFT 2016

Annual Software Competition

Competition On 07.12.2016
@ Advanced Technological Institute
665/2,Beach Road,Jaffna

Awarding Ceremony On 08.12.2016
@ Saraswathy Hall
37,Sir Pon Ramanathan Road, Jaffna

Organized By- Department of Information Technology ATI-Jaffna

Media Sponsor: வலம்புரி

Sponsors: PEOPLE'S BANK THE PULSE OF THE PEOPLE | ESOFT The Leader in Professional ICT Education | BCAS CAMPUS BRITISH COLLEGE OF APPLIED STUDIES | KAJAMUGAN HARDWARE

# ஆனையிறவு, குறிஞ்சா தீவு உப்பளங்களை தனியார் மயமாக்குவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

## ஆனையிறவு உப்பளத்திற்கு முன்பாக நேற்று முன்னெடுப்பு

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஆனையிறவு, குறிஞ்சா தீவு ஆகிய உப்பளங்களை தனியார்மயமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பச்சிலைப்பள்ளி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.




ஆனையிறவு உப்பளத்திற்கு முன்பாக நேற்று மேற்படி பிரதேச செயலக பிரிவுகளில் வசிக்கின்ற மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள ஆனையிறவு மற்றும் குறிஞ்சாத்தீவு



உப்பளங்களை தனியார் மயமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

ஆனையிறவு உப்பளத்திற்கு முன்பாக ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பளங்களின் கிராம மக்கள் அமைபபுகள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தன.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் ஆனையிறவு உப்பளத்தின் அடையாளத்தை அழிக்காதே!, உப்புக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயமாக்க வேண்டாம், கூட்டாக உழைப்போம் - தனியார் மயமாக்கலை எதிர்ப்போம், எங்கள் வளத்தில் நாங்கள் வாழ்வோம், எங்கள் வளங்களைத் தனியாருக்கு விற்க அனுமதிக்கோம், பிரதேச வளங்களில் பிரதேச மக்களுக்கே முன்னுரிமை. இது எங்கள் உப்பளம், உப்பளத்தை விற்காதே! நம் உழைப்பை அழிக்காதே போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அமைப்புகளால் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன், நிதி அமைச்சர், வடக்கு மாகாண முதலமைச்சர், அமைச்சர் றிசாட் பதியுதீன், வடக்கு மாகாண எதிர்க்கட்சி தலைவர், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டதுடன் கண்டாவளை உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ம.பிரதீப் மற்றும் ஆனையிறவு உப்பள முகாமையாளர் ஏ.கிசோதரன் ஆகியோருக்கும் மகஜர் நேரடியாக கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் வருமாறு,

ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பளங்களின் அயல் கிராம மக்கள் அமைப்புகளாகிய நாங்கள் சமர்ப்பிக்கும் மேன்முறையீட்டை தங்கள் மேலான கவனத்திற்கொண்டு வருகிறோம்.

ஆனையிறவு மற்றும் குறிஞ்சாத்தீவு உப்பளங்கள் தனியாரிடம் கையளிக்கப்படுவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் நடைபெறுவதை அவதானிக்க முடிகிறது.

1938 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த உப்பளங்கள், 1990 வரை மிகுந்த வினைத்திறனோடு அதிக வருமானத்தை ஈட்டியுள்ளன.

ஆனையிறவு உப்பளத்தின் ஆண்டுக்கான உற்பத்தி 30 ஆயிரம் மெற்றிக் தொன்னாகவும் குறிஞ்சாத்தீவு உப்பளத்தின் ஆண்டுக்கான உற்பத்தி 40 ஆயிரம் மெற்றிக் தொன்னாகவும் இருந்துள்ளது எனத் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட சமத்துவம், சமூகநீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் கருத்து தெரிவிக்கையில்,

ஆனையிறவு மற்றும் குறிஞ்சாத்தீவு உப்பளங்களை தனியார்மயமாக்குவது என்பது இந்த பிரதேச மக்களுக்கு செய்யும் பாரிய அநீதியாகும். அதனை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இந்த பிரதேச மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் வகையில் இந்த உப்பளங்களை தனியார்மயமாக்கும் முயற்சி கண்டிக்கத்தக்க விடயம் எனத் தெரிவித்தார். (2-312)




# பரவிப்பாஞ்சானில் 15 குடும்பங்களின் காணிகள் இராணுவத்தினர் கைவசம்

## மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கிளிநொச்சி - பரவிப்பாஞ்சானிலுள்ள 15 குடும்பங்களின் காணிகளை இராணுவத்தினர் இன்றும் கையகப்படுத்தி வைத்திருப்பதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று கிளிநொச்சி - இரணைதீவுப் பகுதியில் சொந்தத் தொழிலுக்கு செல்ல முடியாத நிலையிலும், மீள் குடியேற முடியாத நிலையிலும் அவர்களது காணிகளை கடற்படையினர் தங்களது ஆதிக்கத்தில் வைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் இடம்பெற்ற சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம் ஆகிய அமைச்சிற்கான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

வடக்கு, கிழக்கில் யுத்தம் முடிவடைந்தும் இராணுவத்தினர் பாடசாலைகள், ஆலயங்கள், தனியார் காணிகளில் இன்னும் குடியமர்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த அரசாங்கத்தில் மீள்குடியேற்றங்கள் இடம்பெறாத நிலையில், நல்லாட்சி அரசாங்கமானது இராணுவத்திடமுள்ள தனியாருக்குரிய 6 ஆயிரம் ஏக்கர் காணிகளை வழங்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ஈழத்தமிழர்களுக்கு உரிய தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அக்கறையாக இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் காரணமாக தமிழகத்தில் வாழ்ந்து வரும் ஈழத் தமிழர்களுக்கு ஜெயலலிதா அக்கறை காட்டி வந்ததாகக் குறிப்பிட்ட விஜயகலா, ஈழத் தமிழர்களுக்கு இந்தியப் பிரஜாவுரிமை வழங்கப்படும் என்றும் அறிவித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை வாழ் தமிழ் மக்களுக்காக ஓங்கியொலித்த தமிழக முதலமைச்சரின் இழப்பு கவலையளிக்கும் விடயம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# 78 பரீட்சை நிலையங்களில் 7,716 மாணவர்கள் பரீட்சை எழுதுகின்றனர்

## வவுனியா தெற்கு கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் 78 பரீட்சை நிலையங்களில் 7 ஆயிரத்து 716 மாணவர்கள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றுவதாக வவுனியா மாவட்ட பரீட்சைக்கு பொறுப்பான கல்விப் பணிப்பாளரும் வவுனியா தெற்கு கல்விப் பணிப்பாளருமான எம்.ராதா கிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் 14 இணைப்பு நிலையங்கள்,78 பரீட்சை நிலையங்கள் என்பன இயங்கி வருகின்றன. இவற்றில் பழைய பாடத்திட்டம் மற்றும் புதிய பாடத்திட்டத்தில் 7 ஆயிரத்து 716 மாணவர்கள் தோற்றுகின்றனர்.

இந் நிலையில் சுமுகமான முறையில் பரீட்சைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருவதாக தெரிவித்த அவர் வவுனியா மவட்டத்தில் முதன முறையாக இம்முறை பரீட்சையில் வவுனியா வலுவூட்டல் வளாகத்தை சேர்ந்த வாய் பேசமுடியாத மற்றும் காது கேட்காத விசேட தேவைக்குட்பட்ட 5 மாணவர்களும் பரீட்சைக்கு தோற்றியுள்ளதாக அவர் தெரிவித்தார். (2-250)

# நெடுங்கேணி பிரதேச செயலக ஊழியர்கள் நேற்று பணிப்பகிஷ்கரிப்பு

## அபிவிருத்தி உத்தியோகத்தர் தாக்கப்பட்டமையை கண்டித்து



வவுனியா வடக்கு பிரதேச செயலத்திற்குட்பட்ட புளியங்குளம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கடமையாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர் கடந்த வெளளிக்கிழமை கிராமவாசி ஒருவரால் தாக்கப்பட்டதை கண்டித்தும் சட்ட நடவடிக்கை எடுக்கக்கோரியும் நெடுங்கேணி பிரதேச செயலகத்தின் ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 8.30 மணி தொடக்கம் நெடுங்கேணி பிரதேச செயலாளர் பா.பரந்தாமன் தலைமையில் பணிப்பகிஷ்கரிப்பானது முன்னெடுக்கப்பட்டது. அப்பணிப்பகிஷ்கரிப்பில் பிரதேச செயலக ஊழியர்கள் ஈடுபட்டதுடன் பிரதேச செயலகத்தின் வாயில் மூடப்பட்டு பணிப்பகிஷ்கரிப்பானது முன்னெடுக்கப்பட்டது.

இப்பணிப்பகிஷ்கரிப்பை கைவிடுமாறு நெடுங்கேணி பொலிஸ்நிலையத்தின் பொறுப்பதிகாரி பிரதேச செயலாளருடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டிருந்தபோதும் ஊழியர்களின் எதிர்ப்பையடுத்து பொலிஸாரின் கோரிக்கை கைவிடப்பட்டது.

பிரதேச செயலகத்திற்கு பல்வேறு தேவைகள் கருதி வந்திருந்த பொதுமக்கள் பிரதேசசெயலகத்தின் பணிப்புறக்கணிப்பு காரணமாக சேவைகள் நடைபெறாமையால் காத்து நின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)



மன்னாருக்கு நேற்று புதன்கிழமை காலை விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த சபாநாயகர் கரு ஜயசூரிய, எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட குழுவினர் பாராளுமன்ற குழுக்களின் பிரதி அவைத்தலைவர் செல்வம் அடைக்கலநாதனின் தந்தையின் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக மன்னார் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகரில் உள்ள அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது.

இவர்களுடன் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக உட்பட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிறிதரன், யோகேஸ்வரன், வியாழேந்திரன் ஆகியோரும் வடக்கு மாகாணசபை மற்றும் கிழக்கு மாகாணசபைகளின் உறுப்பினர்களும் இறுதி அஞ்சலி செலுத்தினர். (படம்:- பொ.சோபிகா)

## 2 கோடி 73 இலட்சம் ரூபா நிதி

# ஆயிரத்து 694 விவசாயிகளின் உரமானியக் கொடுப்பனவாக பகிர்வு

### பாண்டியன்குளம் கமநல சேவை நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவிப்பு

பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட சிறுகுளங்களின் குளக்காணிகளின் கீழும் மற்றும் வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்டதும் பாண்டியன் குளம்கமநலசேவைநிலையப் பிரிவிற்குட்பட்டதுமான பெரிய நீர்ப்பாசனக்குளங்களின் கீழும் 2016-2017 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கையானது குளக்காணிகளின் கீழும் மற்றும் மானாவாரியாகவும் ஆயிரத்து 694 விவசாயிகள் 5 ஆயிரத்து 476.5 ஏக்கரில் நெற்செய்கையை மேற்கொண்டுள்ளனர்.




இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 2 கோடி 73 இலட்சத்து 82 ஆயிரத்து 500 ரூபா நிதி விவசாயிகளின் வங்கிக்கணக்குகள் ஊடாக அரசாங்கத்தினால் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் நாகராஜா சுஜீபரூபன் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

உரமானியக் கொடுப்பனவிற்கான விண்ணப்பங்கள் விவசாயிகளிடம் வழங்கப்பட்டு பின்னர் அவர்களால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் விபரப்பட்டியல் தயாரிக்கப்பட்டு உரமானியக் கொடுப்பனவிற்காக அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பாண்டியன்குளம் கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட ஆயிரத்து 165 விவசாயிகளின் 3ஆயிரத்து 224 ஏக்கருக்குரிய ஒரு கோடி 91 இலட்சத்து 20 ஆயிரம் நிதி இலங்கை வங்கியூடாகவும் 529 விவசாயிகளின் 6 ஆயிரத்து 652.5 ஏக்கருக்குரிய 82 இலட்சத்து 62 ஆயிரத்து 500 ரூபாவுமாக மொத்தம் ஆயிரத்து 694 விவசாயிகளின் 5 ஆயிரத்து 476.5 ஏக்கருக்குரிய 2 கோடி 73 இலட்சத்து 82 ஆயிரத்து 500 ரூபா நிதி உரமானியக் கொடுப்பனவாக விவசாயிகளின் வங்கிக்கணக்குகள் ஊடாக பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# வவுனியாவில்'ஜெயாவிற்கு' அஞ்சலி





மறைந்த தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயராம் ஜெயலலிதாவுக்கு வவுனியாவில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் வவுனியா குட் செட் வீதியில் அமைந்துள்ள ஊடக கற்கைகள்நிறுவனத்தில் நேற்று முன்தினம் மாலை 7 மணிக்கு இவ் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதில் வவுனியா வரியிறுப்பாளர் சங்க பிரதிநிதிகள், தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பு பிரதிநிதிகள், பிரஜைகள் குழு உறுப்பினர்கள் ஊடகவியலாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்துகொண்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். இதன் போது அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன. (2-250)

# வைத்தியசாலைக்கு 75மில்.ரூபாவில் மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு 75 மில்லியன் ரூபா மருத்துவ உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சிக்கு கடந்த 4 ஆம் திகதி விஜயம் மேற்கொண்ட மத்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் பாலித மகிபால மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 75 மில்லியன் ரூபா பெறுமதியில் மருத்துவ உபகரணங்களை வழங்கி வைத்துள்ளார்.

இந்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இடம்பெற்றது. அத்தோடு தற்போது கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இடம்பெற்று வருகின்ற புனரமைப்பு பணிகளையும் பார்வையிட்டதோடு,அடுத்த ஆண்டும், மேலதிக புனரமைப்பிற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்படுமாயின் நிதி ஒதுக்கீட்டிற்கான பரிந்துரை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் வாக்குறுதியளித்தார்.



இதனையடுத்து, மத்திய அரசின் நிதிப்பங்களிப்பின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் கடந்த ஆண்டு திறந்துவைக்கப்பட்ட அதிதீவிர சிகிச்சைப்பிரிவு, இவ்வாண்டு திறந்து வைக்கப்பட்ட சிசுக்களுக்கான விசேட பராமரிப்பு அலகு ஆகியவற்றிற்கு நேரில் சென்று பார்வையிட்டதோடு, அங்கு வழங்கப்படும் சேவைகளின் தரம் மற்றும் மேலதிக தேவைகள் குறித்து வைத்திய நிபுணர்கள் மற்றும் ஆளணியினருடன் கலந்துரையாடினார்.

மேலும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் பாலித மகிபால கிளிநொச்சி மாவட்டத்தின் உருத்திரபுரம், ஊற்றுப்புலம் ஆகிய கிராமங்களுக்கு நேரில் சென்று நிலமைகளை அவதானத்ததுடன்சுகாதார சேவையின் களப்பணி உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களைச் சந்தித்து அண்மைய நாட்களில் எமது மாவட்டம் எதிர்கொண்ட இயற்கைச்சவால்களின போது மக்களுக்கு அவர்கள் ஆற்றிய உதவிகளுக்கு சுகாதார அமைச்சின் சார்பில் தனது நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

அதேவேளையில், கடந்த 23.11.2016 இல் பிரதம தொற்று நோயியல் நிபுணர் வைத்தியர் பபா பலிகவடன மற்றும் இரு விசேட தொற்று நோயியல் நிபுணர்களை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு அனுப்பி முன்னாயத்த நடவடிக்கைகள் குறித்த தயார்நிலையை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


அக்குழுவினர் உருத் திரபுரம் மத்தி, உருத்திரபுரம் சிவநகர் பகுதிகளைப் பார்வையிட்டுத் தேவையான ஆலோசனைகளை வழங்கியிருந்தனர்.

இறுதி நிகழ்வாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரன் மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளார் மருத்துவர் கார்த்திகேயன் ஆகியோருடன் இணைந்து, கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், துணை மருத்துவ சேவையாளர்கள் மற்றும் சுகாதாரப் பணி உதவியாளர்கள் ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்து அவர்களது கோரிக்கைகளை அவதானமாகச் செவிமடுத்து அதற்குரிய தீர்வுகள் குறித்து உடனுக்குடன் தமது வழிகாட்டல்களை வழங்கினார்.(2-312)

# கிளிநொச்சி புதிய மாவட்ட செயலகத்தில்

## நிலத்திற்கு பதிக்கப்பட்டுள்ள மாபிள்கள் சேதம்

### பொதுமக்கள் குற்றச்சாட்டு



அரசாங்கத்தின் பல கோடி ரூபா நிதியொதுக்கீட்டில் கிளிநொச்சி மாவட்டத்திற்கான புதியமாவட்டசெயலகம்அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டு 2 ஆண்டுகள் முடிவு பெறுவதற்குள் 2ஆம் மாடியின் நிலத்திற்கு பதிக்கப்பட்டுள்ள தரை ஓடுகள் (மாபிள்கள்) தொழில்நுட்பப் பிரச்சினை காரணமாக ஓட்டுவேலைகள் கழன்று சேதமடைந்து வருவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.இது தொடர்பில் தெரிய வருவதாவது,

அன்றைய காலப்பகுதி அரசாங்கத்தினால் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கானபுதியஇரண்டுமாடிகளைக் கொண்ட கட்டடம் அமைப்பதற்காக நிதியொதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தகாரரிடம் வேலைகள் ஒப்படைக்கப்பட்டு நிறைவடைந்த நிலையில் கடந்த 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷவினால் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையில் 2 ஆம் மாடியிலுள்ள சிறிய மாநாட்டு மண்டபம்,மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, பொறியியற் கிளை ,கிராமிய அபிவிருத்திஅலுவலகம்ஆகிய பிரிவுகளுக்கு செல்லும் பாதையில் உள்ள தரையோடுகள் ஒட்டுக்கழன்று காணப்படுகின்றன.

இவ்வாறு ஒட்டுக்கழன்ற தரையோடுகள் சேதம் அடைந்த நிலையில் அருகில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது எனத் தெரிவிக்கும் பொதுமக்கள் அரசாங்கமானது பொதுமக்களிடம் இருந்து வரிகளை அறவிட்டு அதன் மூலமாக பொது வசதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்கும் நிலையில் ஒப்பந்தகாரர்களினால் பணமோசடி செய்யப்பட்ட நிலையில் வேலைகள் தரக்குறைவாக செய்யப்படுவதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (2-15)

# மாற்றுத்திறனாளிகளுக்கான தொழில் பயிற்சிகள்

(சிவநகர்)

மாற்றுத் திறனாளிகளுக்கான தொழில் பயிற்சிகளை வட. மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி பயிற்சி நிலையத்தின் ஊடாக வழங்க ஏற்பாடுகளை செய்துள்ளதாக சபையின் கிளிநொச்சி மாவட்ட உதவிப்பணிப்பாளர் இரா.அகிலன் தெரிவித்துள்ளார்.

கற்கை நெறிகள் யாவும் இலவசமாக நடத்தப்படவுள்ளது. மாற்றுத் திறனாளிகள் போதுமான எண்ணிக்கையில் சேருமிடத்து அவர்களுக்கென தனியான பிரிவு ஏற்படுத்தப்படவுள்ளது. எல்லோருக்கும் கணனி தொடர்பான அடிப்படை அறிவு வழங்கப்படுவதோடு தேவையான மென்திறன்களும் வழங்கப்படும்.எல்லோரும் NVQ Level 1 ஆங்கில கற்கை நெறியில் உள்வாங்கப்படுவார்கள்.

பயிற்சி நெறி முடிவில் போருட்ரகுமா நிறுவனம் பயிற்சியாளருக்குரிய தொழில் புரிவதற்கு ஏற்ற வசதியினை வழங்க முன்வந்துள்ளது.


பின்வரும் பயிற்சி நெறிகள் குறிப்பிடப்படும் இடங்களில் காட்டப்படும் எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மரப்பொறியியல் தொழிநுட்பம். ஜெயபுரம்.கண்டாவளை.பளை-10பேர். வீட்டு மின் இணைப்பு . கண்டாவளை. கரைச்சி. பளை. ஜெயபுரம்-50 பேர்.நீர்க்குழாய் பொருத்துநர் கண்டாவளை. கரைச்சி.பளை.ஜெயபுரம்-10 பேர்.கட்டட மேறபார்வையாளர் கண்டாவளை. கரைச்சி.பளை.ஜெயபுரம்-10 பேர். விவசாய உபகரணம் மற்றும் டீசல் பெற்றோல் வாகன திருத்துநர் கரைச்சி 15 பேர்.குளிரூட்டி வளிச்சீராக்கி திருத்துநர் கரைச்சி 15 பேர்.தையல் கரைச்சி.பூநகரி 15 பேர்.அலுமினிய கட்டுமானம் கண்டாவளை.கரைச்சி.பூநகரி-15 பேர். கணனி வன்பொருள்-கரைச்சி. பளை,ஜெயபுரம்- 15 பேர்.தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் -கரைச்சி.பளை.ஜெயபுரம் 50 பேர்.அழகுக்கலை கரைச்சி 15 பேர்.சிகை அலங்காரம் -கரைச்சி 15 பேர். வெளியிணைப்பு இயந்திரம் திருத்தம் -நாச்சிக்குடா 20 பேர்.கரைச்சி நிலையத்தில் குழந்தைகள் பராமரிப்பு -20 பேர்.முன்பள்ளிக் கற்கை நெறி -20 பேர்.குடிசார் கணிய அளவியல் 20 பேர்.குடிசார் படவரைகலை -20 பேர்.மோட்டார் சைக்கிள் திருத்துநர் - கண்டாவளை 20 பேர். முச்சக்கரவண்டி திருத்துநர் -கண்டாவளை 15 பேர்.ஆங்கிலம் NVQ Level 1- பளை.நாச்சிக்குடா .ஜெயபுரம்-80 பேர்.ஆங்கிலம் NVQ Level 2- கரைச்சி. பளை.பூநகரி. கண்டாவளை-60 பேர் ஆகும்.

கற்கை நெறியில் இணைய விரும்புபவர்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் மட்டும் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் 021 228 3363 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது தொழில் பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தின் 021228 5686 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளலாம்.

அல்லது பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளலாம் என அவர் அறிவித்துள்ளார். (2-254)

# எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும்



ஜெயலலிதா என்ற அரசியல் ஆளுமையைத் தவிர்த்து விட்டுத் தமிழக அரசியல் வரலாற்றுப் பக்கங்களை எழுதிவிட முடியாது. அத்தகைய ஆளுமையை உருவாக்கியதில் எம்ஜிஆரின் பங்கு மிக முக்கியமானது. 'ஆயிரத்தில் ஒருவன்' படத்தில் எம்ஜிஆரின் கதை நாயகியாக நடித்தார் ஜெயலலிதா. அன்று தொடங்கி 28 படங்களுக்கு எம்ஜிஆரின் இணையாக நடித்திருக்கிறார் ஜெயலலிதா. பல நாயகிகளுடன் நடித்திருந்தாலும் ஜெயலலிதா மீது எம்ஜி ஆருக்குத் தனிப்பாசம் உண்டு. அவருடைய ஒவ்வொரு நடவடிக்கையிலும் அக்கறை செலுத்தினார். அதை ஜெயலலிதாவும் அனுமதிக்கவே செய்தார்.

ஜெயலலிதாவுக்கே உரித்தான வசீகரத் தோற்றம், சுறுசுறுப்பு, நடிப்புத்திறன், நாட்டியம் ஆகியவற்றோடு எம்ஜிஆரின் கதை நாயகி என்பதும் சேர்ந்துகொள்ள, மக்கள் மனங்களில் வெகு வேகமாக ஊடுருவத் தொடங்கினார் ஜெயலலிதா. உண்மையில், எம்ஜிஆர் மட்டுமின்றி, அன்றைய முன்னணி நாயகர்கள் அனைவருடனும் இணையாக நடித்திருக்கிறார். இவ்வளவு ஏன், உண்மையில் 'பில்லா' படத்தில் ரஜினியின் நாயகியாக நடிக்க வேண்டியவர் ஜெயலலிதா. ஆனால், அந்த வாய்ப்பை நிராகரித்து விட்டதை அவரே ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

திரைத் துறையிலிருந்து ஒதுங்கி, எழுத்து, நாட்டியம், நாடகம் என்றிருந்த ஜெயலலிதாவை உலகத் தமிழ் மாநாடு எம்ஜிஆரின் பக்கம் அழைத்துவந்தது. 'காவிரி தந்த கலைச்செல்வி' நாட்டிய நாடகத்தை நடத்தினார். அப்போது எம்ஜிஆரின் கனவுத் திட்டமான சத்துணவுத் திட்டம் அறிமுகமாகியிருந்த புதிது. அதை மக்கள் மத்தியில் கொண்டுசெல்ல ஒரு வசீகரமிக்க முகத்தைத் தேடினார் எம்.ஜி.ஆர். அதற்கு ஜெயலலிதா கச்சிதமாகப் பொருந்தினார். அவரை சத்துணவுத் திட்ட உயர்மட்டக் குழு உறுப்பினராக்கினார் எம்ஜிஆர். அதோடு, அ.தி.மு.கவின் அடிப்படை உறுப்பினராகவும் சேர்த்துக்கொண்டார்.

## ஜெயலலிதாவின் எதிரி

திருச்செந்தூர் இடைத் தேர்தலில் ஜெயலலிதா செலுத்திய உழைப்பு எம்ஜிஆரை உற்சாகப்படுத்தியது. அ.தி.மு.கவின் கொள்கைப் பரப்புச் செயலாளர் என்ற முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பைக் கொடுத்தார். அப்போது ஜெயலலிதாவுக்குத் தரப்படும் முக்கியத்துவத்தைத் தீவிரமாக எதிர்த்தவர் ஆர.எம்.வீரப்பன். அவரோடு சேர்ந்து பலரும். அது எம்.ஜி.ஆருக்கும் நன்றாகத் தெரியும்.

கொள்கைப் பரப்புச் செயலாளர் பதவியைப் போயும் போயும் நடிகைக்குக் கொடுப்பதா என்ற கேலி எழுந்தபோது, "அதிமுகவின் கொள்கை அண்ணாவினது. அதை உருவாக்கியவர் ஜெயலலிதா அலல. அந்தக் கொள்கையை மக்களிடம் கொண்டு சேர்க்கும் முகம்தான் ஜெயலலிதா" என்று விளக்கம் வந்தது. தந்தவர் எம்ஜிஆர் அல்ல, ஜெயலலிதாவின் பரம எதிரி ஆர்.எம்.வீரப்பன்.

கொள்கைப் பரப்புச் செயலாளர் பதவியோடு அ.தி.மு.கவின் மாநிலங்களவை உறுப்பினராகவும் ஜெயலலிதாவை உயர்த்தினார் எம்ஜிஆர். மாநிலங்களவையில் அண்ணா அமர்ந்த இருக்கையை அவர் விரும்பியபோது, அதைச் சாத்தியப்படுத்தியது எம்ஜிஆரின் செல்வாக்கு. ஆங்கிலம் உள்ளிட்ட பன்மொழிப் புலமையை வெளிப்படுத்தினார். அது இந்திராகாந்தி போன்ற அகில இந்தியத் தலைவர்களின் அறிமுகத்துக்கும் நெருக்கத்துக்கும் வழியமைத்துக் கொடுத்தது.

## அதிருப்தியை உருவாக்கி நடவடிக்கை

ஒரு கொள்கைப் பரப்புச் செயலாளராக ஜெயலலிதா எடுத்த சில நடவடிக்கைகள் கட்சியின் இரண்டாம் கட்டத் தலைவர்கள் மத்தியில் அதிருப்தியை உருவாக்கியது. எதிரிகள் அதிகமானார்கள். அது எம்ஜிஆர் உடல்நிலை பாதிக்கப்பட்டு, அமெரிக்காவில் சிகிச்சை பெறச் சென்றபோது கடும் பாதிப்பைக் கொடுத்தது. பதவியிலிருந்தே நீக்கப்பட்டார் ஜெயலலிதா. தேர்தல் பிரசாரம் செய்யத் தடை வந்தது. ஜெயலலிதாவுக்குப் பதில் பாக்யராஜ் பிரசாரத்தில் இறங்கினார்.

எதிர்ப்புகள் சூழ்ந்த போதும் தளர்ந்துபோகாமல், எம்.ஜி.ஆர். போட்டியிட்ட ஆண்டிபட்டியில் தடையை மீறிப் பிரசாரம் செய்யத் தயாரானார். அவரது பேச்சுக்கு ஆதரவு திரண்டது. 'ஜெயலலிதா மீண்டும் அதிரடிப் பிரவேசம்' என்று எழுதியது ஓர் ஆங்கிலப் பத்திரிகை. எம்.ஜி.ஆர்.பிரசாரம் செய்யாத அந்தத் தேர்தலில் அ.தி.மு.க பெற்ற வெற்றிக்கு ஜெயலலிதாவின் பிரசாரம் முக்கிய காரணம் என்றன பத்திரிகைகள்.

அநேகமாக, எம்ஜிஆர் மீண்டும் பதவியேற்றதும் அமைச்சராவார் ஜெயலலிதா என்ற எதிர்பார்ப்பு எழுந்தது. ஆனால், கொள்கைப் பரப்புச் செயலாளராகவே அமர்த்தப்பட்டார் ஆனால, கூடுதல் அங்கீகாரத்துடன். அ.தி.மு.கவின் முக்கியக் கூட்டங்களை கொள்கைப் பரப்புச் செயலாளர் ஏற்பாடு செய்வார். 'அண்ணா' நாளிதழில் வெளியான அந்த அறிவிப்பு எம்ஜிஆரின் நம்பிக்கையை ஜெயலலிதா தக்கவைத்திருக்கிறார் என்பதற்கான சாட்சியம். இடையிடையே சின்னதும் பெரியதுமாக உரசல்களும் விரிசல்களும் இருந்தாலும், ஜெயலலிதாவை ஒருபோதும் ஒட்டுமொத்தமாக உதாசீனம் செய்ய எம்.ஜி.ஆர் விரும்பியதில்லை.

எம்ஜிஆரின் மறைவுக்குப் பிறகு, அ.தி.மு.க இரண்டாக உடைந்தது. பின்னர் நடந்த தேர்தலில் அ.தி.மு.க (ஜெ), அதிமுக (ஜா) என்ற இரு பிரிவுகள் களம் கண்டபோது, 27 இடங்களை வென்றது ஜெயலலிதா பிரிவு அதிமுக. அதன் மூலம், எம்ஜிஆரின் அரசியல் வாரிசு ஜெயலலிதா தான் என்பது உறுதியானது. அது பிரிந்துகிடந்த அ.தி.மு.கவை இணைத்து வைத்தது. முடக்கப்பட்ட இரட்டை இலைச் சின்னம் திரும்பக் கிடைத்தது. கூடவே, கட்சியின் தலைமை அலுவலகமும்.

எம்.ஜி.ஆர். இரட்டை இலை என்ற இரண்டடுக்கு அடித்தளத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த ஜெயலலிதா, ஒருகட்டத்தில் எம்ஜிஆர் நிகழ்த்திய சாதனைகளை எல்லாம் தாண்டிச் சென்றார். ஓரிரு செய்திகளைச் சொன்னால் உணமை புரியும்.

## எம்.ஜி.ஆரின் அரசியல் வாரிசு

எம்.ஜி.ஆர். ஆட்சியில் ஏறியது முதல் மறைந்தது வரை சட்டமன்றத் தேர்தலில் தோல்வி என்ற ஒன்றையே பார்க்காதவர். ஆனால், ஜெயலலிதா தலைமையிலான அதிமுக 1996 படுமோசமான தோல்வியையும் சந்தித்துள்ளது. ஐந்தே ஆண்டுகளில் பிரமாண்ட வெற்றியையும் பெற்றுள்ளது. இரண்டு மக்களவைத் தேர்தல்கள், ஒரு சட்டமன்றத் தேர்தல் என்று தொடர் தோல்விகளைச் சந்தித்தாலும், அதற்கடுத்த தேர்தலில் அசாத்திய வெற்றியைப் பெற்று ஆட்சியைப் பிடித்துள்ளது.

எம்.ஜி.ஆர். கட்சியையும் ஆட்சியையும் நிர்வாகம் செய்தது மொத்தம் 15 ஆண்டுகள் மட்டுமே.

ஆனால், ஜெயலலிதாவின் முழுமையான ஆளுகையில் கால் நூற்றாண்டுகளைக் கடந்திருக்கிறது அ.தி.மு.க. அனைத்துத் தேர்தல்களையும் கூட்டணிக் கட்சிகளின் உதவியுடனேயே எதிர்கொண்டவர் எம்ஜிஆர். ஆனால் 2014 மக்களவைத் தேர்தலைத் தனித்தே சந்தித்து பெரு வெற்றி பெற்றார் ஜெயலலிதா.

எம்ஜிஆர் மூன்று முறை முதல்வராகியிருக்கிறார். ஆனால், வழக்குகள் காரணமாக நடந்த இரண்டு பதவியேற்புகளைத் தவிர்த்து விட்டுப் பார்த்தால், மொத்தம் நான்கு முறை முதல்வராகியிருக்கிறார் ஜெயலலிதா. அந்த வகையில், எம்ஜிஆர் உருவாக்கிய ஆளுமையான ஜெயலலிதா, அவரைக் காட்டிலும் அதிகமான பங்களிப்புகளைச் செய்திருக்கிறார். அத்தனைக்கும் அடித்தளம் எம்ஜிஆர் என்பதை ஜெயலலிதா எப்போதுமே மறுத்ததில்லை!

நன்றி:- த ஹிந்து

# தமிழகத்தின் நீண்ட கால முதல்வர் என்ற சாதனையை நிகழ்த்த விடாத உயிரிழப்பு



முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 2 சாதனைகளை விஞ்சியவர் ஜெயலிதா. நீண்டகால முதல்வர் என்ற கருணாநிதியின் சாதனையை முறியடிக்கும் முன் விதி அவரது உயிரைப் பறித்துக்கொண்டது.

தமிழக முதல்வராக இருந்த அண்ணாவின் மறைவுக்குப் பிறகு தமிழக முதல்வராக முதல்முறையாக கருணாநிதி 1969ஆம் ஆண்டு பொறுப்பேற்றபோது அவரது வயது 44 ஆண்டுகள், 8 மாதங்கள்.

தமிழகத்தில் இளம் வயதில் முதல்வராகப் பொறுப்பேற்றவர் என்ற கருணாநிதியின் இந்தச் சாதனையை 22 ஆண்டுகள் கழித்து 43 வயது, 4 மாதங்களில் 1991 ஆண்டு ஜூன் 24ஆம் முதல் முறையாக முதல்வராகப் பொறுப்பேற்று ஜெயலலிதா முறியடித்தார்.

தமிழகத்தில் 2006ஆம் ஆண்டு கருணாநிதி முதல்வரானபோது, தமிழகத்தில் அதிக முறையாக 5ஆவது முறை முதல்வரானதே சாதனையாக இருந்த நிலையில் 2016ஆம் ஆண்டு மே 23 ஆம் திகதி 6ஆவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்று அதிகமுறை முதல்வர் என்ற சாதனையையும் ஜெயலலிதா விஞ்சினார்.

தமிழக முதல்வர் பொறுப்பை நீண்ட காலம்- 6.868 நாட்கள். அதாவது 18 ஆண்டுகள் 10 மாதங்கள் வகித்தவர் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

அண்ணா மறைவுக்குப் பிறகு 1969ஆம் ஆண்டு முதல் முறையாக முதல்வராகப் பொறுப்பேற்ற கருணாநிதி 5 முறை முதல்வராகி கடந்த 42 ஆண்டுகளில் சுமார் 19 ஆண்டுகள் முதல்வர் பொறுப்பு வகித்துள்ளார்.

தமிழக முதல்வராக ஜெயலலிதா 1991ஆம் ஆண்டு முதல் முறையாக முதல்வராகி 5 ஆண்டு காலம் முழுமையாக முதல்வர் பொறுப்பு வகித்தார். அதன் பின், 2001 ஆம் ஆண்டு 2ஆவது முறையாக முதல்வரானார்.

டான்சி வழக்கு காரணமாக அதே ஆண்டில் பதவி விலகிய ஜெயலலிதா, மீண்டும் 2002 ஆம் ஆண்டு முதல்வராகப் பொறுப்பேற்று 2006ஆம் ஆண்டு வரை சுமார் நான்கரை ஆண்டுகள் முதல்வராகப் பொறுப்பு வகித்தார்.

2011ஆம் ஆண்டு முதல்வராகப் பொறுப்பேற்று 3 ஆண்டு 4 மாதங்கள் முதல்வர் பொறுப்பில் இருந்த நிலையில், சொத்துக் குவிப்பு வழக்கு காரணமாக 2014இல் பதவி விலகி, மீண்டும் 2015 ஆம் ஆண்டு பொறுப்பேற்று அதிமுக ஆட்சிக் காலம் முடியும் வரை என சுமார் நாலே கால் ஆண்டுகளுக்கு மேலாக என இதுவரை 5.045 நாட்கள் அதாவது 13 ஆண்டுகள் 10 மாதங்கள் முதல்வர் பொறுப்பில் இருந்தார்.

ஜெயலலிதா மரணமடைந்த நிலையில், 14 ஆண்டுகள் நான்கரை மாதங்கள் என 5.242 நாட்கள் தமிழக முதல்வராக இருந்து தமிழகத்தின் நீண்ட கால முதல்வர்கள் பட்டியலில் 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 2 சாதனைகளை முறியடித்த நிலையில், நீண்ட கால முதல்வர் சாதனையை அவர் நிகழ்த்தும் முன் அவரது உயிர் பிரிந்தது. (இ-7)

# வைத்தியருக்காக நீண்டநேரம் காத்திருந்த நோயாளர்கள்



(கரணவாய்)

கிளினிக்குக்குச்சென்றநோயாளர்கள் வைத்தியர் இன்மையால் நீண்டநேரம் காத்திருந்த சம்பவம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று புதன்கிழமை (07.12. 2016) இடம்பெற்றது.

இவ்வைத்தியசாலையில் நீரிழிவு நோயாளர்களுக்கான கிளினிக்குகள் பிரதி புதன் கிழமை தோறும் நடைபெற்று வருகின்றன. கிளினிக்குகளில் சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.

ஒரு புதன்கிழமை மட்டும் 300 இற்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகின்றனர்.

இவர்களுக்கு நான்கு வைத்தியர்கள் நியமிக்கப்பட்டால் மட்டுமே நோயாளர்கள் நேர காலத்துடன் வீடு திரும்பக் கூடிய நிலை காணப்படுகிறது. ஆனால் நேற்று கிளினிக்கு வந்த நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு அங்கு வைத்தியர்கள் எவரும் காணப்படவில்லை.

இதனால் நோயாளர்கள் நீண்டநேரமாக காத்திருக்க வேண்டிய நிலை காணப்பட்டது. முற்பகல் 10 மணியளவில் ஒரு வைத்தியர் மட்டும் நோயாளர்களைப் பார்வையிட்டார்.

300 இற்கு மேற்பட்ட நோயாளர்களை ஒரு வைத்தியர் 10 மணிக்கு பின்னர் பார்வையிட்டு எத்தனை மணிக்கு முடிப்பது என நோயாளர்கள் கேள்வி எழுப்பினர்.

கிளினிக்குக்கு அதிகளவு நோயாளர்கள் வருவதனால் அவர்களது நலன்களை நோயாளர் நலன்புரிச் சங்கம் கவனிக்க வேண்டும் எனவும் வைத்திய அத்தியட்சகரும் இது குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனவும் நோயாளர்கள் தரப்பில் கூறப்பட்டது. (இ-60)


## 8ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் சுப்பையா தட்சணாமூர்த்தி
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மண்ணில் :- 01.08.1933
விண்ணில் :- 07.12.2008

அன்பின் ஆசானே
பண்பில் பெரியோனே
பாசமிகு எங்கள்-
அப்பாவே
அல்லும் பகலும்
அயராது உழைத்து
எமைப் பேணி வளர்த்த
எம் பெருந்தகையே...
மண்ணுலகம் போற்ற
வாழ்ந்த தாங்கள்
விண்ணுலகம் சென்று
எட்டு ஆண்டுகளானதோ
எங்கள் எண்ணமெல்லாம்
உங்களின்
அழியா நினைவுகளுடன்
என்றென்றும்...


(C-6597)

இணுவில். உங்கள் நினைவுடன் :- குடும்பத்தினர்.


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 921

Nagendram Home

மதி




சிந்து




தர்சி





ராதை




தர்மா

மனைவி:-என்னை பெண் பார்க்க வந்தன்னிக்கு நீங்க ரியானை தொடவே இல்லையே ஏன்?
கணவன்:-இரண்டாவது ஷாக் எதுக்குன்னு தான்...!

உஷாந்தன் நெய்மார்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஜெயலலிதாவின் மரணச் செய்தியால் 67 பேர் திடீர் மாரடைப்பால் மரணம்!


(சென்னை) தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவின் மரணச் செய்தியைக் கேட்ட, அறிந்த நிலையில் இதுவரை 67 பேர் திடீர் மாரடைப்பு காரணமாக மரணமடைந்துள்ளனர். தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கடந்த திங்கட்கி ழமை இரவு 11.30 மணியள வில் சென்னை அப்பலோ வைத்தியசாலையில் காலமானார். அம்மா என்று தமிழக மக்களால் அழைக்கப்பட்ட அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளரான செல்வி ஜெயலலிதா ஜெயராம் மாரடைப்பால் மரணமானார் என்று அப்பலோ வைத்தியசாலை அதிகாரபூர்வமாக அறிவித்த நிலையிலேயே நேற்றுவரை 67 பேர் உயிரிழந்துள்ளனர். ஜெயலலிதாவின் மரணச் செய்தியைக் கேட்டே இவர்கள் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் 66 பேர் திடீர் மாரடைப்பால் மரணமடைந்த அதேவேளை புதுச்சேரியிலும் ஒருவர் உயிரிழந்தார். மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் உடல் நேற்று முன்தினம் மாலை சென்னை மெரீனா கடற்கரையிலுள்ள எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் அவரது சமாதி அருகே புதைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## யாருக்குமே அஞ்சாதவர் சோ
## ரஜினி நேரில் கண்ணீர் அஞ்சலி

(சென்னை)

மறைந்த அரசியல் விமர்சகர், மூத்த பத்திரிகையாளர் சோ ராமசாமியின் உடலுக்கு நேரில் சென்று கண்ணீர் அஞ்சலி செலுத்தினார் நடிகர் ரஜினிகாந்த்.

பன்முகம் கொண்ட ஆளுமையான சோ ராமசாமி நேற்று அதிகாலை மாரடைப்பால் காலமானார்.


கோப்புப்படம்

அவரது உடலுக்கு திரைப பிரபலங்கள், அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

உடல்நலக் குறைவால் வைத்தியசாலையில் உயிர் பிரிந்தது.

சோவின் நெருங்கிய நண்பரான நடிகர் ரஜினிகாந்த் நேற்று அவரது உடலுக்கு நேரில் அஞ்சலி செலுததினார். பின்னர் செய்தியளர்களிடம் கூறுகையில்,

"சோ மிகச் சிறந்த பத்திரிகையாளர். பத்திரிகையாளர்களில் ஒரு ஜாம்பவான்.

சோ எனது மிகச் சிறந்த நண்பர்... தனது கருத்துக்களைச் சொல்வதில் யாருக்கும் அஞ்சாதவர். அவரை இழந்து வாடும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். சோவின் ஆத்மா சாந்தியடைய ஆணடவனைப் பிரார்த்திக்கிறேன்" என்றார். (இ-7-10)

## சோ ராமசாமி காலமானார்

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பத்திரிகை ஆசிரியர்சோராமசாமி நேற்றுக காலமானார்.

துக்ளக் இதழின் ஆசிரியரும் நடிகரும் பிரபல எழுத்தாளருமான சோ ராமசாமி உடல்நலம் பாதிக்கப்பட்டு சென்னை அப்பலோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு வைத்தியர்கள் தீவிர சிகிச்சை அளித்து வந்தனர்.



இந்த நிலையில் சோ ராமசாமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவருக்கு வயது 82. அதிகாலை 4.40 மணிக்கு சோ உயிர் பிரிந்ததாக, அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

சோ காலமானதை அவரது வைத்தியர் விஜய் சங்கர் உறுதி செய்துள்ளார். முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா மரணமடைந்து இரண்டு நாட்கள் முழுமையாக முடிவதற்குள் சோ ராமசாமி உயிரிழந்துள்ளார்.

ஜெயலலிதாவும் சோ ராமசாமியும் நெருங்கிய நணபர்களாக இருந்து வந்தனர். அரசியலில் ஜெயலலிதாவுகது சோ ராமசாமி ஒரு சிறந்த ஆலோசகராக இருந்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பத்திரிகைத்துறை ஜாம்பவான் சோ
### ஸ்டாலின் புகழாரம்–அழகிரி அஞ்சலி

(சென்னை)



பத்திரிகைத்துறையில் மிகச்சிறந்த ஜாம்பவான் சோ என்று தி.மு.க. பொருளாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

பிரபல பத்திரிகையாளரும் எழுத்தாளருமான சோ என்கிற சோ ராமசாமி நேற்று காலமானார். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவருக்கு மாரடைப்பு ஏற பட்டு உயிர் பிரிந்ததாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை அவரது உயிர் பிரிந்ததாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக உடல்நலக் குறைவு காரணமாக தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தநிலையில், சிகிச்சை பலனின்றி அவர் உயிர் பிரிந்துள்ளது.

பத்திரிகை, நாடகம், நடிகர், சட்டத்தரணி என பன்முகத்துறையில் திறமை பெறறவராக சோ விளங்கினார். துக்ளக் என்ற பிரபல அரசியல் வார இதழை கடந்த 1970 ஆம் ஆண்டிலிருந்து நடத்தி வந்தார்.

உடல்நிலை சரியில்லாத நிலையிலும் தனது பணியை விடாது செய்து வந்தார் சோ. சட்டத்தரணியாகயிருந்தாலும் 200 இற்கும் மேற்பட்ட திரைப படங்களில் முக்கிய கதாப் பாத்திரங்களில் நடித்துள்ளார் சோ. 14 திரைப்படங்களுக்கு கதாசிரியரான சோ, 4 திரைப்படங்களை இயக்கியும் உள்ளார்.

பல்வேறு படங்களில் நகைச சுவை நடிகராக நடித்து பிரபலமடைந்தார் சோ.ராமசாமி.

சோ உடல் எம்.ஆர்.சி நகரில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அரசியல் பிரமுகர்களும், திரை உலக, பத்திரிகை உலக நணபர்களும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி வருவதோடு, இரங்கல்களை தெரிவித்து வருகின்றனர்.

சோ உடலுக்கு ஆடிட்டர் குருமூர்த்தி, கிரிக்கெட் வீரர் ஸ்ரீகாந்த், முன்னாள் எம்.எல்.ஏ எஸ்.வி. சேகர், நடிகர் வை.ஜி மகேந்திரன் ஆகியோர அஞ்சலி செலுத்தினர்.

சோவின் உடலுக்கு நேற்று தி.மு.க. பொருளாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான மு.க.ஸ்டாலின் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார், செய்தியாளர்களிடம் பேசிய ஸ்டாலின், பத்திரிகைத் துறையின் மிகச்சிறந்த ஜாம்பவானாக திகழ்ந்தவர் சோ என்று புகழாரம் சூட்டினார். தி.மு.க. தலைவர் கருணாநிதியிடம் கருத்து வேறுபாடு கொணடிருந்தாலும் சிறந்த பணபாளர் என்றும் கூறினார்.

முன்னாள் மத்திய அமைசசர் மு.க.அழகிரி நேற்று நேரில் சென்று சோ உடலுக்கு அஞ்சலி செலுத்தினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போது, மிகச்சிறந்த அறிவாளி சோ என்று கூறினார். தனது தந்தையுடன் கருத்து வேறுபாடு இருந்தாலும் அரசியல் சாணக்கியராக திகழ்ந்தவர் என்று அழகிரி கூறினார். (இ-7)

## மறைந்த பத்திரிகையாளர் சோவிற்கு பிரதமர் இரங்கல்


கோப்புப்படம்

(சென்னை)

மறைந்த பத்திரிகையாளர் சோவிற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

துக்ளக் இதழின் ஆசிரியரும் அரசியல் ஆலோசகரும் பழம்பெரும் நடிகருமான 'சோ' உடல்நலக்குறைவு காரணமாக, செனனை அப்பலோ வைத்தியசாலையில் நேற்றுக் காலமானார். அவரது உடல் எம்.ஆர்.சி நகரில் உள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஏராளமானோர் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

Narendra Modi

Cho Ramaswamy was a multidimensional personality, towering intellectual, great nationalist & fearless voice who was respected and admired.

8:20 AM - 7 Dec 2016

Narendra Modi

Above all, Cho Ramaswamy was a dear friend. I have been to his annual readers meeting which were an unprecedented editor reader interface.

8:20 AM - 7 Dec 2016

**Narendra Modi**

Cho Ramaswamy was insightful, frank & brilliant. Pained by his demise. Condolences to his family & countless readers of Thuglak.

இவ்வாறு 'சோ' மறைவிற்கு டுவிட்டரில் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ள பிரதமர் மோடி, வெளிப்படைத் தன்மையுடன் பழகக்கூடியவர் என்றும், சிறந்த அறிவாளி என்றும் குறிப்பிட்டுள்ளார். அவர் சிறந்த தேசியவாதி, பன்முகத் தன்மை கொணடவர், அச்சமின்றி பேசக்கூடியவர் என்றும் புகழாரம் சூட்டியுள்ளார். எல்லாவற்றிற்கும் மேலாக சோ ராமசாமி தனது நெருங்கிய நண்ப்ர் என்றும் கூறியுள்ளார். சோவை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், துக்ளக் வாசகர்களுக்கும் ஆழ்ந்த இரங்கல் தெரிவிப்பதாக பதிவிட்டுள்ளார்.

சோவின் உடலுக்கு பாரதிராஜா, எஸ்.வி.சேகர், வை.ஜி. மகேந்திரன், ஆடிட்டர் குருமூர்த்தி, ஏ.வி.எம்.சரவணன், நடிகர் நெப்போலியன், மு.க. அழ கிரி, சாஸ்த்ரா பல்கலைக்க ழக தலைவர் சேதுராமன் உள்ளிட்டோர் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினர். (இ-7)

## ஏமனில் படகு திடீர் மாயம்
## 60 பேர் பலியானதாக அச்சம்

உள்நாட்டுப்போர் நடந்து வரும் ஏமனில் படகு ஒன்று திடீரென மாயமானது. அதில் பயணம் செய்த 60 பேர் கடலில் மூழ்கி பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

உள்நாட்டுப் போர் நடந்து வரும் ஏமனில் ஹட்ராமாவ்த் பகுதியைச் சேர்ந்தவர்கள் படகு மூலம் கடலில் பயணம் செய்தனர். சொகோட்ரா தீவு அருகே சென்ற போது அந்த படகு நேற்று முன்தினம் மாலை திடீரென மாயமானது. அதைத் தொடர்ந்து அப்படகை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அது கிடைக்கவில்லை. எனவே அதில் பயணம் செய்த 60 பேரும் கடலில் மூழ்கி பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது. (இ-7-10)

# இரும்புப் பெண்மணி ஜெயலலிதாவுக்கு மணலால் அஞ்சலி

ஒடிசாவைச் சேர்ந்த மணல் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக் ஜெயலலிதாவின் முகத்தை மணல் ஓவியமாக உருவாக்கி தனது இறுதி மரியாதையை செலுத்தியுள்ளார்.

சென்னை அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த முதல்வர் ஜெயலலிதா கடந்த திங்கட்கிழமை இரவு 11.30 மணிக்கு காலமானார். அவரது உடலுக்கு பல பிரமுகர்கள் வந்து அஞ்சலி செலுத்தியிருந்ததுடன், இலங்கை உட்பட பல்வேறு நாடுகளில் இருந்தும் இரங்கல் செய்திகள் வெளியாகின.

ஜெயலலிதாவுக்கு மரியாதை செலுத்தும் விதமாக பிரபல மணல் சிற்பக்கலைஞரான சுதர்சன் பட்நாயக் ஒடிஷா மாநிலம் பூரி கடற்கரையில் மணல் சிற்பம் ஒன்றினை உருவாக்கியுள்ளார். இச்சிற்பத்தினை உருவாக்கி அதில் "இரும்புப் பெண்மணிக்கு அஞ்சலி" என்ற வாசகத்தினையும் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)







## சசிகலா VS ஓபிஎஸ் அதிமுக இரண்டாக உடைவது உறுதி

### சுவாமி பரபரப்பு பேட்டி



(டில்லி)

அ.தி.மு.க. இரண்டாக உடைவது உறுதி என்று பாரதிய ஜனதாவின் ராஜ்ய சபாவின் எம்.பி. சுப்பிரமணியன் சுவாமி கூறியுள்ளார்.

தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா உடல்நலக் குறைவால் காலமானார்.

அவரது உடல் நேற்று முன்தினம் மாலை சென்னை மெரீனா கடற்கரையில் எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் அடக்கம் செய்யப்பட்டது. ஜெயலலிதா மறைவைத் தொடர்ந்து அ.தி.மு.கவின் எதிர்காலம் என்ன என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த நிலையில் சுப்பிரமணியன் சுவாமி அ.தி.மு.க. உடையும்என்று கூறியுள்ளார்.

இது தொடர்பாக சுப்பிரமணியன் சுவாமி கூறியுள்ளதாவது,

அ.தி.மு.க. நிச்சயமாக உடைவது உறுதி. சசிகலா கட்சிப் பொறுப்பை ஏற்கும் நிலையில் ஆட்சியையும் கட்சியையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க நினைப்பார்.

இதனால் முதல்வர் ஓ. பன்னீர்செல்வத்தால் சுதந்திரமாக செயற்பட முடியாது. ஓ. பன்னீர்செல்வத்தைப் பொறுத்தவரையில் தம்முடைய குடும்பத்தில் இருந்து ஒருவரைத்தான் சசிகலாவுக்கு எதிராக முன்னிறுத்துவார். ஓ. பன்னீர்செல்வத்துக்கு கட்சியில் செல்வாக்கு இல்லை. சசிகலாவுக்கோ அரசியல் அறிவு இல்லை. இவ்வாறு சுப்பிரமணியன் சுவாமி கூறியுள்ளார். (இ-7)

# இந்தோனேஷியாவில் பாரிய நிலநடுக்கம் 60 பேர் இடிபாடுகளில் சிக்கி உயிரிழப்பு







(ஜகார்த்தா)

இந்தோனேசியா நாட்டின் சுமாத்ரா தீவை நேற்று தாக்கிய நிலநடுக்கத்துக்கு 60 பேர் பலியாகினர். இடிபாடுகளுக்குள் சிக்கித் தவிக்கும் பலரை மீட்கும் பணி முழுவீச்சில் நடைபெறுகிறது.

இந்தோனேசியா நாட்டின் சுமாத்ரா தீவில் அமைந்துள்ள அச்சே பகுதியை நேற்று அதிகாலை சக்திவாய்ந்த நில நடுக்கம் தாக்கியது. ரிக்டர் அளவுகோலில் 6.5 அலகுகளாக பதிவான நில நடுக்கத்தால் பலவீடுகள் இடிந்து விழுந்தன. இடிபாடுகளுக்குள் சிக்கிக் கொண்ட மக்கள் வலியால் துடித்தனர்.

இஸ்லாமிய மக்கள் பெரும்பாலாக வாழும் நாடான இந்தோனேசியாவில் நேற்று அதிகாலை தொழுகைக்காக பலர் தயாராகிக் கொண்டிருந்த போது இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதால் பலர் தங்களது வீடுகளைவிட்டு வெளியில் ஓடி, வீதிகளில் தஞ்சம் அடைந்தனர். சுனாமி தாக்கலாம் என்ற அச்சத்தில் தங்களது வீடுகளுக்கு திரும்பிச் செல்ல பலர் தயக்கம்காட்டினர்.

அடுத்தடுத்து, ஐந்துமுறை நில அதிர்வுகளும் ஏற்பட்டதால் வீடுகள் மட்டுமின்றி, கடைகள், மசூதிகள் உள்ளிட்ட பல கட்டடங்கள் மண்மேடாகிப் போனது. இடிபாடுகளுக்குள் சிக்கித் தவிக்கும் பலரை மீட்கும் பணி மூழுவீச்சில் நடைபெறுகிறது.

நேற்றுக்காலை வெளியான தகவல்களின்படி, 18 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாக தெரியவந்தது. காயமடைந்தவர்கள் அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டனர். அங்கு உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வரும் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்பட்டது. அதற்கேற்ப, நேற்று நண்பகல் 12 மணியளவில் நிலநடுக்கத்துக்கு 60 பேர் உயிரிழந்ததாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7)

## வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது பி.எஸ்.எல்.வி.சி-36 ராக்கெட்

பூமியைக் கண்காணிக்கும் ரிசோர்ஸ் சாட்-2ஏ செயற்கைக்கோளுடன் பி.எஸ்.எல்.வி.சி-36 ரொக்கெட் நேற்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

பூமி கண்காணிப்பு மற்றும் தொலையுணர்வுக்காக கடந்த 2003 ஆம் ஆண்டு ரிசோர்ஸ் சாட்-1, 2011 ஆம் ஆண்டு ரிசோர்ஸ் சாட்-2 செயற்கைக்கோள்களை இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (இஸ்ரோ) வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. இதனைத் தொடர்ந்து தற்போது 1,235 கிலோ எடை கொண்ட 3ஆவது செயற்கைகோள் ரிசோர்ஸ் சாட்-2ஏ என்ற செயற்கைக்கோள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்கைக்கோள் திட்டமிட்டப்படி துருவப்பகுதியின் குறிப்பிட்ட சுற்றுவட்டப் பாதையில், பி.எஸ்.எல்.வி. சி-36 ரொக்கெட் மூலம் நேற்று புதன்கிழமை முற்பகல் 10.24 மணிக்கு ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் உள்ள முதலாவது ஏவுதளத்தில் இருந்து விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டது.

இறுதிக்கட்ட பணியான கவுண்ட்டவுன் நேற்று முன்தினம் 10.25 மணிக்கு தொடங்கி நேற்று முற்பகல் 10.24 மணிக்கு நிறைவடைந்த உடன் பி.எஸ். எல்.வி. சி-36 ரொக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

இயற்கை வளங்களை பல்வேறு கோணங்களில் துல்லியமாக படம் எடுக்க உதவும் 3 கமராக்கள் பொருத்தப்பட்டுள்ள இந்த செயற்கைக்கோள் பூமியில் இருந்து 817 கிலோ மீற்றர் உயரத்தில் சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தப்படுகிறது. இதன் ஆயுட்காலம் 5 ஆண்டுகள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## ஜெயலலிதாவின் இறுதிச் சடங்கில் வழக்கத்திற்கு மாறான நிகழ்வுகள்



மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் உடல் மெரீனா கடற்கரையில் எம்ஜிஆர் சமாதிக்கு அருகே அடக்கம் செய்யப்பட்டது. இந்த ஈமச்சடங்கில் வழக்கத்திற்கு மாறான இரண்டு நிகழ்வுகள் கவனிக்கப் படுகின்றன.

முதலாவதாக ஜெயலலிதாவின் உடல் எரிப்பதற்கு பதிலாக புதைக்கப்பட்டுள்ளது. வைஷ்ணவிதே பிராமணிய முறைப்படி இறந்தவர்களின் உடலை எரிப்பது தான் வழக்கம். ஆனால் அதற்கு மாறாக உடல் புதைக்கப்பட்டுள்ளது.

இரண்டாவதாக ஜெயலலிதாவின் தோழி சசிகலா தலைமையில் ஜெயலலிதாவின் அண்ணன் மகன் தீபக் ஜெயகுமார் இறுதிச்சடங்குகளை செய்து முடித்தார். இந்து முறைப்படி பெண்கள் இறுதிச்சடங்குகள் செய்வதற்கோ, செய்யும் இடத்திலே இருக்கவோ அனுமதிக்கப்படுவதில்லை. 6.05 மணிக்கு ஜெயலலிதாவின் உடல் சந்தனப்பேழையில் வைத்து புதைக்கப்பட்டது.

மக்கள் வெள்ளத்தில் ஜெயலலிதாவின் இறுதி ஊர்வலம் நடைபெற்றது. நாடெங்கும் உள்ள தலைவர்கள் பலரும் நேரில் அஞ்சலி செலுத்தினர். 60 குண்டுகள் முழங்க முழு அரசு மரியாதையுடன் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. (இ-7-10)

## உளவு பார்த்த குற்றச்சாட்டில் 15 பேருக்கு தூக்குத்தண்டனை

ஈரான் நாட்டிற்காக உளவு பார்த்த குற்றச்சாட்டில் 15 பேருக்கு தூக்குத் தண்டனை விதித்து சவுதி அரேபிய நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

ஈரான் நாட்டிற்காக உளவு பார்த்ததாக 30 பேரை சவுதி அரேபிய பொலிஸார் கைது செய்தனர். மேலும், ஒரு ஈரான், ஒரு ஆப்கான் நாட்டைச் சேர்ந்தவர்களும் இதே குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கின் விசாரணை சவுதி அரேபியாவில் உள்ள நீதிமன்றம் ஒன்றில் நடைபெற்று வந்தது. 10 மாதங்களாக சுமார் 160 முறை விசாரணை நடைபெற்றது.

இந்த வழக்கில், ஈரான் நாட்டிற்காக உளவு பார்த்த குற்றச்சாட்டில் 15 பேருக்கு தூக்கு தண்டனை விதித்து சவுதி அரேபியா நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

மீதமுள்ள 17 பேர் மீதுள்ள குற்றச்சாட்டு குறித்து நீதிமன்றம் இன்னும் எந்தவொரு கருத்தும் தெரிவிக்கவில்லை.

அரசு தரப்பு சட்டத்தரணிகள் குற்றவாளிகளுக்கு எதிரான ஆதாரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததை தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# தமிழக நவீன வரலாற்றில் சரித்திரம் படைத்த பெண்

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு புத்தகம் எழுதும் களப் பணிக்காக திராவிட கழகத் தலைவர் கி.வீரமணியைச் சந்தித்த போது, அவர் என்னிடம் சொன்னது நினைவுக்கு வருகிறது. 'சமூக நீதி காத்த வீராங்கனை' என்று பொது மேடையில், முதல்வர் ஜெயலலிதாவை அவர் பாராட்டியிருந்தார். பிராமணியத்தை எதிர்த்த திராவிட கழகத் தலைவரான அவர், பிராமணரான ஜெயலலிதாவைப் பாராட்டுவதும், பிராமண எதிர்ப்பிலிருந்து பிறந்த ஒரு திராவிடக் கட்சித் தலைவியாக ஜெயலலிதா இருப்பதும் முரண்பாடாகத் தெரியவில்லையா என்று கேட்டேன். இல்லவே இல்லை என்றார் அவர் அழுத்தமாக.



"ஜெயலலிதா பாசாங்குக்காரர் இல்லை. தான் ஒரு பகுத்தறிவுவாதி என்று என்றுமே சொன்னதில்லை. பெரியார் கனவு கண்ட புதுமைப் பெண்ணாக நான் அவரைக் காண்கிறேன். சுதந்திரமாக, துணிச்சலாக, நேர்மையாகச் செயற்படும் தன்மை உள்ளவராக. ஒரு பெண் எப்படி இருக்க வேண்டும் என்று பெரியார் நினைத்தாரோ அத்தகைய சிறப்புகளைக் கொண்டவர் அவர்.

இன்று மக்கள் மத்தியில் கட்சிக்கு அப்பாற்பட்டு மிக அதிகபட்ச செல்வாக்கையும் மதிப்பையும் அன்பையும் பெற்ற மக்கள் தலைவராக ஜெயலலிதா வளர்ந்திருப்பது, அவர் கடந்து வந்திருக்கும் பாதையைத் திரும்பிப் பார்க்கும்போது எனக்கு மிகப்பெரிய பிரமிப்பை ஏற்படுத்துகிறது. அரசியல் களத்தில் தலைமைப்பீடம் என்று வரும்போது பால், இன பேதம் என்பது இல்லை என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும், ஆணாதிக்கம் மிகுந்த இந்திய அரசியலில், முக்கியமாக தந்தை வழி மரபுசார்ந்த தமிழகத்தில் ஒரு பெண் நுழைவதும், அதில் வெற்றி பெறுவதும் அசாதாரண விடயம் என்பதில் சந்தேகமில்லை.

பெண் என்ற காரணத்தாலேயே பல முட்டுக்கட்டைகளையும் எதிர்ப்புகளையும் அவமானங்களையும் அவர் சந்திக்க நேர்ந்தது என்பது அவரது வாழ்க்கைச் சரித்திரத்தை அறிந்தவர்கள் நன்றாக உணர்வார்கள். ஆனால், மிக ஆச்சரியமான விடயம் என்னவென்றால், அந்த பலவீனத்தையே அவர் தனது பலமாக ஆக்கபூர்வ ஆயுதமாக மாற்றிக்கொண்டார்.

## தெய்வீக பிம்பம்

ஒவ்வொரு தோல்விக்குப் பின்னும் அவர் மீண்டு, அதிக பலத்துடன் எழுந்தது எப்படி? இனி அவர் அரசியல் வாழ்வு முடிந்தது என்று இரங்கற்பா பாடியவர்கள் அவரது தளராத முன்னேற்றத்தைக் கண்டு வாயடைத்துப்போனது ஏன்? ஒரு பிரபல நடிகையாக இருந்தவர், கர்நாடகத்தில் பிறந்தவர், திராவிட இயக்கம் எதிர்த்த பிராமண வகுப்பில் பிறந்தவர் – அனைத்திந்திய திராவிடக் கட்சியின் தலைவியாக, நான்குமுறை தேர்தலில் வெற்றி பெற்று இன்று மக்கள் ஆராதிக்கும் அன்னையாக, அவர் சார்ந்த கட்சி தன் இருப்புக்கு நம்பியிருக்கும் தலைவியாக, ரட்சிக்கும் தெய்வமாக உருவானது மகா பெரிய அதிசயமாகத் தோன்றுகிறது.

அவருடைய வாழ்வு சொல்லும் செய்தி மிகத் தெளிவானது – உற்றார், உறவினர், புரவலர் என்று யாருமற்ற' தனிநபராக ஒரு பெண் இந்திய அரசியலில் வெற்றி பெறுவதும் தலைமைப் பீடத்தில் தொடர்ந்து இருப்பதும் அசகாயசூரத்தனம். இன்னொரு செய்தியும் முக்கியமானது: அத்தகைய போராட்டம் மிகுந்த வாழ்வில் எப்படி ஒரு பெண் தன்னையே மாற்றிக்கொள்வாள் என்பது.

1983இல் ஜெயலலிதா நாடாளுமன்ற உறுப்பினராக டில்லி வந்தபோது, தமிழ்நாடு இல்லத்தில் ஒரு இந்திய பத்திரிகைக்காக பேட்டி காணச் சென்றேன். முன்னாள் நடிகை என்று சொல்ல முடியாத வகையில், மிக எளிமையாக, ஒப்பனை செய்யாத இயல்பான முகத்துடன் இருந்தார். நாடாளுமன்றத்தில் அவர் குஷ்வந்த் சிங் போன்ற அறிவுஜீவிகளின் நற்சான்றைப் பெற்றிருந்தார். வட இந்தியர்கள் இத்தகைய ஒரு பெண்ணைச் சந்தித்ததில்லை. நல்ல நிறத்துடன், சுத்தமான ஆங்கிலம் பேசும் முன்னாள் நடிகை, அவர்களை ஆச்சரியப்படுத்திய விடயமாக இருந்திருக்க வேண்டும். எனது பேட்டியின்போது ஜெயலலிதா மிகுந்த தன்னம்பிக்கையுடன் பேசினார்.

அநேகமாக எனது கேள்விகளுக்குச் சவால் விடுவதுபோலவே அவருடைய பதில்கள் இருந்தன. அவரது தலைவர் எம்.ஜி.ஆரைப் பற்றி நான் குதர்க்கமாக ஒரு கேள்வி கேட்டபோது, அவர் படபடத்தது இன்னமும் நினைவிருக்கிறது. டில்லியில் அமர்ந்துகொண்டு பேசாதீர்கள். தமிழ் நாட்டுக்கு வந்து பாருங்கள். மக்கள் அவரை எப்படி தெய்வமாக மதிக்கிறார்கள் என்று."

இப்போது நினைத்துப்பார்க்கும்போது தோன்றுகிறது – 'ஒருநாள் என்னையும் மக்கள் தெய்வமாகப் போற்றுவார்கள்' என்று அவர் சொல்லாமல் சொன்னாரோ? அன்று அது மிகப் பெரிய கற்பனைக் கூற்றாகத் தோன்றியிருக்கும். தமிழக ஆணாதிக்க அரசியல் சூழலில், பிராமண எதிர்ப்பு மிக்க சூழலில், தமிழ் எங்கள் மூச்சு என்று முழங்கிய வரலாற்றில், வீட்டில் தமிழைவிட கன்னடத்தை அதிக சரளத்துடன் பேசிய, மைசூரில் பிறந்த பிராமணரான ஜெயலலிதா, முன்னாள் நடிகை, ஒரு பெண், தமிழக முதல்வராவதா? எத்தனை அபத்தமான கற்பனை?

## அவமானத்துக்கான பரிகாரம்

அதிசயம், ஆனால் உண்மை. அசாத்தியம் என்று நினைத்ததை அவர் தனி நபராகச் சாத்தியமாக்கினார். எம்ஜிஆரின் வாரிசு அவர்தான் என்று கட்சித் தொண்டர்கள் நினைத்து அவரை ஆதரித்தாலும், தலைமைப் பண்புகள் இல்லாமல் அவர் கட்சியின் தலைவராகத் தொடர்ந்து இருப்பது சாத்தியமில்லை. அதுவும் எப்படிப்பட்ட தலைவி! அவருக்கு அடுத்து எவரும் இல்லை என்பது போன்ற சக்தி வாய்ந்த தலைவி! பாலின, மத, இன, கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்ட வீச்சை அவரது ஆளுமை அடைந்ததற்கு அவரது சொந்த முயற்சியும் மதியூகமுமே காரணம் என்று தோன்றுகிறது.

அவர் முதல் இருமுறை முதல்வராக இருந்த காலகட்டங்களில், நான் தமிழ் 'இந்தியா டுடே'யின் ஆசிரியையாக இருந்தபோது, மிகக் கூர்ந்து அவரது ஆட்சியையும் செயற்பாடுகளையும் கவனித்திருக்கிறேன். அவருடைய அமைச்சர்கள், ஆண்கள் சாஷ்டாங்கமாக அவர் முன் விழுந்து வணங்குவதை அவர் புன்னகையுடன் ஏற்றதைக் கண்டு முகம் சுளித்திருக்கிறேன். இப்போது புரிகிறது, அதுவும் அவரது ஒரு உத்தி என்று. ஆண்களைச் சற்று எட்டி நிறுத்த வேண்டிய அவசியம் தமிழகச் சூழலில் மிக அவசியமாக இருந்தது.

எந்த ஆணுடனும் பதவிக் காலத்தில் அவர் நெருக்கமாகப் பேசினார் என்கிற பேச்சுக்கு இடமளித்தால், மக்கள் மனதில் அவர் மீதான மதிப்பு குறைந்துபோகும் என்று அவருக்குத் தெரியும். தவிர, எதிரணி அதைச் சாக்காக வைத்து அவதூறு பரப்பும். அதனால், விழட்டும் ஆண்கள் அவர் காலடியில். ஆண் உலகம் அவரை அவமானப்படுத்தியதற்கான பரிகாரமாக இருக்கட்டும்.

## ஃபீனிக்ஸ் பறவை!

அவர் தவறுகள் செய்தபோது தயங்காமல் விமர்சித்திருக்கிறேன். மாநில முதல்வராக அவர் பணியாற்றுகையில், பெண் என்கிற காரணத்தால் தவறுகளை மன்னிக்க முடியாது என்று தோன்றும். ஒரு பெண்ணாக அவரிடமிருந்து மென்மையான அணுகுமுறையை எதிர்பார்த்தேன்.

அவரது எதேச்சாதிகார, அடக்குமுறைச் செய்திகள் வந்தபோது ஏமாற்றத்துடன் கூசிப்போயிருக்கிறேன். சமூகத்தில் முக்கிய பதவியில், மாநிலத் தலைமைப் பதவியில் இருக்கும் பெண், அதிகக் கண்டனத்துக்கும் விமர்சனத்துக்கும் உள்ளாக நேரிடும் என்பது உண்மை. ஏனென்றால், அவர் ஆண் தலைவர்களிடமிருந்து வேறுபட்ட வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு இருக்கும்.

அதனாலேயே அவரை மக்கள் 1996 தேர்தலில் புறக்கணித்தார்கள். பிறகு, அவர் சிறையில் கிட்டத்தட்ட ஒரு மாதம் இருந்தபோது நிலைமை மாறிவிட்டது. ஏகப்பட்ட ஊழல் வழக்குகள் அவர்மீது போடப்பட்டன. நகைகள், சொத்துகள், வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன. இனி அவருக்கு அரசியல் எதிர்காலமில்லை என்றார்கள். அவர் சொல்லிக்கொண்டதைப் போல அவர் ஃபீனிக்ஸ் பறவைதான். ஒவ்வொரு வீழ்ச்சிக்குப் பிறகும் அவர் தன்னைப் புதுப்பித்துக்கொண்டதே அவரது வெற்றிக்குக் காரணம் என்று தோன்றுகிறது.

அவரது தேர்தல் பிரசாரங்களை நேரில் சென்று பார்த்திருக்கிறேன். அலங்காரப் பேச்சு இருக்காது. நீண்ட பிரசங்கம் இருக்காது. ஆனால், கேட்பவர் நெஞ்சில் ஆணித்தரமாகப் பதியும் வகையில், எதிரியைத் தாக்குவதாக இருக்கும். காதிலும் கழுத்திலும் நகை இல்லாமல் அவர் மக்கள் முன்னால் நிற்கையில், பெண்கள் கூட்டம் உருகிப்போவதை நான் நேரில் கண்டேன். 'அந்தப் படுபாவி... எல்லாத்தையும் புடுங்கி வெச்சுக்கிட்டாராமில்லே' என்று பெண்கள் பேசினார்கள்.

ஜெயலலிதா புடைவை தலைப்பை விரித்து, "உங்கள் சகோதரி மடிப்பிச்சை கேட்கிறேன்" என்று சொன்னபோது, இது என்ன நாடகத்தனம் என்று நான் நினைத்தது உண்மை. ஆனால், அவருக்குப் பெண்களின் உணர்வுகள் புரிந்திருந்தன. 1996இல் அவரை நிராகரித்தவர்கள் அதை முற்றிலும் மறந்து 2001இல் அவருக்கு அமோக வெற்றியை அளித்தார்கள்.

ஆனால், அவர் தவறு செய்த போதெல்லாம் நிராகரித்தார்கள். அவர் சளைக்கவில்லை என்பது தான் ஆச்சரியம்.

அதைவிட ஆச்சரியம், அவர் தனது கட்சியைக் கட்டுக்குள் வைத்துக்கொண்டது. கட்சிக்கு அவரது முகமே பலம் என்பதால் இருக்கலாம். இருந்தும், ஒரு பெண் அதை சாதித்தது நம்ப முடியாததாக இருக்கிறது. வாக்கு வங்கி சரியவில்லை. எதிர்க்கட்சியை அடியோடு பலவீனப்படுத்தினார். எப்படிச் சாத்தியமாயிற்று? சகோதரி மிகச் சுலபமாக அம்மா ஸ்தானத்துக்கு மாற முடிந்தது.

அம்மாவின் பெயரிலேயே எல்லா மக்கள் நலத்திட்டங்கள் அவருடைய முகமே எங்கும். அரசாங்கத்தில் அவர் ஒருவரே பிரதானம். கட்சி அதை பவ்யத்துடன் ஏற்றுக்கொண்டது. அமைச்சர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டபோது, பேசாமல் ஏற்றுக்கொண்டார்கள். கட்சியில் சிறு முணுமுணுப்பு கிளம்பாது. அவரில்லாமல் அவர்கள் இல்லை. அவரே அவர்களுடைய சூத்திரதாரி, தெய்வம்.

## பெண்களின் நாயகி

பெண்களுக்கு என்று இருக்கும் பிரத்தியேகப் பிரச்சினைகளை அவர் புரிந்துகொண்டார். பள்ளிகளுக்குச் செல்லும் மாணவிகளுக்கு சைக்கிள் கொடுத்தது பெரிதில்லை. சானிடரி நாப்கின்கள் தேவை, கழிப்பறை தேவை என்று செயற்பட்டது புதுமையானது. பேருந்து நிலையங்களில் இளம் தாய்மார்களுக்குக் குழந்தைக்குப் பாலூட்ட வசதியாகத் தனியாக ஒரு அறைக்கு ஏற்பாடு செய்ததும் புதுமை.

அதனாலேயே பெருவாரியான பெண்கள் அவருக்கு விசுவாசிகளாக மாறிப்போனார்கள். அவர் நோய்வாய்ப்பட்டபோது கோயில்களுக்குச் சென்று பூஜை செய்தார்கள். அங்கப்பிரதட்சணம் செய்தார்கள். காவடி எடுத்தார்கள். அவர் சிறையில் இருந்தபோதும், நீதிமன்றத் தீர்ப்புக்கு முன்பும் கடவுளை வேண்டினார்கள். அம்மா சோதனைகளைக் கடந்தபோது கடவுள் அம்மாவின் பக்கம் என்று நம்பினார்கள்.

அமைச்சர்களும் அதிகாரிகளும் அவரைக் கண்டு அஞ்சிச் செயற்படுவதுபோல எந்த மாநிலத்திலும் கண்டதில்லை. அவரை ஆராதிக்கும், அன்பு செலுத்தும் மக்கள் கூட்டம் அவருக்கு இருந்தது போல தமிழகத் தலைவர்கள் வேறு எவருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த இருநிலைகளையும் தனது அடையாளமாக இருத்திக்கொண்ட பெண்மணியை வேறு எங்கும் பார்க்க முடியாது.

சாதாரணப் பெண்ணாக வாழ்ந்திருக்க முடியும். அவமானங்களைக் கண்டுகொள்ளாமல், சோதனைகளுக்குச் சவால் விடாமல் இருந்திருக்க முடியும். வரலாற்றிலிருந்து மறைந்திருக்க முடியும். ஆனால், அவரது வாழ்க்கை அசாதாரணமானதாயிற்று. வரலாறு படைத்தது. ஏனென்றால் அவர் ஜெயலலிதா!

### மதங்களுக்கு இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தி

# நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப குழு

## ஜனாதிபதி மைத்திரி விசேட நடவடிக்கை

*(கொழும்பு)*

***அனைத்து மதங்களுக்குமிடையில் பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தி நாட்டில் மத நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்காக செயற்படும் முழுநேர விசேட செயற்குழுவை நியமிக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.***



இக்குழுவானது பௌத்த சாசன அமைச்சு, இந்து மத விவகார அமைச்சு, கிறிஸ்தவ விவகார அமைச்சு, முஸ்லிம் விவகார அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்களால் முன்மொழியப்படும் விசேட பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக இருக்குமெனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சர்வமத தலைவர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார். பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி மதத்தலைவர்கள் மற்றும் பௌத்த மத அமைப்புக்களின் பிரதிநிதிகள் இக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

மத நல்லிணக்கத்துக்கு அச்சுறுத்தலாக தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் மதங்களுக்கிடையிலான சபை மூலம் குறித்த முரண்பாடுகளுக்கு தீர்வு காண்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

நாட்டில் மத ரீதியாக ஏற்படக்கூடிய பிரச்சினைகளின் போது நடவடிக்கையெடுப்பதற்காக அனைத்து மத தலைவர்களாலும் பெயரிடப்படும் விசேட பிரதிநிதிகளை உள்ளடக்கிய அணியொன்றை நியமிப்பதற்கும் இந்த சந்திப்பில் முன்மொழியப்பட்டது.(இ-7-10)

## மகிந்தவை சந்திக்க முயற்சியா?

## மறுக்கிறது அமெரிக்க தூதரகம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வெளியாகிய செய்திகளில் எதுவித உண்மையும் இல்லை என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சீன விஜயத்தை முடித்துக் கொண்டு அண்மையில் நாடு திரும்பிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடுவதற்கான முயற்சிகளில் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் ஈடுபட்டு வருவதாக செய்திகள் வெளியாகின.

இதனை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முற்றாக மறுத்திருக்கிறது.

மகிந்த ராஜபக்ஷவை சந்திப்பதற்கு எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை என்று அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. (இ-7-10)

## கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரக வளாகம்

## புதிதாக 5.7 ஏக்கர் நிலத்தில் விரிவாக்கம்



இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் புதிதாக 5.7 ஏக்கர் நிலத்தில் விரிவாக கட்டப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் அமெரிக்கத் தூதரக வளாகத்தில் இடம்பெற்றது.

தற்போதுள்ள அமெரிக்கத் தூதரகத்தை ஒட்டியதாக வாங்கப்பட்ட காணியை உள்ளடக்கியதாக பாரிய தூதரக கட்டடத் தொகுதியை அமெரிக்கா அமைக்கவுள்ளது.

வோஷிங்டனில் இருந்து வந்திருந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், கடல்கடந்த நிர்மாண செயற்பாடுகள் பிரிவின் முதன்மைப் பிரதிப்பணிப்பாளர் வில்லியம் மோசர் மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் மற்றும் அதிகாரிகள் நேற்று முன்தினம் நடந்த ஆரம்ப நிகழ்வில் பங்கேற்றனர்.

தற்போதுள்ள கட்டடத் தொகுதியை உள்ளடக்கியதாக புதிதாக அமைக்கப்படவுள்ள தூதரக வளாகம், தூதரகப்பணியகம், மரைன் காவல் படைக்கான வதிவிடம், உதவி கட்டடங்கள் மற்றும் தூதரக சமூகத்துக்கான வசதிகளைக் கொண்டதாக இருக்கும்.

இந்த புதிய தூதரக வளாகம், தூதரகப் பணியாளர்களின் பாதுகாப்பான, நிலையான, உறுதித்தன்மையான, நவீன பணியிடமாக இருக்கும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

வோஷிங்டனில் உள்ள நிறுவனம் ஒன்றினால் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த தூதரக வளாகத் தொகுதியின் கட்டுமானப் பணிகளை அமெரிக்க நிறுவனம் ஒன்றே மேற்கொள்ளவுள்ளது. (இ-7-10)

## இன்று ஒரு தகவல்

### மனைவி பேச்சைக் கேட்கலாமா?

"நாம் சொல்வதைக் கேட்டுக்கிட்டு சும்மா கிட" என்ற காலமெல்லாம் மலையேறிவிட்டது. அன்று நான்கு சுவர்களைப் பெண்கள் எல்லையாக வகுத்துக் கொண்டார்கள். கணவன் பேச்சுக்கு மறு பேச்சுக் கிடையாது. அதிகமாக சிந்திக்கவும் மாட்டார்கள். இப்போது அப்படி இல்லை.

என் வாழ்வு உன்னோடு! என்று ஆகிவிட்ட பிறகு மனைவியின் கருத்து என்ன என்று அறிந்து கொள்ள முற்படுவதில் தவறில்லை. ஒரு கணவன் தவறான பாதையில் இறங்க முற்படும் போது மனைவியானவள் மனச்சாட்சியைவிடவும் வலிமையான ஒரு கருத்தைச் சொல்லக் கூடும்.

எந்தக் கருத்திற்கும் மாற்றுக் கருத்துக்கள் உண்டு. ஒரு செயலில் பிரியம் வைத்து விட்டவன் அதனுடைய விளைவுகளையும் நல்லது கெட்டதுகளையும் பெரும்பாலும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. அந்தச் செயலைப் பற்றி விருப்பு வெறுப்பின்றிச் சிந்தித்து வேறு கோணங்களைத் தரப் பிறரால் தான் முடியும். உரியவர்களால் முடியாது. ஆயிரமாயிரம் யோசனை சொல்கிற பலர், தங்களுக்குப் பிரச்சினை என்று வந்ததும் சரியான முடிவை எடுக்க முடியாமல் போவது இக் காரணம் பற்றியே.

மனைவி என்றில்லை; மகன் அல்லது மகள் சொன்னால் கூட ஒரு நல்ல கருத்தைக் கேட்டுக் கொள்ளலாம். நமக்குத் தோன்றாத ஒரு கருத்து நம்மைவிட இளையவர்களுக்கும்– ஏன் – இளைத்தவர்களுக்கும் தோன்றினால் கூட அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தவறில்லை!

ஒரு முக்கியமான கட்டத்தில் ஒரு முடிவு எடுக்க வேண்டிய நிலையில் கணவன் தனியொருவனாக ஒரு முடிவு எடுக்கிறான் என்று வைத்துக் கொள்வோம், அவன் நினைப்பதற்கு நேர்மாறாக ஏதோ நடந்துவிடுகிறது என்று வைத்துக் கொள்வோம். அவ்வளவு தான், அவன் காலம் பூராகவும் மனைவியால் இடித்துரைக்கப்படுவான்.

ஒருவன் மனைவியுடன் கலந்து பேசாமல் தன் மகனை ஒரு பள்ளியில் சேர்த்தான். அவன் பெயில், இந்தப் பள்ளியில் ஏன் சேர்த்தீர்கள்? என்று பல வருடங்கள் வரை மனைவி புலம்பல்.

மனைவி பேச்சை மீறி ஒருவர் தன் மகளுக்கு மாப்பிள்ளை பார்த்தார். அவன் ஒரு குடிகாரப் பயல் என்பது பின்னர்தான் தெரிந்தது. மனைவி காலங்காலமாக அர்ச்சனை, ஏன் இந்தப் பொல்லாப்பு?

எந்த ஒரு பெரிய முடிவிலும் மனைவியின் பங்கும் இருக்க வேண்டும். இதன் மூலமாகப் பொறுப்பானது பகிர்ந்து கொள்ளப்படுகிறது. தீயது ஒன்று நடந்துவிட்டால் ஒருவருக்கு ஒருவர் ஆறுதலாக இருக்க முடியும். அது தனி முடிவாக இருக்கும் பட்சத்தில் தாங்க முடியாத கொடுமையாகிவிடும்.

மனைவி பேச்சைக் கேட்பது கேவலம் என்று உலகம் விமர்சிப்பதால், வெளி உலகத்திற்காகக் கணவர்கள் சற்று விழிப்பாக இருக்கலாம். மனைவி பேச்சைக் கேட்டாலும் வெளியில் அது தன் முடிவுதான் என்பது போல காட்டிக் கொள்ளலாம். புரியாத உலகின் முன் போலி நாடகம் ஆடுவதில் தவறில்லை.

மனைவி பேச்சைக் கேட்பது கேவலமல்ல. சுய சிந்தனையே இல்லாமல், எடுப்பார் கைப் பிள்ளையாகி, முந்தானை முடிச்சில் மயங்கி மனைவி பேச்சைத் தான் கேட்பேன் என்கிற நிலை இருக்கிறதே, அது தான் கேவலம்!

**லேனா தமிழ்வாணன்**

# சிறுவர்கள், பெரியவர்கள் இணைந்து அம்மாவுக்கு அஞ்சலி மலையகத் தோட்டங்களில் வெள்ளைக்கொடிகள் பறந்தன





மறைந்த தமிழக முதல்வரும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளருமான செல்வி. ஜெயலலிதாவின் மறைவையொட்டி நேற்று முன்தினம் மலையக மக்கள் அஞ்சலி நிகழ்வுகளில் ஈடுபட்டனர்.

அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த முதல்வர் ஜெயலலிதா கடந்த திங்கட்கிழமை இரவு 11.30 மணியளவில் மரணமடைந்தார் என்ற உத்தியோக பூர்வ தகவலையடுத்து தமிழகம் முழுவதும் சோகமயமாகியுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைக் குரலாக ஒலித்த ஜெயலலிதாவின் மரணத்தை முன்னிட்டு இலங்கையிலும் சில பகுதிகளில் இரங்கல் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில், மலையகத்தின் தோட்டப்பகுதிகளிலுள்ள ஆலயங்களிலும் பொதுஇடங்களிலும் பல்வேறு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

ஹற்றன், கொட்டகலை, மஸ்கெலியா, பொகவந்தலாவ, தலவாக்கலை, அக்கரப்பத்தனை மற்றும் டயகம போன்ற பகுதிகளிலும் மக்கள் அஞ்சலி செலுத்துகின்றனர் .

அக்கரப்பத்தனை எல்பியன் மற்றும் பெரிய நாகவத்தை போன்ற தோட்டங்களில் வெள்ளைக்கொடி பறக்கவிட்டு மெழுகுவர்த்தி வைத்து அஞ்சலி செலுத்தினர்.

மேலும் இதன்போது தோட்ட பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் அஞ்சலி செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# தமிழ் சினிமா வரலாறு

## திருமணத்துக்குப் பின் பத்மினி நடித்த 'தில்லானா மோகனாம்பாள்'

317

...இங்கிலாந்து ராணி எலிசபெத், ஜனாதிபதி வைத்தியர் ராஜேந்திர பிரசாத், பிரதமர் நேரு, நேபாள நாட்டு மன்னர், இந்தியாவின் கடைசி பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல் மவுண்ட்பேட்டன் பிரபு, மராட்டிய கவர்னர் ஸ்ரீ பிரகாசா, கேரள கவர்னர் வி.வி. கிரி, மத்திய அமைச்சர் கோபால் ரெட்டி, ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவையா உட்பட பல தலைவர்களிடம் இருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

### சிவாஜியின் தாயார்

சிவாஜிகணேசன் வெளியூர் சென்றிருந்ததால் அவர் தாயார் ராஜாமணி அம்மாள், தம்பி வி.சி.சண்முகம் ஆகியோர் வந்திருந்து வாழ்த்தினார்கள்.

பத்மினிக்கு ஏராளமான பரிசுகள் குவிந்தன.திருமண வரவேற்பையொட்டி எம்.எல்.வசந்தகுமாரியின் பாட்டுக்கச்சேரி நடந்தது.

திருமணத்துக்குப்பின் நடிக்க மாட்டேன் என்று பத்மினி அறிவித்து இருந்தபோதிலும் நடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. திருமணத்துக்குப் பின் சில சிறந்த படங்களில் அவர் நடித்தார். தில்லானா மோகனாம்பாள் ஒரு திரைக்காவியமாக அமைந்தது. திருமணத்துக்குப் பின் மருத்துவத்தில் உயர் படிப்பு படிக்க லண்டன் செல்ல விரும்பினார் வைத்தியர் ராமச்சந்திரன்.

திருமணம் நடப்பதற்கு முன்பே இது பற்றி பத்மினியிடமும் அவர் குடும்பத்தாரிடமும் ராமச்சந்திரன் பேசியிருந்தார். அவர்களும் அதற்கு சம்மதம் தெரிவித்து இருந்தனர்.

### லண்டனில் பத்மினி

அதன்படி 1961ஆம் ஆண்டு பிற்பகுதியில் ராமச்சந்திரனும் பத்மினியும் லண்டன் சென்றார்கள். உயர் மருத்துவக் கல்வி பயில அங்குள்ள பல்கலைக்கழகத்தில் ராமச்சந்திரன் சேர்ந்தார். இருவரும் ஒரு பங்களாவில் வசித்தனர்.

படிப்பு முடிந்ததும் ராமச்சந்திரனும் பத்மினியும் அமெரிக்காவில் குடியேறினார்கள். அங்கு நியூஜெர்சி நகரில் ராமச்சந்திரன் சொந்தமாக வைத்தியசாலை தொடங்கினார்.


### ஆண்குழந்தை

இதற்கிடையே பத்மினி, ராமச்சந்திரன் தம்பதிகளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பையனுக்கு பிரேம் ஆனந்த் என்று பெயர் சூட்டினார்கள்.

ஒருமுறை பத்மினி தன் கணவருடன் சென்னை வந்திருந்த போது அவர்களை பட அதிபர்கள் சந்தித்து பத்மினி மீண்டும் நடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

சில காரக்டர்களை பத்மினியால்தான் சிறப்பாக நடிக்க முடியும் என்று எடுத்துச் சொன்னார்கள்.

பத்மினி மீண்டும் நடிப்பதற்கு ராமச்சந்திரன் சம்மதம் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து பத்



மினி தமிழ் சினிமா உலகில் மறுபிரவேசம் செய்தார்.

### தில்லானா மோகனாம்பாள்

பத்மினி மீண்டும் படங்களில் நடிக்க முன்வந்ததை பட அதிபர்களும் ரசிகர்களும் வரவேற்றனர். சில அருமையான படங்களில் பத்மினி நடித்தார்.

குறிப்பாக ஏ.பி.நாகராஜன் டைரக்ஷனில் சிவாஜிகணேசனும் பத்மினியும் இணைந்து நடித்த தில்லானா மோகனாம்பாள் (1968) ஒரு திரைக்காவியமாக அமைந்தது. பத்மினியின் திரை உலக வாழ்க்கையில் அவருடைய மிகச் சிறந்த 10 படங்களை தேர்ந்தெடுத்தால் அதில் தில்லானா மோகனாம்பாள் நிச்சயம் இடம் பெறும்.

நாதஸ்வர வித்துவான் சிக்கல் சண்முக சுந்தரமாக சிவாஜிகணேசனும் நாட்டிய தாரகை தில்லானா மோகனாம்பாளாக பத்மினியும் அந்த கதாபாத்திரமாகவே மாறி நடித்தனர்.

1967இல் வெளிவந்த இரு மலர்கள் ஒரு காதல் காவியம். இதில் சிவாஜிகணேசன், பத்மினி, கே.ஆர்.விஜயா ஆகியோர் சிறப்பாக நடித்திருந்தனர்.

திருலோகசந்தர் டைரக்ஷனில் ஆரூர்தாஸ் வசனத்தில் எம்.எஸ். விஸ்வநாதன் இசையில் வெளிவந்த படம் முக்கோணக் காதல் கதையை புதிய கோணத்தில் விபரித்தது.

வியட்நாம் வீடு (1970) படத்திலும் சிவாஜி, பத்மினி நடிப்பு கொடிகட்டிப் பறந்தது. தேனும் பாலும் படத்தில் சிவாஜிகணேசனுடன் பத்மினியும் சரோஜாதேவியும் இணைந்து நடித்தனர்.

(தொடரும்)

# சிறைக்குள் பிறந்தநாள் கொண்டாட்டம் சபையில் அம்பலப்படுத்திய ஹிருணிகா



(கொழும்பு)

பணம் படைத்தவர்கள் தங்களுடைய பிறந்தநாளை குடும்பத்தினருடன் சிறைச்சாலைக்குள்ளேயே கொண்டாடி, சுகபோகமான வாழ்க்கை நடத்தி கொண்டிருக்கின்றனர் என்று, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில், நேற்று முன்தினம் இடம்பெற்ற, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இரத்தம் வெளியேற்றம், இடுப்பு வலி, கழுத்து வலி ஆகிய உபாதைகள் காரணமாக, அவதிப்படும் கைதிகள் இருக்கின்றனர். எனினும், எவ்விதமான வருத்தங்களும் இல்லாத கைதி, மெத்தையில் உறங்கி, மெத்தையிலிருந்தே எழும்பி சுகத்தை அனுபவித்து கொண்டிருக்கின்றார். இது எந்த வகையில் நியாயமானது. கடும் வருத்தங்களுடன், பல் கைதிகள் இருக்கின்றனர். எனினும், அவர்கள் ஒரேயொரு நாள் மட்டுமே சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவர்.

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதியான துமிந்த சில்வா, சிறையில் சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார். அவருக்கு ஞாபகமறதி நோயாக இருக்கின்றது. எனினும், அவர் மெத்தையில் படுத்துறங்கி எழும்புகின்றார். டிசெம்பர் 3ஆம் திகதி அவருடைய பிறந்தநாளாகும். அந்தப் பிறந்தநாள் கொண்டாட்டம், சிறைச்சாலையிலேயே அதுவும் குடும்பத்தாருடன் இடம்பெற்றது என்றும் தெரிவித்தார். (இ-7-10)

# சீனி, உப்புக்கு வரி அதிகரிக்கப்படும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் தொற்றா நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சீனி, உப்பு ஆகியவற்றின் வரியை அதிகரிப்போம். மேலும் ஜனவரி முதல் இரத்தப் பரிசோதனை அரச வைத்தியசாலைகளில் ஆரம்பிக்கப்படும் என சுகாதார சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

நாட்டின் சுகாதாரச் சேவையை மேம்படுத்தும் நோக்குடன் குடும்ப வைத்திய முறைமையை மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். இதன் பிரகாரம் 50,000 பேருக்கு ஒரு வைத்தியர் என நியமிக்கவுள்ளோம். இதன்போது வீட்டுக்கு வீடு சென்று வைத்திய சேவையை முன்னெடுக்கவுள்ளோம்.

மேலும் ஜனவரி மாதம் முதல் அரச வைத்தியசாலைகளிலேயே இரத்தப் பரிசோதனை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளோம். தற்போது நாட்டில் ஔடத பற்றாக்குறை முழுமையாக நீக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் இலங்கை சுகாதார சேவை முன்னிலை வகிக்கிறது. தொற்றும் நோய்களை பெருமளவில் கட்டுப்படுத்தி உள்ளோம். மலேரியா, நோய் நீக்கப்பட்டுள்ளது. எனினும் டெங்கு, எயிட்ஸ் நோய் மாத்திரமே மீதமுள்ளது. இவற்றில் எயிட்ஸ் நோய் பெருமளவில் குறைவடைந்தது. எனினும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதன் காரணமாக டெங்கு நோய்த் தாக்கத்திற்கு உள்ளானோர் தொகை 48,000 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, புற்றுநோயை கட்டுப்படுத்த விசேட ஔடதம் கொள்வனவு செய்யப்படுகிறது. இதற்கு 90 இலட்சம் ஒதுக்க வேண்டியுள்ளது.

அத்துடன் ஔடத பற்றாக்குறை தற்போது நாட்டில் இல்லை. ஔடத பற்றாக்குறையை நீக்க விசேட மென்பொருள் கட்டமைப்பின் ஊடாக ஒன்லைன் திட்டம் மூலம் ஔடதங்களை வைத்தியசாலைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளை, தனியார் வைத்தியசாலை எல்லைமீறிய கட்டணம் சேவைகளுக்கு பெறப்படுகிறது. இதன் காரணமாக தனியார் வைத்தியசாலையில் சேவைகளுக்கு கட்டுப்பாட்டு விலையை விதிக்கத் தீர்மானித்துள்ளோம்.

இதேவேளை, தொற்றா நோயை கட்டுப்படுத்தும் நோக்குடன் சீனி, உப்பு ஆகியவை மீதான வரியை அதிகரிக்க வேண்டும் என 2015 ஆம் ஆண்டு வலியுறுத்தினேன். அப்போது ஊடகங்கள் விமர்சனம் செய்தன. ஆனால் இங்கிலாந்தில் 2014 இல் இம்முறைமை நடைமுறைக்கு வந்துள்ளது. எனவே சீனி, உப்பு என்பவற்றின் வரியை அதிகரிக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# விண்ணப்பங்கள் கோரல்

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மண்டைதீவு மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் தையல், மனையியல் டிப்ளோமா பாடநெறி புதிய கல்வியாண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒரு வருட பாடநெறியான மேற்படி கற்கைநெறியின் முடிவில் NVQ தர சான்றிதழ் திணைக்களத்தினால் வழங்கப்படும்.

மண்டைதீவு பிரதேசத்தினை சேர்ந்த ஆர்வமுள்ள யுவதிகள் விண்ணப்பப் படிவங்களை 5 ஆம் வட்டாரம், மண்டைதீவு எனும் முகவரியிலமைந்துள்ள மேற்படி மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்குமாறு வேலணை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-7-10)

# மீள் கேள்வி அறிவித்தல் - 2017

## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகளை 2017.01.01 - 2017.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட மீள் கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

| விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப்படும் திகதி, நேரம். | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி, நேரம் | கேள்வி திறக்கப்படும் திகதியும், நேரமும். |
|---|---|---|
| **திகதி** : 2016.12.08ம் திகதி முதல் 2016.12.20ம் திகதி வரை<br>**நேரம்** : மு.ப.8.30 – பி.ப.3.00<br>**இடம்** : கரைச்சி பிரதேச சபை உப அலுவலகம் | **திகதி** : 2016.12.21ம் திகதி, புதன் கிழமை<br>**நேரம்** : மு.ப.10.00 மணி | **திகதி** : 2016.12.21ம் திகதி, புதன்கிழமை<br>**நேரம்** : மு.ப.11.00 மணி<br>**இடம்** : கரைச்சி பிரதேச சபை மாநாட்டு மண்டபம். |

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என முகவரியிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக அனுப்பப்பட வேண்டும். அல்லது பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படவேண்டும்.

இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரியிட்டு குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விகள் யாவும் 2016.12.21ம் திகதி புதன்கிழமை மு.ப.11.00 மணிக்கு கரைச்சி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் கேள்விச் சபையின் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச் சபையின் முடிவே இறுதி முடிவாகும்.

| இல | குத்தகை நிலையம் | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (NBT நீங்கலாக, மீளளிக்கப்பட முடியாதது) | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | **சேவைச் சந்தை- கிளிநொச்சி.** | | | |
| 01 | இல.01.கோழியிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1,732,500.00 |
| 02 | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 246,896.99 |
| | **பொதுச் சந்தை - பரந்தன்** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை, துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 276,595.35 |
| | **பொதுச்சந்தை - வட்டக்கச்சி** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை (வட்டக்கச்சி) | 10,000.00 | 1,000.00 | 516,690.90 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை (இராமநாதபுரம்) | 10,000.00 | 1,000.00 | 297,990.00 |
| | **பொதுச்சந்தை - இரணைமடு** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை, துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 276,595.35 |
| 02 | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 624,690.00 |
| | **பொதுச்சந்தை - உருத்திரபுரம்** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி,பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை | 10,000.00 | 1,000.00 | 79,027.24 |
| | **பொதுச்சந்தை - தர்மபுரம்** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி,பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை | 10,000.00 | 1,000.00 | 276,595.35 |
| | **கல்லாறு** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 108,256.50 |
| | **கண்டாவளை** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 97,069.99 |
| | **அக்கராயன்** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 71,775.00 |

நிபந்தனைகள்.

1. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்து செய்யப்படும்.
2. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்த தவறியவர்களும், கறுப்புப்பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்கள்.
3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.
4. கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள வரும் போது தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணத்தின் நிழற்பிரதியினை கிராம சேவையாளர் மூலம் உண்மைப்பிரதி என சான்றுறுதிப்படுத்தி சமர்ப்பிப்பதுடன் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
5. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதித்தொகையினை உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும். குறித்த தொகை புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களின் குத்தகைப் பணமாக மாற்றம் செய்யப்படும்.
6. இறைச்சிக்கடைகள் மற்றும் சந்தைகள் என்பன குத்தகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்படல் வேண்டும். குத்தகைதாரர் தவிர்ந்த வேறு ஒருவரால் குத்தகை நிலையம் நடத்தப்படின் உடனடியாக ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
7. இறைச்சிக்கடையினை குத்தகைக்கு எடுத்தவர் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியை பிரதேச சபை எல்லைக்கு அப்பால் எக்காரணம் கொண்டும் கொண்டு செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.
8. ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

(C - 6601)

கணேசன்.கம்ஸநாதன்.
செயலாளரும், கேள்விச் சபைத் தலைவரும்,
பிரதேச சபை, கரைச்சி,
கிளிநொச்சி.

# நீதி வேண்டும் என்ற நோக்கில் எவரும் சாட்சியமளிக்கவில்லை

## எதிரிகள் தரப்பு சட்டத்தரணி கருத்து

அரசியல் பழிவாங்கல்களுக்காகவே அன்றி இறந்தவர்களுக்கு நீதி வேண்டும் என்ற நோக்கில் எவரும் சட்சியம் வழங்கவில்லை என எதிரிகள் தரப்பு சட்டத்தரணி முடியப்பு ரெமீடியஸ் தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறைப் பகுதியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் மீது தாக்குதல் மேற்கொண்டு உயிர்ச்சேதம் விழைவித்தமை தொடர்பான வழக்கின் தொகுப்புரை நேற்று முன்தினம் யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இடம் பெற்றது. அதன் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், குறித்த வழக்கின் 47 குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் குற்றம் செய்வர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதிலும் மாற்றுக் கருத்துக்கள் இல்லை.

ஆனால் குறித்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 4 எதிரிகள் தொடர்பில் அவர்கள் இக்குற்றத்தை புரிந்தார்களா? என்பது சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் நிரூபிக்கப்பட வேண்டும்.

அரச தரப்பால் முன்வைக்கப்பட்ட கண்கண்ட சாட்சியங்களில் அரசியல்வாதிகள் அளித்த சாட்சியங்களும் சாதாரண நபர்கள் அளித்த சாட்சியங்களும் 100 வீதம் வித்தியாசமானதாகவும் ஒன்றுக்கொன்று முரணானதாகவும் உள்ளன.

அந்தவகையில் எதிரிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பல சாட்சியங்கள் உண்மைக்கு புறம்பானவை என்பது அவர்களுடன் இருந்த சாதாரண நபர்கள் அளித்த வாக்குமூலத்தின் படி அறிந்து கொள்ள முடிகிறது.

சம்பவம் தொடர்பில் கண்கண்ட சாட்சிகளாக அரச தரப்பால் முன்வைக்கப்பட்ட சாட்சிகளின் சுருக்க முறையற்ற விசாரணை மற்றும் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் குறிப்பிடப் படாத பல விடயங்களை மேற்குறித்த சாட்சிகள் மேல் நீதிமன்றில் புதிதாக தெரிவித்துள்ளனர். அதை மன்று ஏற்றுக்கொள்ளக் கூடாது.

குறித்த இரு அரசியல் குழுக்களுக்கிடையே இடம்பெற்ற இச் சம்பவத்தில் உணர்ச்சி வசப்பட்டு குறித்த ஒரு கட்சியை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கில் பலர் உண்மைக்கு புறம்பான சாட்சியங்களை அளித்துள்ளார்கள். இறந்தவர்களுக்கு நீதி வேண்டும் என்ற நோக்கில் எந்த சாட்சிகளும் சாட்சியம் வழங்கவில்லை.

இது ஒரு அரசியல் சார்ந்த விடயம் என்பதால் எதிரியின் உரித்து என்ற விடயத்தில் மன்று கவனத்தில் கொள்ள வேண்டும்.

4 எதிரிகள் சார்பிலும் சுமத்தப்பட்ட குற்றங்களுக்கான சாட்சியங்களில் பல முரண்பாடுகள் காணப்படுகின்றன. எனவே குறித்த எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்படவேண்டும் என்ற ரீதியில் எதிரிகளை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என அவர் மன்றில் கோரியிருந்தார். (இ-9)

# இரட்டை மரண தண்டனை வேண்டும்

ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற மோதலில் உயிர்ச்சேதம் விளைவித்த 3 எதிரிகளுக்கும் இரட்டை மரணதண்டனை வழங்க வேண்டும் என அரச தரப்பு சட்டத்தரணி நா.நிசாந் பரிந்துரை செய்துள்ளார்

ஊர்காவற்றுறை பகுதியில் தமிழ்த தேசிய கூட்டமைப்பினர் மீது தாக்குதல் மேற்கொண்டு உயிர்ச்சேதம் விளைவித்தமை தொடர்பான வழக்கின் தொகுப்புரை நேற்று முன்தினம் யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இடம்பெற்றது. அதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வழக்கில் 40 சாட்சியங்கள் பெயரிடப்பட்டன. அதில் இறந்தவர்கள் மற்றும் உரிய முகவரியில் இல்லாதவர்களின் சுருக்கு முறையற்ற விசாரணைகள் மன்றில் பதிவு செய்யப்பட்டன.

கண்கண்ட சாட்சிகள் 8 பேருடைய சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன. அதன் படி குறித்த எதிரிகள் தேர்தல் பிரசாரத்துக்கு சென்றவர்களை தாக்க வேண்டும் என்ற பொது நோக்கத்துடன் செயற்பட்டுள்ளார்கள் என்பதை சந்தேகத்துக்கு இடமில்லாமல் நிரூபித்துள்ளேன். அதன்படி எதிர் வாதம் பொய்யெனவும் நிரூபித்துள்ளேன்.

குறித்த சம்பவத்தில் எதிரிகளின் பங்கு, பணி, கண்கண்ட சாட்சியங்கள், இறப்பு அறிக்கைகள் மூலம் 3 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிரூபித்துள்ளேன். 4 ஆம் எதிரி தொடர்பில் குறித்த ஒரு சாட்சியத்தை ஆய்வு செய்து மன்று முடிவெடுக்க வேண்டும்.

வழக்குத் தொடுநர் சார்பில் நெப்போலியன், ஜீவன் ,மதனராசா ஆகியோர் குறித்த சம்பவத்தில் நேரடி தொடர்புபட்டுள்ளார்கள் என்றும் குற்றவாளியாக காணப்படுவதால் தண்டனை சட்டக்கோவையின் படி அவர்களுக்கு இரட்டை மரண தண்டனை வழங்க வேண்டும்.

கடும் காயம் ஏற்படுத்தியமைக்கு 10 ஆண்டுகள் கடூழிய சிறையும் காயம் ஏற்படுத்தியமைக்கு 10 ஆண்டுகள் சிறையும் சாதாரண காயத்தை ஏற்படுத்தியமைக்கு 5-7 வருடங்கள் சிறையும் தலா ஒவ்வொருவருக்கும் வழங்க சட்ட ஏற்பாடு உண்டு. எனவே 3 எதிரிகளுக்கும் மரண தண்டனை வழங்க வேண்டும் என மன்றில் விண்ணப்பம் செய்தார். (இ-9)

# இருட்டறையில் எனது வாழ்வு

## 25 வருடங்கள் சிறையிலிருக்கும் நளினியின் வலிகளைச் சுமந்த நெடுந்தொடர்..... 06

**“சிவராஜன் வன்னிக்கு அனுப்பியதாகச் சொல்லும் அந்த வயர்லெஸ் உரையாடலில் தமிழகத்தில் சிவராஜன், தனு, சுபா ஆகிய 3 பேரைத்தவிர வேறு யாருக்கும் கொலைச்சதித்திட்டம் தெரியாது என்றுதான் இருக்கிறது. இதைத்தான் உச்ச நீதிமன்றமும் தன்னுடைய தீர்ப்பில் பல இடங்களில் சுட்டிக்காட்டி இருக்கிறது. எந்த இடத்திலும் கொலைச்சதி பற்றிய தகவல் நளினியாகிய எனக்குத் தெரிந்திருந்ததாகவே கூறப்படவில்லை. ஆனால் நான் கால் நூற்றாண்டு காலமாக எல்லாத் துன்பங்கலளயும் அனுபவித்து விட்டேன். ”**



...அதில் உள்ளதை அப்படியே எழுதினால், முழுக்க முழுக்க அவர்களாகவே எழுதிய போலி வாக்குமூலம் எனத் தெரிந்துவிடும் என நினைத்து, அவ்வப்போது என்னிடமும் சில வார்த்தைகளை, நிகழ்வுகளைக் கேட்டு அதையும் குறுக்கே சேர்த்துக்கொண்டு வந்தார். அதாவது, பல பொய்களுக்கு மத்தியில் ஒரு உண்மையைப் போட்டு எழுதி வந்தால் மொத்தமும் உண்மையாகி விடும் என்பார்களே அப்படி.

தடா சட்டப்படி ஒருவர் மனம் உவந்து கொடுக்கும் ஒப்புதல் வாக்குமூலத்தை வைத்து, மற்ற கைதிகளுக்கான தண்டனையையும் வாங்கித் தரமுடியும். இது எனக்கு அப்போது தெரியாது. அவர் விருப்பப்படியே தயாரித்த வாக்குமூலத்தில் என் கையொப்பங்களை வாங்கிக் கொண்டார்கள். சி.பி.ஐ. கஸ்ரடியில் வைத்திருந்த 60 நாட்களும் இப்படிச் சித்திரவதைகளோடுதான் கழிந்தன.

எங்கள் எல்லோரிடமும் வாக்குமூலம் வாங்கிய ஐ.பி.எஸ். அதிகாரி தியாகராஜன், 22 ஆண்டுகள் கழித்து 'நான் நீதிப் பிழை செய்துவிட்டேன்' என்று சொல்லி இருக்கிறார். பேரறிவாளன் கொடுத்த வாக்குமூலத்தை நான் எழுதியபோது 'எதற்கு எனத் தெரியாமல்' என்ற வார்த்தையை எழுதாமல் விட்டுவிட்டதாக தியாகராஜன் சொல்லி இருக்கிறார். சுற்றி வளைத்து தன்னை ஒரு நேர்மையான அதிகாரி போன்று காட்டிக்கொள்ள அவர் ஆசைப்படுகிறார். தியாகராஜன் பேட்டி கொடுத்ததாக, ஒரு ஆவணப்படம் வெளியிடப்பட்டுள்ளது. அந்தப் பேட்டியில், '1991 மே மாதம் 7ஆம் திகதிக்கு முன்பாக ஒரே ஒரு பெண்ணைத் தவிர வேறு யாருக்கும் ராஜீவ் காந்தி கொலைச் சதி பற்றித் தெரிந்திருக்கவில்லை என்பதற்கு வயர்லெஸ் செய்திகள் ஆதாரமாக உள்ளன' என்று அவர் சொல்லி இருக்கிறார்.

'ஒரு பெண்ணைத் தவிர' என்று குறிப்பிடும்போது அங்கே என் புகைப்படத்தை இடைச்செருகல் செய்து காட்டுகிறார்கள். நளினியாகிய என்னிடம் இருந்து புலிகளின் தலைமைக்குத் தகவல் போயிருப்பதாகக் காட்சி அமைப்பை உருவாக்கிக் காட்டி இருக்கிறார்கள். இது எப்படியான விஷமத்தனம். இந்த வழக்கை விசாரித்த சி.பி.ஐ. சிறப்புப் புலனாய்வுக் குழுவின் ஆவணங்கள், குற்றவாளிகளின் வாக்குமூலங்கள், சாட்சிகளின் வாக்குமூலங்கள், இந்த வழக்கை விசாரித்த தடா நீதிமன்றம், மேல் முறையீட்டை எடுத்து நடத்திய உச்ச நீதிமன்றம் ஆகிய அனைத்திலும் எந்த இடத்திலும் அப்படி ஒரு தகவலை, செய்தியைச் சொல்லவே இல்லை. ஜெயின் கமிஷன் விசாரணையிலும் சரி, வர்மா கமிஷன் அறிக்கையிலும் சரி அப்படி எந்த ஒரு குறிப்புமே இல்லை. சிவராஜன் வன்னிக்கு அனுப்பியதாகச் சொல்லும் அந்த வயர்லெஸ் உரையாடலில் 'தமிழகத்தில் சிவராஜன், தனு, சுபா ஆகிய 3 பேரைத்தவிர வேறு யாருக்கும் கொலைச் சதித்திட்டம் தெரியாது' என்றுதான் இருக்கிறது. இதைத்தான் உச்ச நீதிமன்றமும் தன்னுடைய தீர்ப்பில் பல இடங்களில் சுட்டிக்காட்டி இருக்கிறது. எந்த இடத்திலும் கொலைச் சதி பற்றிய தகவல் நளினியாகிய எனக்குத் தெரிந்திருந்ததாகவே கூறப்படவில்லை. ஆனால் நான் கால் நூற்றாண்டு காலமாக எல்லாத் துன்பங்களையும் அனுபவித்து விட்டேன்.



இந்த நிலையில்தான், பிரியங்கா என்னைச் சந்திக்க வந்தார். அவர் வரும் வரை யார் வரப்போகிறார்கள் என்றும் தெரியாது. வந்தபிறகும் இவர்தான் பிரியங்கா என்றும் தெரியாது.

(வலிகள் தொடரும்...)


# கலைத் தரிசனம்

*தெணியான் என்னும் புனைபெயரில் இலக்கிய உலகில் 1964 இல் கால்பதித்த இவர் 1942.08.06 ஆம் திகதி பொலிகண்டியில் பிறந்தார். இதுவரை இவர் 150 சிறுகதைகளைப் படைத்துள்ளார். பதினொரு நாவல் தொகுதிகளையும் நான்கு சிறுகதைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார்.*

*2010 ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்டவர்கள் என்ற சிறுகதைத் தொகுதியினை வெளியிட்டுள்ளார். இதில் உள்ளடங்கியுள்ள 25 சிறுகதைகளும் சாதியத்திற்கு எதிரான குரலைக் கொடுக்கின்றன. இவர் மூன்று முறைகள் சாகித்திய ரத்னா விருதையும் 2004 இல் கலாபூஷண விருதையும் பெற்றார்.*

*இவருடைய பாதுகாப்பு என்ற சிறுகதை தரம் - 11 மாணவர்களின் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடப்புத்தகத்தில் ஒரு பாடமாக உள்ளடக்கப் பட்டுள்ளது. கலாபூஷணம் கந்தையா நடேசு அவர்கள் 2011 இல் இன்னும் சொல்லாதது என்ற நூலினையும் 2013 இல் பூச்சியம் பூச்சியமல்ல என்ற நூலினையும் வெளியிட்டுள்ளார்.*

*அவர் வலம்புரிக்கு அளித்த செவ்வியினை இங்கே தருகின்றோம்.*



## கலாபூஷணம் க.நடேசு (தெணியான்)

## அவர்களுடனான நேர்காணல்

**★ நீங்கள் இலக்கிய உலகிற்குள் எவ்வாறு நுழைந்தீர்கள்?**

சிறுவயதிலிருந்தே எனக்கு வாசிப்பு பழக்கம் இருந்தது. நான் ஏழாம் வகுப்புப் படிக்கின்ற காலத்திலேயே எனது தந்தையார் தினகரன் பத்திரிகையை வாங்கித் தருவார்.

நானும் அவற்றில் ஒன்றும் தவறாது படித்து முடிப்பேன். இவற்றோடு பாடசாலையில் கற்றுக் கொண்டிருந்த போது சுற்று வாசிப்புத் திட்டம் இருந்தது. அதிலும் நிறைய வாசிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டது.

படிப்படியாக புத்தகங்கள் வாங்கி வாசித்தேன். நான் இலக்கிய உலகில் நுழையக் காரணம் வாசிப்புத் தேடலால்தான். பிற்காலத்தில் அந்த வாசிப்புத் தேடல் எழுத்துலகில் பிரவேசிக்க வைத்தது.

**★ தெணியான் என்ற புனை பெயரை எவ்வாறு தெரிவு செய்தீர்கள்?**

நான் பிறந்த வீட்டைத் தெணியான் என்று சொல்வார்கள். இதற்கு வரலாற்றுப் பின்னணி உள்ளது. பொலிகண்டிக் கடற் கரையோரமாக மீன் வியாபார இடத்திற்கு அருகில் ஒரு பழைய மடம் இருக்கிறது.

அந்த மடத்தைக் கட்டியவர் என்னுடைய பேரனுடைய பேரன், அங்கு குடியிருந்தார்கள். ஒரு காலத்தில் சமூக நிர்ப்பந்தம் காரணமாக உள்ளுக்குள் வந்து குடியேறினார்கள்.

அவர்கள் வாழ்ந்த இடத்திற்குப் பெயர் நீத்துவான் தெணி, அவர் அங்கிருந்து இங்கு குடியிருந்தாலும் அவருடைய வீட்டை எல்லோரும் தெணி என்றே அழைக்கத் தொடங்கினார்கள்.

அந்த வரலாறு காரணமாக என்னுடைய குடும்பத்தில் பிறக்கின்ற எல்லோரையும் தெணி என்றே அழைப்பார்கள். ஆகவே இது எனது குடும்பப் பெயர். எழுத்துலகில் இது புனைபெயர்.

**★ நீங்கள் இதுவரை வெளியிட்டுள்ள நாவல்கள் பற்றி?**

1973 இல் விடிவை நோக்கி

1981 இல் கழுகுகள்

1989 இல் பொற்சிறையில் வாடும் புனிதர்கள்

1994 இல் மரக்கொக்கு

1999 இல் காத்திருப்பு

2002இல் கானலின் மான்

2003 இல் சிதைவுகள்

2006 இல் பனையின் நிழல்

2010 இல் தவறிப்போனவன் கதை

2013 இல் குடிமகன்

2016 இல் ஏதனம் ஆகிய பதினொரு நாவல்களை இதுவரை நூலாக வெளியிட்டுள்ளேன்.

**★ நீங்கள் இதுவரை வெளியிட்டுள்ள சிறுகதைகள் பற்றி...?**

1984 இல் சொத்து

1996 இல் மரத்துவேட்டி

2007 இல் இன்னொரு புதிய கோணம்

2010 இல் ஒடுக்கப்பட்டவர்கள் ஆகிய நான்கு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளேன்.

**★ ஒடுக்கப்பட்டவர்கள் என்கின்ற சிறுகதைத் தொகுப்பில் உள்ளடக்கப்பட்ட 25 சிறுகதைகளும் சாதி பற்றியே பேசுகின்றன. இதுபற்றி?**

எந்தவொரு சிறுகதை எழுத்தாளரும் ஒரு நூலில் இடம்பெறுகின்ற சிறுகதைகள் அத்தனையும் ஒரு பிரச்சினையைச் சொல்லுவதாக இதுவரை எந்தவொரு நூலும் வெளிவரவில்லை. முதல் முதலாக நான் 2010 இல் ஒடுக்கப்பட்டவர்கள் என்ற சிறுகதையில் இடம்பெறுகின்ற இந்த 25 சிறு கதைகளும் சாதியம் பற்றியே மட்டும் பேசுகின்றன.

எல்லா இடமும் சாதியம் நிறைந்திருக்கிறது. அதனால் எழுதுறது பிரச்சினை இல்லை.

**★ தங்களின் சிறுகதைகளில் அதிகமாக சாதியம் பற்றியே பேசப்படுகின்றன இதுபற்றி?**

நான் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்தனான். நான்முக்கியமாகச் சாதிப் பிரச்சினை பற்றி எழுதிக் கொண்டிருக்கின்றேன். என்ன ஆயிரம் சொன்னாலும் சாதியம் என்ற சொல் இன்னமும் அழிந்து போக வில்லை. ஒருவேளை வெளியில் பார்க்கும் போது அழிந்த மாதிரித் தெரிந்தாலும் அது வெவ்வேறு வடிவங்களில் ஊடுருவி வந்துள்ளது.

அது தீரும் வரை எழுதியே ஆக வேண்டும். எந்த பிரச்சினை என்றாலும் அதனைக் கிளறாமல் விட்டால் பிரச்சினை தீராது. ஒடுக்கப்பட்ட சாதியினர் கூட சாதியம் பற்றி எழுதத் தயங்குகின்றனர்.

சாதியம் பற்றி எழுதினால் தான் என்ன சாதி என மற்றவர் அறிந்திடுவர் என்பதற்காகப் பலர் எழுதாமல் உள்ளனர். சாதியம் எங்கும் நிறைந்திருக்கிறது.

சமூகத்தின் பல்வேறு பிரச்சினைகள் என்னைப் பாதிக்கவே செய்கின்றன. என்னைப் பாதிக்கின்ற பல விடயங்களைச் சிறுகதையில் சொல்லுகின்றேன். பிரச்சினையை வெளிக்காட்டுவதன் மூலம் மக்கள் அதிலிருந்து விடுபடுவர் என நம்புகின்றேன்.

**★ இன்றைய சிறுகதை எழுத்தின் போக்கு எப்படியிருக்கிறது?**

இன்றைய காலகட்டத்தில் சிறுகதை வளர்ச்சியடைந்து வருகிறது என்பதை யாராலும் மறுப்பதற்கில்லை. புதிய சில எழுத்தாளர்கள் நன்றாக எழுதுகிறார்கள். அதனால் எல்லாக் கதைகளும் உச்சமாக வருகிறது என்று சொல்ல முடியாது. இன்றைக்கு தொழில்நுட்ப சாதனங்களின் வசதிகள் பெருகியுள்ளன. அதனால் தரமான படைப்புக்களும் வெளி வருகின்றன. தரமற்ற படைப்புக்களும் வெளி வருகின்றன.

இளைய தலைமுறையினர் அவசரப்பட்டு வெளியிடுகின்ற தன்மையை அவதானிக்க முடிகின்றது. நல்ல தொகுதிகள் சில வந்து கொண்டுள்ளன. பெரும்பாலான சிறுகதைத் தொகுதிகள் மனதிற்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதில்லை. அவர்களிடத்தில் பொறுமையாக இருந்து ஆழமாக வாசிக்கின்ற பண்பு இல்லை. இவை இரண்டும் இருந்தால் காத்திரமான படைப்பை படைக்கலாம்.

**★ நீங்கள் பெற்ற வெற்றிகள், விருதுகள் பற்றி?**

1995 இல் மரக்கொக்கு என்ற நாவல் சாகித்திய பரிசும் இலக்கியப் பேரவைப் பரிசையும் பெற்றது.

1999இல் காத்திருப்பு என்ற நாவல் வடக்கு,கிழக்கு மாகாண அமைச்சின் பரிசைப் பெற்றது.

2002 இல் கானலின் மான் என்ற நாவல் சாகித்திய விருதையும் கலை இலக்கிய விருதையும் பெற்றது.

2003 இல் சிதைவுகள் என்ற குறுநாவல் இலங்கை கலை இலக்கியப் பேரவையின் விருதைப் பெற்றது.

2004 இல் கலாபூஷண விருதையும்

2008 இல் வடமாகாண ஆளுநர் விருதையும்

2010 இல் சாகித்திய விருதையும்

2013இல் சாகித்திய ரத்னா விருதையும்

2013 கொழும்பு கம்பன் கழகத்தினால் இலக்கிய விருதும்

2012இல் பருத்தித்துறை பிரதேசச் செயலகத்தினால் கலைப் பரிதி விருதையும்

2014 வடமராட்சி பிரதேச செயலகத்தினால் இலக்கிய விருதும்

2014 சாகித்திய விருதும்

2011 சின்னப்பாரதி அறக்கட்டளையினால் இலக்கியப் பரிசும்

2015 பிரான்ஸ் தலித் மேம்பாட்டுக்கழகத்தினால் கௌரவிக்கப்பட்டு விருதையும் பெற்றேன்.

இவற்றோடு பாதுகாப்பு என்கிற சிறுகதையும் மரக்கொக்கு என் கின்ற நாவலும் சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு நூலாக வெளிவந்துள்ளது.

**★ இறுதியாக நீங்கள் இலக்கிய உலகிற்கு மனந்திறந்து கூறுவது?**

இலக்கியம் என்பது பொழுது போக்குச் சாதனமல்ல. அல்லது பெயர் புகழ் தேடுவதற்காக இலக்கியம் படைக்கவேண்டும் என்று அல்ல. ஓர் இலக்கிய வாதிக்குச் சமூகக் கடமை இருக்கிறது. அந்தச் சமூக கடமையைக் கருத்திற் கொண்டு அவன் தன்னாலாகக் கூடிய பங்களிப்பை இலக்கியத்தால் செய்ய வேண்டும். இலக்கியம் சமூகத்தை உடனே மாற்றும் என்று சொல்லு வதற்கில்லை.

ஆனால் சமூக மாற்றத்திற்கான மனப்பதிவை இலக்கியம் கொடுக்கும் திருக்குறளை நாம் இன்றைக்கும் படிக்கின்றோம் என்றால் அது தருகின்ற போதனைகள்தான் காரணம். ஓர் இலக்கியத்தைப் படைக்கின்றபோது இரட்டை நோக்கம் இருக்க வேண்டும்.

படைக்கப்படுகின்றவை கலைத்துவமான இலக்கியமாக இருக்க வேண்டும். மற்றது சமூகப் பயன்பாடுடையதாக இருக்க வேண்டும். அவ்வாறில்லாத இலக்கியங்கள் படைக்கிறதிலும் பயனில்லை.

வெறும் பெயருக்கும் புகழுக்கும் படைக்க வேண்டுமென்ற தேவையும் இல்லை.

இன்றைக்கு எமது காலத்தில் சீரழிவுகளை தடுக்காவிட்டாலும் அதனைச் சுட்டிக்காட்டுகின்ற தன்மை படைப்பாளிக்கு இருக்கிறது. அதனைச் சரியாக விளங்கிக் கொண்டு காத்திரமான இலக்கியங்களைப் படைக்க வேண்டும்.

நேர்காணல்:
ஜெயம் ஜெகன்



# சிறுவர் அரங்கம்

## புள்ளிமான்களும் சாதாரண மான்களும்!

...புலியும் கொம்புகளினால் ஏற்பட்ட காயத்தால் ஓடி ஒளிந்தது.

புள்ளிமான்கள், சாதாரண மான்களிடம் சண்டை போட்டுக் கொண்டதால், இத்தனை நாள் தங்கள் இஷ்டம் போல் புல்களையும், பழங்களையும் தின்று வந்தன.

ஆனால், இப்போதோ காட்டுப் புலிக்கு பயந்து தங்கள் பகுதியிலிருந்து வெளியே வர முடியாமலும், மற்ற பிராணிகளிடமிருந்து சேர்ந்து கொள்ள முடியாமலும் தவித்தன. சாதாரண மான்கள் ஒன்றுகூடி புலியைத் தாக்கியதை அறிந்தன.

கடைசியாக புள்ளிமான்கள், சாதாரண மான்களிடம் சென்று, "நாங்கள் தெரியாத்தனமாக எங்களை உயர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொண்டோம். இனிமேல் அப்படி நடக்க மாட்டோம். புலியிடமிருந்து எங்களையும் காப்பாற்றுங்கள். எங்களை மன்னியுங்கள்" என்றன.

அப்போது சாதாரண மான்கள், "நீங்கள் அற்ப பிராணிகள். வெண் புள்ளிகள் உள்ளதால், உயர்ந்தவர்கள் என்று கூறுனீர்களே. உங்களைச் சேர்க்க மாட்டோம். பழங்களையும், புல்களையுமீ நீங்களே சாப்பிட்ட மாதிரி புலியையும் நீங்களே விரட்டியடியுங்கள்" என்று கூறின.






அந்த சமயத்தில் அருகே இருந்த ஒரு பெரிய ஆலமரத்தின் கிளையிலிருந்து, "ஆபத்தை உணராது சண்டைப் போடும் அறிவற்ற மிருகங்களே!" என்று ஒரு குரல் கேட்டது. அதைக் கேட்டதும், கீழே நின்றிருந்த மான்கள் எல்லாம் அண்ணாந்து மேலே பார்த்தன.

ஆலமரத்தின் உச்சியில் பல வண்ண நிறத்தில் ஒரு அழகிய பறவை உட்கார்ந்துக் கொண்டிருந்தது. அது பேசத் துவங்கியது.

"மான்களே! உங்களுக்கு இந்தக் காடு மட்டும்தான் தெரியும். நான் கடல்களையும், மலைகளையும் கடந்து கண்டம் விட்டு கண்டம் போயிருக்கிறேன். அங்கு பலவிதமான மனிதர்களையும் பார்த்திருக்கிறேன். இப்படித்தான் சில தேசங்களில் மனிதர்கள் கூட தங்கள் வெள்ளை நிறத்தவர் என்பதால் கறுப்பு நிறத்தவர்களிடம் சண்டை போடுகிறார்கள். இந்தச் சண்டையில் மனிதர்களே கஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள். அப்படியிருக்க, மிருகங்களான நீங்கள் வெள்ளை என்றும், கறுப்பு என்றும் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்று விரோதம் பாராட்டினால் அழிந்து போவீர்கள். எங்கள் இனமான காகம் கறுப்புதான். ஆனால் நாங்கள் அவைகளுடன் ஒற்றுமையாகத்தான் இருக்கின்றோம். அவற்றிடமிருந்து கூடி சாப்பிடும் நல்ல படிப்பினை கற்றுக் கொள்கிறோம். நீங்கள் ஒற்றுமையாக இருங்கள் இல்லையெனில் புலி. சிறுத்தைகள் போன்ற துஷ்டர்கள் உங்களை கொன்று விடுவார்கள். கூடி வாழ்ந்தால் கோடி துன்பங்களை அகற்றலாம். நிறமும், வெண்புள்ளிகளும் ஒரு பொருட்டல்ல" என்று கூறிவிட்டு தன் அழகிய இறகுகளை விரித்து வானத்தில் பறந்து சென்றது.

நின்றிருந்த புள்ளிமான்களும், சாதாரண மான்களும் இதைக் கேட்டு வெட்கி தலை குனிந்தன. தங்கள் அறியாமை எண்ணி வருத்தம் அடைந்தன. ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டன. அன்று இரவு தங்களை வேட்டையாட வந்த புலியை ஓட ஓட விரட்டியடித்தன. பின்பு எல்லாம் மகிழ்ச்சியுடன் கூடி வாழ்ந்தன.

(முற்றும்)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1609 - இத்தாலியின் மிலான் நகரில் அம்புரோரியானோ நூலகம் திறக்கப்பட்டது. இதுவே ஐரோப்பாவின் இரண்டாவது பொது நூலகம் ஆகும்.
- 1864 - இங்கிலாந்தில் கிளிஃப்டன் தொங்கு பாலம் திறக்கப்பட்டது.
- 1881 - ஆஸ்திரியாவில் வியென்னா நகரில் றிங் தியேட்டரில் இடம்பெற்ற தீயினால் 620 பேர் கொல்லப்பட்டனர்.
- 1912 - அல்பேனியாவின் "கோர்சே" நகரை ஓட்டோமான் படையிடம் இருந்து கிரேக்கர்கள் கைப்பற்றினர்.
- 1941 - பசிபிக் போர்: பேர்ள் துறைமுகத்தை ஜப்பான் தாக்கியதை அடுத்து ஐக்கிய அமெரிக்கா ஜப்பான் மீது போரை அறிவித்தது.
- 1941 - பசிபிக் போர்: சீனக் குடியரசு ஜப்பான் மீது போரை அறிவித்தது.
- 1941 - பசிபிக் போர்: சீனாவில் அமைக்கப்பட்டிருந்த கொரிய அரசு ஜப்பான் மற்றும் ஜேர்மனி மீது 1910 இல் இருந்து ஜப்பான் வசமிருந்த கொரிய மக்கள் சார்பாக போரை அறிவித்தது.
- 1941 - பெரும் இன அழிப்பு: போலந்தின் லோட்ச் என்ற இடத்தில் யூதர்களைக் கொல்லுவதற்கு நாசிகள் முதன் முதலாக நச்சு வாயுப் பேருந்தைப் பயன்படுத்தினர்.
- 1949 - சீனக் குடியரசின் தலைநகர் நான்சிங்கில் இருந்து தாய்பெய் நகருக்கு மாற்றப்பட்டது.
- 1953 - அணு அமைதிக்கே என்று அமெரிக்க அதிபர் டுவைட் டி. ஐசனாவர் அறிவித்தார்.
- 1963 - மேரிலாதில் அமெரிக்க விமானம் ஒன்று வீழ்ந்ததில் 81 பேர் கொல்லப்பட்டனர்.
- 1966 - கிரேக்கக் கப்பல் ஒன்று மத்திய தரைக் கடலில் உள்ள ஆயிஜியன் கடலில் மூழ்கியதில் 200 பேர் கொல்லப்பட்டனர்.
- 1969 - கிரேக்கத்தில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 93 பேர் கொல்லப்பட்டனர்.
- 1972 - சிக்காகோவில் விமானம் விபத்துக்குள்ளாகியதில் 45 பேர் கொல்லப்பட்டனர்.
- 1980 - பீட்டில்ஸ் இசைக்குழுவைச் சேர்ந்த ஜான் லெனன் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1982 - சுரினாமில் இராணுவ ஆட்சிக்கெதிரான பலர் கொல்லப்பட்டனர்.
- 1982 - சூரினாமில் இராணுவ ஆட்சிக்கெதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்ட பலர் கொல்லப்பட்டனர்.
- 1985 - சார்க் அமைப்பு இந்தியா, பாகிஸ்தான், வங்காள தேசம், இலங்கை, நேபாளம், மாலைதீவு மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளினால் உருவாக்கப்பட்டது.
- 1987 - பெருவின் தலைநகர் லீமாவுக்கருகில் சென்று கொண்டிருந்த விமானம் கடலில் வீழ்ந்து மூழ்கியதில் அதில் பயணஞ்செய்த பெருவின் உதைபந்தாட்ட அணியொன்றின் அனைத்து வீரர்களும் கொல்லப்பட்டனர்.
- 1991 - சோவியத் ஒன்றியத்தைக் கலைப்பதென ரஷ்யா, பெலாரஸ், உக்ரேன் ஆகிய நாடுகளின் தலைவர்கள் கூடி முடிவெடுத்தனர்.
- 1998 - அல்ஜீரியாவில் 81 பேர் ஆயுதக் குழுவொன்றினால் படுகொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புக்கள்

- கிமு 65 - ஹோராஸ், அகஸ்டசின் காலத்தில் வாழ்ந்த ஒரு முன்னணி இத்தாலியக் கவிஞர். (கிமு 8)
- 1935 - தர்மேந்திரா, இந்திய நடிகர்.
- 1946 - சர்மிளா தாகூர், இந்திய நடிகை.
- 1947 - தாமஸ் சிச், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்.
- 1976 - நிருபமா வைத்தியநாதன், இந்திய டென்னிஸ் வீராங்கனை.
- 1985 - டுவைட் ஹவர்ட், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்.

### இறப்புகள்

- 1980 - ஜான் லெனன், ஆங்கிலப் பாடலாசிரியர், இசையமைப்பாளர். (பி. 1940)
- 2014 - நேதுநூரி கிருஷ்ணமூர்த்தி, தென்னிந்திய கருநாடக இசைப் பாடகர். (பி. 1927)

### சிறப்பு நாள்

- ருமேனியா - அரசியல் சாசன நாள்.
- பல்கேரியா - மாணவர் நாள்.
- ஆஸ்திரியா - பொது விடுமுறை.
- மோல்டா - பொது விடுமுறை.
- பனாமா - தாயார் தினம்.
- தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு தினம்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 70 | 100 | 70 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 100 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 50 | 35 | 80 | 50 | 80 | 60 |
| தக்காளி | 60 | 50 | 45 | 60 | 60 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 40 | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 50 | 50 | 35 | 40 | 60 | 60 | 40 |
| கரட் | 100 | 120 | 60 | 80-120 | 80 | 160 | 80 |
| பூசணி | 40 | 40 | 30 | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 80 | 60 | 40 | 80 | 50 | 80 | 50 |
| வாழைக்காய் | 40 | 20 | 35 | 50 | 40 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 60 | 140 | 80 | 100 | 120 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 90 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 120 | 250 | 110 | 260 | 140 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 160 | 80 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 60 | 80 | 70 | 100 | 60 |
| பயற்றங்காய் | 120 | 60 | 70 | 160 | 100 | 160 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 | 100 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 50 | 100 | 60 | 80 | 60 | 120 | 60 |
| கறிமிளகாய் | 140 | 100 | 100 | 200 | 120 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 160 | 100 | 100 | 200 | 100 | 200 | 200 |
| போஞ்சி | 150 | 300 | 200 | 200 | 160 | 280 | 220 |
| கத்தரிதம்புள்ள | 60 | 30 | 40 | 60 | – | 60 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 50 | 30 | 30 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 400 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 20-35 | 50 | 35 | 30-40 | 50 |
| இராசவள்ளி | – | – | – | – | 300 | – | – |
| வெங்காயப்பூ | 140 | – | – | – | – | – | – |
| முள்ளங்கி | 60 | – | 50 | 60 | 50 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 35 | – | 10 | 30 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | – | 15 | 10 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 80 | – | – | 80 | 70 | 120 | 60 |

தண்டனை கொடுப்பதற்கு தாமதம் செய். ஆனால் மன்னிப்புக் கொடுப்பதற்கு யோசனை கூட செய்யாதே. *~ அன்னை திரேசா*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மன்னிப்பு வார்த்தையால் அல்ல செயலால் காட்டப்பட வேண்டும்

தமிழ் மொழியில் மன்னிப்பு என்பது மிகவும் உன்னதமான சொல். அதற்குக் காரணம் மன்னிப்பு என்பது சொல்பவரையும் கேட்பவரையும் இணைக்கும் வல்லமை கொண்டது.

அதேவேளை இச்சொல் சொல்பவராலும் கேட்பவராலும் ஏற்கப்படும்போது பெறுமதி பெறுவதாக இருக்கின்றது.

ஆகையால்தான் மன்னிப்பு என்ற சொற்பதம் அடிக்கடி பயன்படுத்தப்படாமல் முக்கியமான சந்தர்ப்பங்களில் மட்டும் பயன்படுத்தப்படுகின்றது.

அந்த வகையில் மன்னிப்பை ஏற்றுக் கொள்வது எந்தளவு தூரம் பெருந்தன்மையானதோ அதற்கு ஈடாக மன்னிப்புக் கேட்பதும் பெருந்தன்மை என்று கருதும் வழக்காறு தமிழ்ப்பண்பாட்டில் உள்ளது.

இருந்தும் மன்னிப்பு என்ற உயர்ந்த வார்த்தை வெளிவந்த கணப்பொழுதே அதனைப் பிரயோகித்தவர் இன்னொரு தவறை இழைக்கக்கூடாது என்பதும் கவனத்துக்குரியது. இவை மன்னிப்புப் பற்றிய சில குறிப்புகள் மட்டுமே.

ஆ! அப்படியா? மன்னிப்புக்கு இப்படியொரு உயர்வு உள்ளதா? நடைமுறையில் அதனைப் பார்க்கலாமா? என்றெல்லாம் கேட்டால் நமது பதில் மௌனமாகவே இருக்கும்.

அந்தளவுக்கு இப்போது மன்னிப்பு என்பது மலிந்த – நலிந்த – மதிப்பற்ற சொல்லாகிப் போயிற்று.

இது ஒருபுறம் இருக்க, யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இந்த நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் வைத்து மன்னிப்புக் கேட்டுள்ளார்.

இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அன்றைய நூலக எரிப்புக்காக மன்னிப்புக் கேட்கும் பொறுப்பைக் கொண்டவரா? எனில் ஆம் என்பதே பதிலாகும்.

1981ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரிக்கப்பட்டபோது, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியே நடந்தது.

எனவே அன்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் நடந்த மிகப்பெரியதொரு அழிவுச் செயலுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மன்னிப்புக் கேட்கும் பொறுப்பாண்மைக்குரியவர் என்பது ஏற்புடையது.

ஆனால் யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரிக்கப்பட்டதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மன்னிப்புக் கேட்பது உள்ளார்ந்தமானதாக இருந்தால், இனிமேல் இந்த நாட்டில் இந்த ஆட்சியில் தமிழ் மக்களுக்கு எதிரான எந்த நடவடிக்கைகளும் இடம் பெறக்கூடாது.

அவ்வாறு இடம்பெறுமாக இருந்தால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் வைத்து கேட்ட மன்னிப்பு அர்த்தமற்றது என்பதுடன் தற்போதைய ஆட்சியினர் இப்போது இழைக்கின்ற தவறுகளுக்காக இன்னும் 35 வருடங்களின் பின்னர் இன்னொரு பிரதமர் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியிருக்கும்.

ஆகையால் தமிழ் மக்களுக்கு எந்தவித இடுக்கண்ணும் ஏற்படாதவாறு நல்லாட்சியினர் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இருந்தும் தமிழர் பகுதிகளில் இரவோடு இரவாக புத்தர் சிலையை அமைக்கும் பணி இன்னமும் நடந்து கொண்டிருக்கிறது. சிங்களக் குடியேற்றத்தை தமிழர் பிரதேசங்களில் நிறுவுவதில் படைத்தரப்பு முனைப்புக் காட்டி நிற்கின்றது.

இப்படியான அநியாயங்கள் நடப்பதை முற்றாக நிறுத்தி; தமிழ் மக்களின் உரிமைகளை உரியவாறு வழங்கி இன்றைய அரசு தன்னை நல்லாட்சியாக நிரூபிக்கும் போது, யாழ்ப்பாணப் பொதுநூலக எரிப்பு மட்டுமன்றி இன்னும் பல அழிவுச் செயல்களுக்கான மன்னிப்பாக இவை அமையும் என்பது நம் தாழ்மையான கருத்து.

தமிழ் மக்களிடம் மன்னிப்பு கோருவது என்பது வெறும் வார்த்தைகளால் அமைதல் அன்றி செயலால் ஆக வேண்டும். அதுவே உண்மையான மன்னிப்பு கோரலாகும்.

# அமைச்சர் தலதா அத்துகோரளவிற்கு எதிராக மகிந்த அணியினர் முறைப்பாடு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் டொப் 10 குழுவினர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரளவிற்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

டொப் 10குழுவிலுள்ளநாடாளுமன்ற உறுப்பினரான நிரோசன் பிரேமரத்ன தலைமையில் இந்த முறைப்பாடு நேற்று முற்பகல் செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடு செல்பவர்களுக்காக விசேட காப்புறுதித் திட்டமொன்று 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி அறிமுகம் செய்யப்பட்டது.

உள்நாட்டு காப்புறுதி நிறுவனமொன்று முன்வந்து தொழிலாளர்களுக்காக 60 டொலர் பெறுமதியான காப்புறுதித் திட்ட யோசனையை முன்வைத்த போதிலும் வெளிநாட்டு காப்புறுதி நிறுவனமொன்றை வரவழைத்து 100 டொலர் பெறுமதியான ஆயுட்காப்புறுதியை ஏற்படுத்த அமைச்சர் தலதா அத்துகோரள நடவடிக்கை எடுத்திருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதனூடாக அமைச்சர் 1500 மில்லியன் ரூபாவை தரகுப் பணமாக பெற்றிருப்பதாக ஒன்றிணைந்த எதிர்க் கட்சியின் டொப் 10 குழுவினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களில் மூவருக்கு எதிராக டொப் 10 குழுவினர் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் இது வரை முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் நான்காவது அமைச்சருக்கு எதிராக டொப 10 குழு முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# ரக்னா லங்கா நிறுவனத்தை கலைத்துவிடுவதற்கு அனுமதி

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் கீழ் கடந்த காலங்களில் இயங்கி வந்த ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்தை கலைத்துவிட அமைச்சரவை கொள்கை அளவில் அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த காலத்தில் நிலவிய பாதுகாப்பு சூழ்நிலையின் கீழ் பொருளாதார கேந்திர நிலையங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்களில் பாதுகாப்பிற்காக ஈடுபட்டிருந்த ஆயுதமேந்திய இராணுவத்தினரை அகற்றி நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பு தேவையின் நிமித்தம் அத்தகைய இடங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக குறித்த நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் இன்றைய சமாதான சூழ்நிலையின் கீழ் இத்தகைய பாதுகாப்பு சேவையை முன்னெடுப்பதற்கான தேவை காணப்படவில்லை எனவும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த பாதுகாப்பு நிறுவனம் தற்போது முன்னெடுத்துவரும் பாதுகாப்பு நடவடிக்கைகளை சிவில் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் கரையோர பாதுகாப்பு தொடர்பான கடற்படையினருக்கும் ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# மீள்குடியேற்ற பணிகளுக்காக 14ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு

### அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

வடக்கு மற்றும் கிழக்கு இரண்டு மாகாணங்களிலும் 4464 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

இதேவேளை இக்காலப்பகுதியில் 2473 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளன. மீளகுடியேற்ற நடவடிக்கைக்காக 14 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டு மாகாணங்களிலும் 171 உட்பாதை களும் 29 பாடசாலைகளும் 23 வைத்தியசாலைகளும் 41 முன்பள்ளி பாடசாலைகளும் புனரமைக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் சுவாமிநாதன் சுட்டிக்காட்டினார்.

மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்து மத அலுவல்கள்அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டன.

குழுநிலை விவாதத்தில் பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், வடக்கு கிழக்கு மாகாணங்களில் 65 ஆயிரம் வீடுகளை அமைக்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படும்.

1980 காலப்பகுதியில் வட மாகாணத்திலிருந்து மொத்த தேசிய உற்பத்திக்கு 7 சதவீதமான பங்களிப்பு கிடைக்கப் பெற்றது. எனினும், 2010ம் ஆண்டளவில் இது 3 சதவீதமாக குறைவடைந்தது. 2015ம ஆண்டளவில் இந்த பங்களிப்பை 15 சதவீதம் வரை அதிகரிக்க முடிந்துள்ளது.

இரண்டு மாகாணங்களிலும 9 பாரிய அளவிலான நீர்ப்பாசன செயற்றிட்டங்களும் 45சிறிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங் களும் புனரமைக்கப்படும். இதன் மூலம் கைவிடப்பட்டுள்ள காணிகளில் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்காக விவசாயிகளை ஊக்குவிக்க வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வருடத்தில் இவ்விரு மாகாணங்களில் 11 மாவட்டங்களிலும் வீடமைப்புத் திட்டத்திற்காக 8634 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நகர எல்லைப்பகுதியில் அமைந்துள்ள சிறைச்சாலைகள் ஏனைய இடங்களில் மீளமைக்கப்படும். இதற்கமைய கொழும்பு காலி மாத்தறை பதுளை, மட்டக்களப்பு, திருகோணமலை, நீர்கொழும்பு, கேகாலை ஆகிய பிரதேசங்களில் இந்த சிறைச்சாலைகள் அமைக்கப்பட உள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (இ-5)

# மகிமை வாய்ந்த 12 ஜோதிலிங்க தரிசனம் டிசெ.11 ஆம் திகதி கதிர்காமத்தில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பாரதத்தின் வெவ்வேறு மாநிலங்களிலுள்ள மிகவும் மகிமை வாய்ந்த பன்னிரு ஜோதி லிங்கங்களான குஜராத் மாநிலத்தில் உள்ள சோமநாதர், துவாரகாவிலுள்ள நாகேஸ்வரர், இமயமலை அடிவாரத்திலுள்ள கேதாரநாதர், காசி விஷ்வநாதர், உத்தரப் பிரதேசத்திலுள்ள மகாகாளேஸ்வர், மகாராஸ்டா மாநிலத்தில் கௌதமி நதிக்கரையோரம் வீற்றிருக்கும் திரியம்பகேஸ்வரர், மத்தியப் பிரதேசத்திலுள்ள ஓங்காரேசுவரர், மகாராஸ்ராவிலுள்ள கிருஷ்ணேஸ்வர், ஔரங்காபாத்தற்கு அருகில் அமைந்துள்ள வைத்தியநாதர், பீமாசங்கரர்,ஆந்திரா ஸ்ரீ சைலத்திலுள்ள மல்லிகார்ஜுனர், தமிழ் நாட்டிலுள்ள இராமேஸ்வர் என அனைத்து லிங்கங்களையும் ஒரேயிடத்தில் தரிசிக்கும் பாக்கியம் இலங்கை மக்களுக்குக் கிட்டியுள்ளது. அத்துடன் அனைத்துப் பிரச்சினை களையும் வெல்லும் வகையில் ஆன்மீகக் கண்ணைத் திறக்க வல்ல படவிளக்கக் கண்காட்சி, மனச் சுமையை இறைவனிடம் கொடுப்பதற்கான யாக குண்டம், இறைவனுடன் நெருக்கமான அனுபவத்தைப் பெறுவதற்கான தியானம் போன்றவற்றை மக்கள் முற்றிலும் இலவசமாக அனுபவம் செயயலாம். இந்நிகழ்வானது டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை காலை 9மணி முதல் இரவு 9 மணி வரை கதிர்காமக் கந்தன் ஆலய வளாகத்திலுள்ள ஞானக் கணபதி கோவில் - அன்ன தான மண்டபம் அருகில் இடம் பெறவுள்ளன.

பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வுகள் அனைத்தும் முற்றிலும் இலவசமானது. இன, மத, மொழிப் பாகுபாடின்றி அனைவரும் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு: 011-271 7572, 077-771 2927 என்ற தொலைபேசி இலக்கங்களுடன்தொடர்பு கொள்ளவும். (இ-7-10)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
JSAC
யாழ்.சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
16
மறக்காத மகளிர் தினத்தில் மட்டும் மறுக்கப்படும் பெண் சுதந்திரம் பற்றி பேசாமல், நித்தமும் அதனை உணர்வதற்கான சுதந்திர சூழலை உருவாக்குவோம்.

# சத்திய தரிசனம்



## மனதிற்குள் அணை கட்டுங்கள்

❖ உலகத்தின் தாய், தந்தையரே கடவுள். நம் உடலின் தாய்தந்தையே நம் பெற்றோர், இவ்வுடலைத் தந்த பெற்றோருக்கு நன்றி காட்டும் போது, உலகை நமக்கு அளித்த கட வுளுக்கும், நாம் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம்.

❖ வீணை வைத்திருப்பதால் மட்டுமே ஒருவன் இசைக்கலைஞனாகி விடமுடியாது. அதுபோல, இதயம் கொண்ட அனைவரையும் மனிதன் என்று சொல்ல இயலாது.

❖ இதயம் என்பது கடவுளாகிய அருளின் இருப்பிடம் என்ற சிந்தனையும் உள்ளவனே நிஜமான மனிதன். ஆறு தறிகெட்டுப் பாயும் போது, அணைகட்டி, பயனுடையதாக சேமித்து பலவழிகளில் பயன்பெறுகிறோம். அதேபோல, நமது சிந்தனைகள் கட்டுப்பாடின்றி எங்கெங்கோ செல்லுகின்றன.

❖ “கட்டுப்பாடு” என்ற அணை கட்டி அதன் போக்கை முறைப்படுத்த வேண்டும். அதனால் பயனுள்ள பல நல்ல செயல்களைச் செய்ய முடியும். ஒரு திருமணத்திற்கு போக விரும்பாவிட்டால் நிகழ்ச்சிக்கு செல்வதை ரத்து செய்துவிடலாம்.

❖ சினிமாவுக்கு செல்ல வாய்ப்பில்லாவிட்டால் நாளை பார்த்துக்கொள்ளலாம் என்று தள்ளிப்போட்டு விடலாம். ஆனால், இறுதிப்பயணமான மரணத்தை யாராலும் ஒத்தி போட முடியாது. மரணம் நம்மை எப்போது வேண்டுமானாலும் வந்து நெருங்கலாம். அதற்குள் நீங்கள் செய்ய நினைக்கும் நல்ல செயல்களை செய்ய ஆர்வம் கொள்ளுங்கள்.

# எவர் கிறீன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான கபடிச் சுற்றுப்போட்டி





## சென்.தோமஸ் சம்பியன்



மன்னார் மாவட்டத்திலுள்ள எவர் கிறீன் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் நடத்திய மாபெரும் கபடிச்சுற்றுப் போட்டி 03.12.12016 முதல் 04.12.2016 வரை மன்னார் பொது விளையாட்டரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைதீவு, யாழ்ப்பாணத்தில் இருந்து 15 கழகங்கள் பங்குபற்றின.

இறுதிப்போட்டி 04.12.2016 பருத்தித்துறை-முனை சென். தோமஸ் "ஏ" அணிக்கும் பருத்தித்துறை-முனை சென்.தோமஸ் "பி" அணிக்கும் இடையில் நடைபெற்றது.

ரசிகர்களின் கரகோசங்களுடனும் ஆதரவுகளுடனும் களமிறங்கிய இரு அணிகளும் தாம் சளைத்தவர்கள் அல்ல என்று ஒன்றுக்கொன்று போட்டியிட்டுக் கொண்டிருந்தனர்.

இறுதியாக போட்டி முடிவுக்கு வரும்போது சென். தோமஸ் "ஏ" அணி 20:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. வடக்கின் வல்லவர்கள் சென். தோமஸ் அணிதான் என்று நிரூபித்துக் கொண்டு முதலாமிடத்திற்கான கிண்ணத்தை வெல்ல சென். தோமஸ் "பி" அணி இரண்டாமிடத்திற்கான கிண்ணத்தை வென்றது. இப்போட்டியின் சிறந்த எதிர் ஆக்கிரமிப்பாளராக (குடுப்பாட்டக்காரராக) சென்.தோமஸ் "ஏ" அணியின் தலைவர் யூட் சுலக்சனும் சிறந்த ஆக்கிரமிப்பாளராக அருண்ராஜன் (நந்தன்) தெரிவு செய்யப்பட்டு தங்களுக்குரிய கிண்ணங்களை பெற்றுக்கொண்டனர். இப் போட்டிக்கு பிரதம விருந்தினராக மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (க)



# மூவருக்கு இரட்டை மரண தண்டனை...

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்றைய தினம் தீர்ப்பளித்துள்ளார். ஊர்காவற்றுறை மோதல் தொடர்பான வழக்கின் விசாரணைகள் 15 நாட்களாக நடைபெற்று நிறைவடைந்த நிலையில் நேற்றையதினம் மேல் நீதிமன்றில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

குறித்த வழக்கு தொடர்பான தீர்ப்பில் நீதிபதி மேலும் தெரிவிக்கையில்,

ஊர்காவற்றுறை நாரந்தனைப் பகுதியில் கடந்த 2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி தேர்தல் பரப்புரைக்கு சென்ற போது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 2 பேர் உயிரிழந்ததுடன் 18 பேர் கடும் காயம் மற்றும் சாதாரண காயங்களுக்குள்ளாகியிருந்தனர்.

குறித்த வழக்கு 2006ஆம் ஆண்டு சட்டமா அதிபரால் மேல் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டது. குறித்த சம்பவம் தொடர்பாக செபஸ்ரியன் ரமேஸ் (நெப்போலியன்), நடராஜா மதனராஜா (மதன்), அன்ரன் ஜீவராசா (ஜீவன்), நமசிவாஜம் கருணாகரகுருமூர்த்தி ஆகிய 4 எதிரிகள் அடையாளம் காணப்பட்டு சட்டவிரோத கூட்டம் கூட்டியமை உள்ளிட்ட 47 குற்றச்சாட்டுக்கள் எதிரிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்தன.

இவ் வழக்கு நடைபெற்ற போது வவுனியா நீதிமன்றினால் எதிரிகளுக்கு பிணை வழங்கப்பட்டிருந்தது.

பிணையில் விடுவிக்கப்பட்ட எதிரிகளில் முதலாம்,இரண்டாம் எதிரிகள் ஐரோப்பிய நாட்டில் தலைமறைவாகியுள்ளனர்.

15 ஆண்டுகளுக்கு பின்னர் மீளவும் சட்டமா அதிபர் சார்பில் வழக்கு விசாரணைகள் நவம்பர் மாதம் 21ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. வழக்கு விசாரணையின் போது 1 ஆம் 2ஆம் எதிரிகள் மன்றில் சமுகமளிக்காத காரணத்தால் அவர்களுக்கு பகிரங்க பிடியாணை பிறப்பித்து வழக்கு ஆரம்பிக்கப்பட்டது. இரு தரப்பு சட்டத்தரணிகளின் தொகுப்புரையுடன் விசாரணைகள் நிறைவு பெற்றிருந்தன.

இந்த வழக்கின் மிக முக்கிய சாட்சியாக சிவாஜிலிங்கத்தின் சாட்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் 1,2,3, எதிரிகளின் பெயர்கள் குறிப்பிட்டு குறித்த சம்பவத்தில் இருந்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

அவருடைய சாட்சியத்தை ஒப்புறுதி செய்யும் வகையில் விந்தன் கனகரட்ணம் சாட்சியம் அளித்திருந்தார். அதே போன்று மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச் சந்திரன், நடராஜா ரவிராஜ் ஆகியோர எதிரிகளின் பெயர் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளனர்.

மேலும் இச்சம்பவத்தில் கண் கண்ட சாட்சியான மாவை சேனாதிராஜாவின் மெய்ப்பாதுகாவலர் நடந்தவற்றை ஒப்புறுதி செய்யும் வகையில் சாட்சியம் வழங்கியுள்ளார். அத்துடன் சட்ட வைத்திய அதி காரியினால் பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் சட்ட வைத்திய அறிக்கைகள் மூலம் 2 மரணம் தொடர்பிலும் அது ஏற்பட்ட விதம் தொடர்பிலும் காயங்களின் தன்மை தொடர்பிலும் விளக்கமளித்திருந் தார். வைத்திய பரிசோதனையில் வெட்டுக் காயம், உராய்வுக்காயம், கிழிவுக் காயம் ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதே போன்று சான்றுப் பொருட்களையும் சாட்சிகள் அடையாளம் காட்டியிருந்தனர்.

குறித்த சம்பவம் பாராளுமன்ற தேர்தல் வேட்பாளர்களுக்கு இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அப்பாவி ஆதரவாளர்கள் மரணித்துள்ளார்கள். அரசியல் தொடர்பாக இந்த வழக்கின் தீர்ப்பில் இடம்பெறவில்லை.

இந்த வழக்கு 15 ஆண்டுகள் நடைபெறுகிறது. 2 எதிரிகள் தலைமறைவு, சில சாட்சிகள் மரணமடைந்துள்ளனர். சிலர் முகவரியில் இல்லாமல் போயுள்ளனர். சாட்சிகளின் சுருக்க முறையற்ற விசாரணை மன்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எதிர்த்தரப்பு வாதத்தில் குறித்த எதிரிகள் நால்வரும் சம்பவ இடத்தில் நிற்கவில்லை என எதிர்த் தரப்பு சட்டத்தரணி தெரிவித்து வாதாடினார். ஆனால் அவர்கள் சம்பவ இடத்தில் வேறு எங்கு நின்றிருந்தார்கள் என்பது தொடர்பில் அரச தரப்பு சாட்சிகளை முறியடித்து எண்பிக்க வேண்டும் அதை செய்யவில்லை. எதிரிகளும் ஆஜராகவில்லை. 3 ஆம் எதிரி தொடர்பான அவரது மனைவியின் சாட்சியமும் மன்றினால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

4ஆம் எதிரி சம்பவ இடத்தில் இல்லை என அரச தரப்பு சட்டத் தரணியும் எதிர்த்தரப்பு சட்டத்தரணியும் தெரிவித்திருந்தனர். எதிரியும் தான் இதில் சம்பந்தப்படவில்லை என தெரிவித்திருந்தார். அவருக்கு எதிராக சிவாஜிலிங்கம் ஒருவருடைய சாட்சியம் காணப் பட்டதால் அவருக்கு எதிரான சாட்சியங்கள் வழக்கு தொடுநரால் எண்பிக்கப்படவில்லை. எனவே 47 குற்றச்சாட்டுக்களிலும் இருந்து 4ஆம் எதிரி நிரபராதி என மன்று விடுதலை செய்கிறது.

வழக்கு தொடுநர் சார்பில் சாட்சியங்களை முன்னிறுத்தி செபஸ்ரியன் ரமேஸ் (நெப்போலியன்), நடராஜா மதனராஜா(மதன்), அன்ரன ஜவராசா (ஜீவன்) ஆகியோர் குறித்த சம்பவத்தில் நேரடி தொடர்புபட்டுள்ளார்கள் என்றும் அவர்கள் குற்றவாளி எனவும் அரச சட்டவாதி எண்பித்துள்ளார்.

எனவே சட்ட விரோத கூட்டம் கூட்டிய குற்றத்துக்கு 5 க்கு மேற்பட்டவர்கள் இருக்க வேண்டும். ஆனால் 3 எதிரிகள் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதால் அவர்களை அக் குற்றச்சாட்டில் இருந்து மன்று விடுதலை செய்கிறது.

அடுத்து பொது எண்ணத்துடன் 3 எதிரிகளும் 50 பேருக்கு மேற்பட்டவர்களுடன் இணைந்து இருவரை கொலை செய்த குற்றத்துக்காக தண்டனை சட்டக்கோவையின் படி அவர்களுக்கு இரட்டை மரண தண்டனை வழங்கி மன்று தீர்ப்பளிக்கிறது.

மாவை சேனாதிராசா, சிவாஜிலிங்கம் ஆகியோருக்கு கடும் காயம ஏற்படுத்தியமை, ஏனைய 18 பேருக்கு காயம் ஏற்படுத்தியமை, வாகன சேதங்களை விளைவித்தமை போன்ற குற்றங்களுக்குமாக 20 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கி மன்று தீர்ப்பளிக்கிறது. அத்துடன் தலா ஒரு இலட்சம் தண்டமும் கட்டத்தவறும் பட்சத்தில் 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்படும். ஒவ்வொரு குற்றத்துக்கும் ஒன்றன் பின் ஒன்றாக தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் மன்று தீர்ப்பளிக்கிறது எனத் தெரிவித்தார்.

மேலும் எதிர்த்தரப்பு சட்டத்தரணியிடம் எதிரிகளுக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனை தொடர்பில் நீதிபதி கேட்டபோது அதற்கு பதிலளித்த சர்வதேச ரீதியில் மனித உரிமை தொடர்பான விடயத்தில் பல நாடுகள் கரிசனை கொண்டுள்ளன. இலங்கை அரசும் அது தொடர்பில் பரிசீலித்து வருகிறது. எதிரிகளின் உயிர் வாழும் சுதந்திரத்தை கருத்தில் கொண்டு அவர்களின் மரண தண்டனை தீர்ப்பை தவிர்க்க வேண்டும். அத்துடன் 3ஆம் எதிரியின் உடல் நிலையை கருத்தில் கொண்டும். அவர் 10 வயதில் இருந்து சமூக தலைவர்களால் தவறாக வழிநடத்தப்பட்டவர் என்பதை கருத்தில் கொண்டும் தீர்ப்பை வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

அத்துடன் தலைமறைவாகியுள்ள முதலாம் இரண்டாம் எதிரிகளுக்கு மீண்டும் சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் பகிரங்க பிடியாணை பிறப்பிப்பதுடன் அவர்கள் தொடர்பில் அரசுக்கு சில பரிந்துரைகளை மன்று பரிந்துரை பிறப்பிக்கிறது என தெரிவித்த நீதிபதி அந்த வகையில் நாடு கடந்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தால் மட்டும் போதாது. அதை நடைமுறைப்படுத்த வேண்டும். சர்வதேச பொலிஸாரின் உதவி இருந்தால் போதாது குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும்.

நீதிமன்ற உத்தரவை அமுல்படுத்துவதுடன் தீர்ப்பை நடை முறைப்படுத்த வேண்டும். அந்த வகையில் ஜனாதிபதி இங்கிலாந்து பிரதமருடன் இராஜதந்திர தொடர்பினை ஏற்படுத்தி முதலாம் இரண்டாம் எதிரிகளை நாடு கடத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேணடும் எனவும், வெளி விவகார அமைச்சர் இங்கிலாந்து வெளிவிவகார அமைச்சருடன் தொடர்பினை எடுத்து 2 எதிரிகளையும் நாடு கடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மன்று பரிந்துரை செய்கிறது.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர், நீதி அமைச்சின் செயலாளர்கள் குறித்த எதிரிகளின் நாடு கடத்தும் உத்தரவு தொடர்பான விபரத்தை 3 மாத காலத்தில் அறிவிக்க வேண்டும். அறிவிக்காத பட்சத்தில் குறித்த அதிகாரிகள் விளக்கம் கோரப்படுவார்கள் என நீதிபதி தெரிவித்தார். (இ-9)

## 10ஆவது நபரின்...

செய்யபட்டு ஆரம்ப விசாரணைகள் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நடைபெற்று வருகின்றன.

அதில் 10ஆவது சந்தேகநபர் கே.கே.பி. ராஜ்குமார் கடந்த 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ஆம் திகதி கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இவ் வழக்கு தொடர்பான புலனாய்வு விசாரணைகள் நடைபெற்று வருவதால் விசாரணைகள் முற்றுப்பெறாதன் காரணமாக நீதவான் நீதிமன்றால் குறித்த சந்தேக நபரின் விசாரணைக்காலம் நீடிக்கப்பட்டு ஒருவருடம் பூர்த்தியாகியுள்ளது.

இந்த நிலையில் பிணை சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் சார்பில் அவருடைய விளக்கமறியலை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்க நேற்றைய தினம் அரசதரப்பு சட்டத்தரணியால் மன்றில் அனுமதி கோரப்பட்டது.

அதன்படி ஏற்கெனவே குறித்த வழக்கில் கைதுசெய்யப்பட்ட 9 சந்தேக நபர்களின் விளக்கமறியல் 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. அதே போன்று 10ஆவது சந்தேகநபருக்கும் 3 மாதங்கள் விளக்கமறியல் காலத்தை நீடிப்பதற்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளதுடன் தற்காலிகமாக எதிர்வரும் ஜனவரி மாதம் 4ஆம் திகதி வரை அவரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளதுடன் அன்றைய தினம் மனுவிசாரணையின் போது மேற்படி நபரை ஆஜராக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (செ-9)

## பணம், நகை...

கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 01 மணியளவில் வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் கோவில் அருகாமையில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

இதில் 30 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் தோடு, மோதிரம் உட்பட 2 பவுண் தங்க நகை களவாடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் ஸில் முறையிட்டதனை தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மேலும் கடந்த வாரம் களவு நடந்த வீட்டுக்கு அருகாமையில் உள்ள வீடொன்றிலும் கொள்ளைச் சம்பவம் ஒன்று நடந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-17)

## புலிகளின்...

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பாதுகாப்பு மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் கூறுகையில்,

போர் முடிவடைந்த பின்னர் அரசியல் தேவைக்காகவே இராணுவத்தினர் பயன்படுத்தப்பட்டனர். நாட்டுக்காக சேவையாற்றிய முக்கிய இராணுவ அதிகாரிகள் கூறுறிவிடப்பட்டனர். இதனால் பலர் குடும்பத்தோடு வெளிநாடு சென்று வாழ்ந்து வரும் நிலைமை ஏற்பட்டது. இவ்வாறு நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியவர்கள் அரசின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டனர்.

நாம் முழு இராணுவத்தையும் குறைகூறவில்லை. இந்த இராணுவத்தில் ஒருகுழுவை உருவாக்கிக் கொண்டே கடத்தல், கொலை செய்தல், அச்சுறுத்தல் போன்ற நடவடிக்கைகள் கடந்தகாலங்களில் முன்னெடுக்கப்பட்டன. எனவே, ஒட்டுமொத்த இராணுவத்தின் நன்மதிப்பையும் காக்க வேண்டுமெனில் குறித்த குழுவை கைதுசெய்து சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் அந்தக்குழு தொடர்பான தகவல்களும் அம்பலப்படுத்தப்படவேண்டும்.

அதேவேளை, போர் முடிவுற்றபோது பெருமளவு தங்கம் மீட்கப்பட்டது. புலிகளின் வங்கியிலிருந்து மீட்கப்பட்ட தங்கத்தில் 45 கிலோ கிராம் மாயமாகியுள்ளது என பிரதமர் குறிப்பிட்டிருந்தார். அப்படியானால் கைப்பற்றப்பட்ட தங்கத்துக்கு என்ன நடந்தது? கே.பியின் 600 வங்கிக்கணக்குகளும் 5 கப்பல்களும் அரசுடமையாக்கப்பட்டுள்ளன என்று அரச ஊடகம் செய்தி வெளியிட்டது. அப்போது ஊடகப் பேச்சாளராக இருந்த கெஹலிய ரம்புக்வெல்ல தான் இந்தத் தகவலை வெளியிட்டிருந்தார். எனவே. மேற்படி வங்கிக் கணக்குகளுக்கும், கப்பல்களுக்கும் என்ன நடந்தது? இவை குறித்து மக்களுக்கு அறிவிக்கவேண்டும் என்றும் அனுரகுமார தெரிவித்தார். (செ-11)

## இராணுவத்தை மேலும்...

மீண்டுமொரு யுத்தம் ஏற்படக்கூடும் என்ற அச்சம் மனங்களில் இருந்தால் அல்லது அவ்வாறான எண்ணமொன்று ஏற்படுமாயின் அந்த எண்ணத்தை தடுக்க நாட்டு மக்களுக்கு அடிப்படை வேலைத்திட்டமொன்று இருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

2017ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதம் நேற்றைய தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

தேசிய பாதுகாப்பு தொடர்பாக எதிர்க்கட்சியினரால் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் நாடாளுமன்றத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவர் தனது உரையில்,

நாட்டை முன்னேற்றும் விடயத்தை பொறுத்த வரையில் நட்பு மற்றும் பகைமை சக்திகளை அடையாளம் காண்பதும் தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்குவதும் முக்கியமாகும். நாட்டின் பாதுகாப்பை ஒரு போதும் அற்ப விடயமாக கருதிவிடக்கூடாது. தேசிய பாதுகாப்பை பொறுத்த வரையில் சர்வதேச மட்டத்திலான ஒத்துழைப்பும் மற்றும் நட்புணர்வும் முக்கியமாகும். பிரச்சினையின் பின்னணி நாட்டில் ஏன் யுத்தம் ஏற்பட்டது என்பதை புரிந்துக்கொள்வது அவசியமாகும். எமது நாட்டில் யுத்தமொன்று ஏற்பட்டமைக்கான காரணம், யுத்தம் நிலவிய நிலைமை, மீண்டுமொரு யுத்தம் ஏற்படுவதை தடுத்தல் என்பன பற்றி யுத்தத்தின் நிறைவின் பின்னர் ஆராய்ந்து பொறுப்பை நிறைவேற்றும் கடமை கடந்த ஆட்சியின் போது தவறவிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மீண்டுமொரு யுத்தம் ஏற்பட்டால் என்று உதய கம்மன்பில எம்.பி. கேள்வியொன்றை எழுப்பியிருந்தார். மீண்டும் யுத்தமொன்று ஏற்படக்கூடும் என்ற எண்ணம் எமது மனங்களில் இருந்தால் அல்லது அவ்வாறான எண்ணமொன்று ஏற்படுமாயின் அந்த எண்ணத்தை தடுக்க நாட்டு மக்களுக்கு அடிப்படை வேலைத் திட்டமொன்று இருக்க வேண்டும். புதிய அரசியலமைப்பு பற்றி விமர்சிக்கும் போது, அந்த விடயத்தை அற்பமாக கருதி எதிர்காலத்தில் அதிகாரத்திற்கு வரும் எதிர்பார்ப்பில் குறுகிய அரசியல் நோக்கத்துடன் செயற்பட்டால் அதன் பிரதிபலனை எதிர்காலத்தில் சகலரும் அனுபவிக்க வேண்டிவரும். இன்று நாம் எமது பொறுப்பை நிறைவேற்றாவிட்டால் நாளைய தினம் இருள் சூழ்ந்ததாகி விடும். தேசிய பாதுகாப்பு மற்றும் அரச பாதுகாப்பு தொடர்பில் எந்த விமர்சனம் வந்தாலுமே கூட அரசாங்கம் என்ற வகையில் இராணுவத்தை பலப்படுத்துவோமே தவிர ஒரு போதும் பலவீனப்படுத்தி செயற்படமாட்டோம் என்றார். (செ-11)

## முள்ளிவாய்க்காலில்...

யுடன் நிலத்தை அகழ்ந்து குறித்த பெட்டகங்களை மீட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மீட்கப்பட்ட பெட்டகங்களில் எதுவும் அற்ற நிலையில் காணப்பட்டதாகவும் இந்த பெட்டகத்தை ஏற்கெனவே யாரோ தோண்டி எடுத்து அதிலுள்ளவற்றை களவாடியிருக்கலாமெனவும் சந்தேகிக்கும் பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். மீட்கப்பட்ட பெட்டகங்களை நேற்று மாலை 6.00 மணியளவில் முல்லைத்தீவு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

விடுதலைப்புலிகளால் புதைக்கப்பட்ட பல் வேறு பொருட்கள் இவ்வாறு புதைக்கப்பட்டதும் அவற்றில் சில மீட்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-28ரீ)

## இராணுவத்தை...

வைக்கப்பட்ட கோரிக்கையை தாமே நிராகரித்ததாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிதத்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, யாழ்ப்பாணத்தில் இரண்டு இளைஞர்கள் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி பலியான சம்பவம் தொடர்பில் நாங்கள் மிகவும் கவலையடைந்தோம். சிலவேளை இந்த சம்பவம் தெற்கில் இடம்பெற்றிருந்தால் பாரதூரமாக களேபரம் ஏற்பட்டிருக்கும். இந்த சம்பவத்தின் பின்னர் இராணுவத்தை களமிறக்குவோமா என என்னிடம் கோரினர். எனினும் அதனை நான் நிராகரித்ததோடு பொலிஸாரைப் பயன்படுத்துவோம் என்று கூறினேன். அவ்வாறாக சுமூக சூழ்நிலையை நாம் ஏற்படுத்தியிருந்தோம் என பிரதமர் குறிப்பிட்டார். (செ-11)

## நியதிச் சட்டங்கள்...

வடக்கு மாகாண அடகு பிடிப்போர் நியதி சட்டம், வடக்கு மாகாண கனியவள வரி நியதிசட்டம், வடக்கு மாகாண குற்றப்பணங்கள் மற்றும் தண்டப்பணங்கள் கைமாற்றுவதற்கான நியதிச்சட்டம் ஆகிய மூன்று நியதி சட்டங்களின் முதலாம் வாசிப்பும், வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள நியதிச் சட்டம், வடக்கு மாகாண சுற்றுலாப் பயணத்துறை அதிகாரசபை நியதிசட்டம் ஆகிய இரண்டு நியதி சட்டங்களும் திருத்தங்களுடன்,

நேற்றைய அமர்வில் வாசிப்புக்களுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது அதற்கான சபை அங்கீகாரம் வழங்கப்பட்டது. அங்கீகாரத்தின் பின்னர் வடக்கு மாகாண ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டு நியதி சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட ஏற்பாடாகியுள்ளது. இந்த நியதி சட்டங்களின் மூலம் புதிய சட்டங்கள் குறித்த துறைகளுக்குள் உட்புகுத்தி வரைமுறைகள் இடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

## பாக்.விமானம்...

கைபர் பாக்துன்க்வா மாகாணம் சிட்ரல் பகுதியில் இருந்து தலைநகர் இஸ்லாமாபாத்துக்கு புறப்பட்டது. இதில், 47 பேர் பயணம் செய்தனர். ஆனால், இந்த விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் ரேடர் சிக்னல் துண்டிக்கப்பட்டது.

இதனால் தரைக் கட்டுப்பாட்டு நிலைய அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்தனர். மீண்டும் சிக்னல் கிடைக்கும் என எதிர்பார்த்த அவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. உடனே விமானத்தை தேடும் பணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், காணாமல் போன விமானம் அப்போட்டாபாத் மாவட்டம் ஹவேலியன் அருகில் உள்ள பிப்பிலியன் மலைப் பகுதியில் விழுந்து நொறுங்கியிருப்பதாக தகவல்கள் வெளியாகின.

இதையடுத்து அப்பகுதிக்கு ஹெலிகொப்டர்களுடன் இராணுவ வீரர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். இந் நிலையில் விமானத்தில் பயணம் செய்த 2 குழந்தைகள், 9 பெண்கள் உட்பட 47 பேரும் இறந்ததாக பாகிஸ்தான் மத்திய அரசு அறிவித்துள்ளது. (செ-11)

## வடக்கில்...

இதற்கமைய நேற்றைய தினம் பாதுகாப்பு அமைச்சிற்கான ஒதுக்கீடு மீதான விவாதத்தில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவும் கலந்துகொண்டார்.

அதில் அவர் உரையாற்றும் போது,

வடக்கில் எத்தனை இராணுவம் உள்ளது என்றும், கிழக்கில் எத்தனை இராணுவம் இருக்க வேண்டும் என்பது பற்றியும் கருத்தைத் தெரிவித்துக் கொள்வதற்கு எவருக்கும் உரிமையில்லை. வடக்கிலும், கிழக்கிலும் எத்தனை இராணுவத்தினர் இருக்க வேண்டும் என்பதை பாதுகாப்புச் சபையே தீர்மானிக்கும். யுத்தம் முடிவடைந்த பின்னர் 12 ஆயிரம் முன்னாள் போராளிகள் சரணடைந்தனர். பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா கூறியதைப் போன்று முன்னாள் போராளிகள் அனைவரையும் முன்னாள் அரசாங்கம் சரிவர புனர்வாழ்வுக்கு உட்படுத்தவில்லை. ஐ.ஓ.எம் போன்ற சர்வதேச அமைப்புக்களை சம்பந்தப்படுத்தி என்ன நடந்தது என்று முறையாக தெரிவிக்கப்படவில்லை. எவ்வாறாயினும் அத்தனை முன்னாள் போராளிகளையும் நாம் சமூகமயப்படுத்தினோம். ஆனால் இன்று அவர்கள் எங்கு இருக்கின்றார்கள்? என்ன செய்கின்றார்கள் என்பது குறித்து தகவல் இல்லை. இவ்வாறான சூழ்நிலை இருக்கும்போது வடக்கிலிருந்து, எவ்வாறு இராணுவத்தினரை வெளியேற்றுவது? எனவே நமது நாட்டின் பாதுகாப்பு உச்ச அளவில் இருப்பதற்கு இராணுவ பாதுகாப்பு எங்கும் அவசியமாகும். அதனை எப்போதும் குறைக்க முடியாது என அவர் குறிப்பிட்டார். (செ-11)

## செங்கற்களால் 80 வீத வீடுகள்

(கொழும்பு)

வடக்கில் அமைக்கப்படவுள்ள வீட்டுத் திட்டத்தில் 80 வீதமான வீடுகளை செங்கற்களால் அமைக்க உத்தேசித்துள்ளோம். இதன்படி வீட்டுத்திட்ட இழுபறி தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர் ஆகியோருடன் மாநாடொன்றை நடத்தி இறுதி தீர்மானம் எடுக்கத் தயாராக உள்ளோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வடபகுதி மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் எந்தவிதமான பிரச்சினையும் அரசாங்கத்துக்கு இல்லையென்றும் அவர் கூறினார்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத விவகார அமைச்சு மீதான ஒதுக்கீடுகள் குறித்த குழுநிலை விவாதம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இவ்விவாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் உரையாற்றிய பின்னர், அமைச்சர் சுவாமிநாதனுக்கும், கூட்டமைப்பினருக்கும் இடையில் கடுமையான வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதன்போது குறுக்கிட்டுப் பதிலளிக்கும்போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

பிரதமரின் கருத்தைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும் கேள்விகளை முன்வைத்தார். இதனால் சபையில் சில நிமிடங்கள் கடுமையான கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

பிரதமர் கூறுகையில், யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் தற்பொழுது சமாதான சூழலில் சுதந்திரமாக நடமாடக்கூடியதாகவுள்ளது. அது மாத்திரமன்றி பாராளுமன்றத்திலும் அமைச்சர்களுக்கு எதிராக தர்க்கத்தில் ஈடுபட முடியும். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் அமைச்சர் ஒருவருக்கு எதிராக எவராவது கூச்சலிட்டால் அவர் பாராளுமன்றத்தில் இருக்கமாட்டார். ரவிராஜுக்கு என்ன நடந்தது? ஆனால் இந்த நிலைமை தற்பொழுது இல்லை என்றார்.

இரு தரப்புக்களையும் சந்தித்து பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தயாராக இருப்பதுடன், வடக்கின் அபிவிருத்திக்கு கூடுதல் பணத்தை வழங்கவும் தீர்மானித்துள்ளோம் என பிரதமர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## குளத்து நீரில்...

இந்துக் கல்லூரியில் கல்வி கற்று வந்த கவிப்பிரியா, பாடசாலை விடுமுறையை அடுத்து வீடு சென்றுள்ளார்.

அவரும் அவரது சகோதரியும் சகோரியின் கணவரும் (பதிவுத் திருமணம் செய்யப்படவில்லை) மற்றும் 3 சிறுவர்களுமாக கிளிநொச்சி ஆணைவிழுந்தான் குளத்திற்கு நீராடச் சென்றுள்ளனர்.

குளத்தில் காணப்பட்ட சிறிய படகு ஒன்றில் ஏறிய இரு சகோதரிகளும் மூத்த சகோதரியின் கணவரும் சிறுவர்களை கரையில் இருத்தி விட்டு குளத்தை சுற்றி பார்க்க சென்றுள்ளனர்.

குளத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு மீளவும் கரைக்கு திரும்பிய படகில் இருந்து சகோதரிகள் இருவரும் இறங்க கரையிலிருந்த 3 சிறுவர்களும் படகில் ஏறியுள்ளனர்.

படகு மீளவும் மூத்த சகோதரியின் கணவன் மற்றும் சிறுவர்களுடன் குளத்தை சுற்றிப் பார்க்க புறப்பட்டு சென்றுள்ளது.

அவ் வேளையில் சகோதரிகள் இருவரும் குளத்தில் நீராடத் தொடங்கியுள்ளனர்.

இதன்போதே துரதிஷ்டவசமாக இவ் இருவரும் சேற்றில் புதையுண்டு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

குளத்தை சுற்றிப் பார்க்க சென்ற படகு திரும்பிய பிறகே சகோதரிகள் ஆற்றில் மூழ்கியமை கணவருக்கு தெரியவந்த நிலையில் அவரது மீட்பு முயற்சியும் பலனளித்திருக்கவில்லை.

தொடர்ந்து சுழியோடிகள் உதவியுடன் சகோதரிகள் இருவரினதும் சடலங்கள் மீட்கப்பட்டு அக்கராயன் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் மரண விசாரணைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அக்கராயன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-312,60,15,281)

## பரீட்சை வழிகாட்டி வெளிவந்துவிட்டது

திரு.ஆ.சத்தியமூர்த்தியினால் தொகுக்கப்பட்ட திறந்த/மட்டுப் படுத்தப்பட்ட கணக்காளர் போட்டிப் பரீட்சை, அதிபர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள் தரம் III அதி சிறப்பு சகல தரங்களையும் சேர்ந்த அரச முகாமைத்துவ உதவியாளர்கள் அனைவருக்கும் மிகத்துல்லியமாக விடையளித்து சிறந்த பெறு பேறுகளைப் பெற நிதி ஒழுங்கு (நிதிப் பிரமாணம்-FR) அத்தியாய இலக்கங்களுடன் கடந்த கால வினா விடைகளையும் உள்ளடக்கி வெளியிடப்பட்டுள்ளது. (6872)

பூபாலசிங்கம், அன்னைபுத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக தொடர்புகளுக்கு : 0771676457

## வாடகைக்கு

யாழ்.வைத்தியசாலை வீதியில் இரு கடைகளும், யாழ்.மின்சார நிலைய வீதியில் இரு கடைகளும் யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடன் கூடிய வீடுகள் இரண்டும் உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
0777232535

(C-6599)


## வடக்கில்...

அமைச்சருமான மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கிலிருந்து இராணுவத்தினரை வெளியேற்றவே முடியாது என்று குறிப்பிட்ட அவர், வடக்கிலும், கிழக்கிலும் எவ்வளவு படையினர் இருக்க வேண்டும என்பதை பாதுகாப்புச சபை தவிர எவராலும் தீர்மானிக்க முடியாது என்றும் கூறினார்.

2017ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெற்று வருகின்றது.

23ஆம் பக்கம் பார்க்க....


## BEACON - இன்ஸ்ரிரியூட்

ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம்
(வெலிங்டன் தியேட்டர்)

**GR 6 TO O/L 2017**

சகல பாடங்களும் குழு வகுப்பாக ஆரம்பமாகின்றது.

**உங்கள் ஆசிரியர்கள்**

திரு.சண்முகதேவன்,
K.S.முத்துலிங்கம், திரு.கண்ணன்
மற்றும் பிரபலங்கள்

ஆரம்பம் 10.12.2016
**3.00 pm**

(C-6581)

## கோலாகல திறப்பு விழா அழைப்பிதழ்

ஆஸ்பத்திரி பின் வீதி ஞானம்ஸ் ஹோட்டலுக்கு அருகில் இயங்கிய யாழ் புத்தகசாலை

09.12.2016 நாளை காலை 7.30 மணியளவில் புதிய முகவரியில் திறந்து வைக்கப்படுகின்றது.

திறப்புவிழாவை முன்னிட்டு விசேட விலைக்கழிவில் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்

புத்தகங்களுக்கு : 10% - 20 %, காகிதாதிகள், எழுதுபொருட்கள், அப்பியாசக் கொப்பிகள் : 10 % - 40 %

தொடர்புகளுக்கு :- யாழ் புத்தகசாலை
இல.22 A, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(வண்ணை பண்ணை சிவன் கோவிலுக்கு முன்பாக 25 யார் தூரத்தில்.)
021 221 7874 / 021 492 7568

கிளை - யாழ் புத்தகசாலை
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
(கனகபுரம் விளையாட்டரங்குச் சந்தி
021 492 7625

(C-6603)

## அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK-550/=Kg*
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு: 0768226243

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
- நெல்லியடி • வல்வெட்டித்துறை

V2 TRAVELS (C-6600)

## YOGIS

INSTITUTE OF BEAUTY THERAPY
HAIR DRESSING & HOME SCIENCE (Pvt) Ltd

பண்டிகைக்கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புக்கள்
3 நாள்கள் மட்டும்

2016 December 10th, 11th, 12th திகதிகளில் முற்பகல் 10 மணிமுதல் ஆரம்பம். இலகுவாகவும், வித்தியாசமாகவும் விரைவாகவும் செய்யக்கூடிய 5 கேக் வகைகள், 5 பேஸ்ரி வகைகள் (Pastries), 5 Sweets வகைகள் வகுப்புக்களில் சேரவிரும்புவோர் உடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்.

75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
077 716 4923, 021 222 2796

(C-6598)

## Xmas அதிரடி விலைக் கழிவில்



### LED TV'S

| | |
|---|---|
| 01- SAMSUNG 32" | 31900/= |
| 02- HISENCE 32" | 24900/= |
| 03- SONY 40" | 59999/= |
| 04- HISENCE 24" | 17900/= |
| 05- TCL 32" | 22400/= |
| 06- PANASONIC 32" | 32500/= |

WARRANTY 3 YEARS

10-35% OFF

OPEN TIME
08.00 AM - 08.00 PM
365 DAYS

INNOVEX WASHING MACHINE
FULLY AUTOMATIC



WARRANTY 5 YEARS

34500/=

SAMSUNG R19
REFRIGERATOR



WARRANTY 10 YEARS

Price 34900/=

SONY | SAMSUNG | LG | Hisense | TCL

KINGS ELECTRONICS [PVT] LTD
(வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)

021-4546699 | Mykings.lk | 12A, Point Petro Road, Jaffna.

(C-6607)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.